5

வைத்தியமுறை அட்டவணை

நோய் நிதானம்

349

349

திரு. எஸ். ஆர். பஞ்சாட்சரம்,

சிவதாபுரம்,

சேலம். 1/உ.

"வைத்திய முறை அட்டவணை கட்டு-4"

ரோக நிதானம். +5"

Verified & compared
20/2/64
Total typed pages 61
Sundaramurthy
20/2/64

349

தேதி:- 2.11.63.
ஓலைச்சுவடியின் பெயர்: "வைத்திய முறை அட்டவணை கட்டு-4"

ரோகநிதானம்

உரிமையாளரின் பெயர்:- எஸ்.ஆர்.பஞ்சாட்சரம்.
இடம்: சிவதாபுரம், சேலம்.

*****

வைத்தியமுறைஅட்டவணை

1. லங்கணவிதம்:-

நீயே கௌதிசாரக் காற்றீர் சூரி நிறை கிழவன் வாலரொடுஉன்ன ரோகி
ஓயாத வெகு ரோகி ரோகத்தாலே உயர்ந்திடு சாதக ரோகி நேத்திர ரோகி
மாயாத வியபாண்டு காமாலை யுள்ளோன் வலிய ரோகக் காரரிவர்களுக்கு
நோயாலல் லங்கணம் வர்சிக்க வேண்டாம் நூல் தெரிந்த முனிவரிது நோக்கிச் சொன்னர்.

2. சொன்ன சுரமல்லா மலின்னமுண்டு சுரத்திலே விஷ சுரமாகிக சுரர்தான்
வன்ன பல சுரந் தோன்ற முன்னே சொன்ன வருஷந் தாண்டி வந்து ஜுமுந் தாதில்
மன்று மஞ்சி சுரம் ரெத்த சுரங் காமாலை வந்த நஞ்சுச் சுரமென்று உயித்தியாலே
யின்னம் வருஞ் சுரங் கண்டு கசாயங் கற்கு மிடு குளிகையால் தலைப்பார் பெரியோர் தாமே

3. சுரத்துக்கு கசாயம்:-

தோடையிலை பேய்ப்புடல முந்தக் காசு அலங்கு சிறு முள்ளியுடன் தோராமுர்தம்
பாடியதோர் பற்படாகஞ் சீந்தி சுக்கு பரிவான காஞ்சொரியும் பழந்தராயும்
நாடு தனில் நிலவேம்பு நன்றும்ச் சேர்த்த நாலொன்றய் காய்ந்த நீர் நல்கத் தீருஞ்
சீத சுரம் நாவறட்சி பித்த வாய்வு சேர விடும் பரங்கியாதி செப்பிலேமே.

4. ஆடா தோடை பேய்ப்புடலுமான பற்படாகஞ் சீந்தி சொரி
நீடா கண்டங் கத்திரியும் நில வேம்புடனே நிறை சுக்கு
வாடா வடித்துத் தேன் கலந்து வடித்துக் கலக்கிக் கொடுப்பீராய்க்
கோடா கோடி சுரம் விட்டுக் ஒளிருந் தாக மிகப் போமே.

Incomplete

5. நிலவேம்பு பற்படாகஞ் சுக்குக் காரம் நேரொக்கச் சிறுதேக்குச் செங்கழுநீர்க் கோஷ்டம்
நலமுடைய திப்பிலி யாடாதோடை யீர்க்கு நல்லுகக் காஞ்சொரி முக்கஞ் சீந்தி
பலமுடனே கசாயமிட மாதே கேளாய் (மேல் முடிவுக்கு அடுத்த ஏடு இல்லை)

(வேறு)

* முதல் ஏடு இல்லை நூல் தொடக்கம் 2-வது ஏட்டிலேயே உள்ளது.

1. தரணியுள் பண்டிதரே வியாதிக் கேட்டுத் தானங்களுண்டது தானேதோ வென்னில்
திரணியதோர் நாடி கண்கள் சொரூபஞ் சத்தந் திரேகத்திலுள்ப் பரிசம் வன்மம் நாக்
மிரணமல மூத்திரங்களிவையோ ரெட்டும் விதம் படவே தான் பார்த்துக் குறிப்புக் கண்டு
பரணி பின்னுள் மகன் மூத்தோரிவர் பாதம் பண்புடனே போத்திப் பண்டிதஞ் செய்வீரே.

2. செய்கின்ற நாடி பெருவிரற்கு மேலே திருந்திய மூன்றங் குலத்தினிடமே தாகித்
தைகின்ற கோதம்பை யரிசி போலே சர்வமும் வியாபித்திருக்குந் தானங் கூறில்
கையுயுங் காலடியம் நாடி நிற்கும் கன்னியருக்கிடப் புறமாங் கணவர்க்காங்சே
மெய்கின்ற வலப் புறமாம் வாத நாடி வந்த முதலே நடக்கும் வகை சொல்லோமே.

3. சொல்கின்ற பயித்திய நாடி பின்னே தோன்றும் சிலேற்பன நாடி நடக்குமப்பா
லல்கின்ற சுந்தல் பின்னே தாண்டி நின்றுலாச்சரிய நாடி யென்றறிந்து கொள்க

மல்கின்ற வாதத்திலுடியாங்கே வக்கிற கெதியாய நடக்குந் தவளை போலே
நல்கின்ற மாடையட்டை தொட்டிலாட்டல் நல்லா யிப்படி நாடி நடக்குந் தானே.

4. நடக்கும் பயித்தியஞ் சவலைப் பிள்ளை போல நடன மயிலன்னம் போற்ச போதம் போலுந்
திடக்குஞ் சிலேட்டுமநாடி மீன் கொத்தி போல் செயிமாடை பூர்க்குருவி கோழி போலே
யடக்குந் திறமாய் நடக்கு மயிலே சொன்னேன் அவ்வளவே வாத பயித்தியத்தின் தொந்தம்
மடக்கின்ற காடை போல் நடந்த பின்னே மக்குளுயென நடக்கு மென்று மதித்துக் கூறே.

5. கூறுகின்ற வாத சிலேஷ்டும மாகுல் கோழியட்டை யென நடக்கும்
சீரனமாம் நாடி தாவுகின்ற மதகரி தீபனத்து நாடி தாங்குகின்ற காக்கை நடை யென்னச் சொல்வோம்
தேரும் ஸ்திரீ சங்கமமு மிப்படியாய் நின்று தீபனமாய் நடக்கு மலப்பெந்த நாடி
ஊரு மன்னம் போல் நடக்குஞ் சன்னி பாதத் தியர் நாடி விதிதனையு முறைப்பேனென்றே.

6. உரைத்த விறலின் கட்டுக்குள்ளே மூக்குறு லாவுதல் போல்க் குடிலமாய்ச் சிதமாயும்
விரைத்தெழுந்த மந்தமாய்ச் சூக்ஷ்சமாயு மிக்க சவலைப் பிள்ளை போலவுந்தான்
புரைத்த குமர வகையுஞ் சன்னி பாதம் பொற்றுப்பரவிந்த மலரே போலுங்
கொங்கை முரைத்தெழு சங்கின் நிகர் கந்தரத்து மின்னே முறைமையதாம் நாடியறு முனிவர் தாமே.

7. முனிகின்ற தேக பரிசத்தைப் பார்க்கில் முந்திய வாதமுடையனுக்குச் சரீரஞ் சத்தே
யனைகின்ற உஷ்ணமாம் பயித்தியத் தாக்கு அதிக முண்டல்லது சீதளமாய் நிற்கும்
சுனைகின்ற சிலேட்டுமத் தான் குளுந்த மேனி தொந்த குணம் சால் விதமாய்த் தோன்றிக் காணும்
பனைகின்ற வாதமேய் தான் கறுத்தே நிற்கும் பயித்திய ரோகிக்கு மஞ்சள் சிகப்பதாமே.

8. தாமே சிலேட்டும ரோகி வெளுத்த மேனி தந்த நொந்த ரோகிக்கு விதமாய் நிற்கும்
மாமயிலே சத்தமது அறிய வேண்டில் வாதமுடையான் சமமாய் வார்த்தை பேசு
மீமமுள்ள பயித்தியத் தானுரக்க கூவும் மியம்பிடு சேத்தும ரோகிக் கீன சத்தமுமுரைத்தோ
மென்ன வுரை தொந்தரோகி நால் விதமாய் மொழிந்த சத்தம் நயந்து காணே.

9. காணுகின்ற நேத்திரந்தான் வாதரோகி கன் கறுப்பாய் நோவுண்டாய்த் தண்ணீர் பாயும்
பூணுகின்ற பயித்தியந்தான் மஞ்சள் போலிருக்குஞ் சிவப்புண்டாய்ப் போகவே தோன்றும்
பேணுகின்ற சேத்துமத்து ரோகி கண்கள் பீளை கட்டி வெளுத்திருக்குஞ் சன்னி பாத
மாறுகின்ற சிவப்புடைத்தாய் வந்து வங்கில் வந்திடுங் காமாலை யென வகுத்துச் சொல்வோம்

10. வந்த மல மூத்திரங்கள் வாத ரோகி மலங் கட்டுப் பட்டிருக்குங் கறுத்துத் தோன்றுஞ்
சிந்து பயித்தியத் தான்மலமு மஞ்சள் சிவப்பாத லாயிருக்குஞ் சிலேட்டும ரோகி
தொந்தமுடன் வெளுத்திருக்கு மாக் கட்டாகத் தொந்தமது நால் விதமாய்த் தோன்றி காணும்
விந்தமுள்ள வாதக்கான் சிறுநீர் தானும் வெளுத்திருக்கும் பயித்தியத்தின் விதஞ் சொல்வோமே.

11. விதமுள்ள பயித்தியத்தான் சிறுநீர் மஞ்சள் விதமுடைத்தா யிருக்கு மல்லாற் சிவந்த குழுந்
துதையுள்ள சிலேட்டுமத் தான்றப நீர்த் தாரை கலக்குந் தொந்தமும் நால் விதமாய்த் தோன்றும்
சுதையுட நாக்கு லட்சணந்தான் வாதந் தோன்றலுருவே தடித்து முடல் போல் சிவந்து குழுங்
கதையல்லச் சிவந்தாலுங் கறுத்தாலுந் தான் கனமுள்ள பயித்தியந்தான் கனக்குந் தானே.

12. சுர லட்சணம் :-

தானமுடன் வாய் வெளுத்த நீருண்டார்சில் தந்திடு சேத்தும மாகு மீரமற்றே
யான முள்ளம் போலிருந்த கஜத்தாற் சின்னி பாத மென்னும் நால் விதமாய்த் தொந்த மென்றும்
மான விந்த வகை யெட்டு மறிந்த பேரே அவனிதனிற் பண்டிதராமம்மை கோலா ற்
ஞீன மில்லாள் பத மிறைஞ்சும் பெரியோர்க் கன்றி யெய்தாது யாவருக்கு மியம்புங் காலே.

13. காலமதில் சீரணமும் நால் வகை யுண்டாமெங் கதிர் சேஉடமொடு விஉடி ரசந்தான்
ஒல்மென வயற்றேதல் பிராந்தி வாந்தி யுப்பிசத்மா முட்ல் நோதல் வயறெரிச்சல்
சாலவே தா பமொன்டு விஉடரந்தான சாற்பவரி நால் விதமாய்க் தன்மை கூறில்
மாலை விழியாய் விரமம் புளிக் தேப்பெய்த மடு தா மம் சுவாசத்தை யதிகரிக்கும்.

14. அரிதான சுகரோகந் தனக்கே யெல்லா மரசனலாயி மதன் மழுமவன் தனக்குச்
சரியாகு மிந பானமுப்புரங்கள் தன்னைத் தழல் செய்ய வெகு காலஞ் சமர் செய் போதில்
விரிவான தஉடச்சகன் வாசலின் பால் நின் மிக்க நகை புரிய நுதல் விலோசனத் தில்
எரி காலனெனப் பிறந்த சுரத்தின் பேத மியானறிந்தபடி தமிழல்ரா லியம்புவேனே.

15. இயம்பு சுர பேதமது எழுவகை தான் யியல் வாத சுரம் பித்த சுரமிதென்ற
வியன் பெறவே சிலேஉட்டுமத்தின் சுரமி தென்ற விரிவான பூத சுர வித மீதென் றும்
பயம்புகுதஞ் சீரணமாஞ் சுரத்திஞேடு பகரும். பிகாத சுரம் பலவு மொன்டுய்
நயம் பொருந்தும் தொந்த சுரமெனவே யேழிமை மிக. வென முன்னோர் நவில் வரன்றே.

16. நவில் விசன முகங் கருசி முகமுடம்பு நல்ல வித ஙீனமாய் முலையு மார்பும்
கவி நோகுந் தலை விரும மித்திருந்தோர் நேரங். கனத்தூடலங் குருந்த கள்ளத் வன தவனமாகும்
அவியு மலமிதக் யிருந்த போதே யத வாத சுர குணமென்ற றிவாய் நல்ல
குவியமாவிந்த மலர் சயில மியானைக் கோடெனவே வளர்ந் தெழுந்த கொங்கை மாதே.

17. மாதே நித்திரை மிகுதி தாஉண்டாகும் வயறு கழிந்திடு மலநீர் சிவந்திறங்கும்
மாதேகமர காணும் வாய் கசப்பாம் வடு மனலாய்ப் பிறமிக்கும் தலையுஞ் சுத்தம்
போதே வேர்வையு முளதாய் வாயுலர்ந்து புகல் வாந்தி விக்கலது பொருமிக்கண் ஊ
மீதாக முடிக் கொண்டிருக்குங் கண்டாய் மிக்க பயித்திய சுரத்தின் விதமிதாமே.

18. விதமா நாவெளுக்கு மார்பு நோகு மேலிருமலுடனே உப்பிசமுமாகும்
மிதமான நாவில் ருசி யில்லாதிருக்கு மினிய முரடிய விழும் விக்கல் தோன்றும்
திதமேவ மார்பு நொந்தறை ஙளாவுந் திகைத்தாப் போலே யிருக்குந் திடுக் கிட்டெங்கு
மதி மேவு முகத்த மின்னே சிலேஉட்டுமத்தில் வந்து தோன்றிய சுரத்தின் வகையிதாமே

19. வகையான வுடல் நொந்துப் பிசமுமாகில் வரும் பிரலாபத்துடனே நெஞ்சு நோகும்
மிகையான மலஞ் சிறுநீர் வெளுறிப் போகும் மிக்க முகங் கறுத்திருக்கும் பொய்யுஞ் சொல்லும்
நகையான் நித்திரையும் வேர்வையோடு தோன்றிலிவை வாத பித்த தொந்தமென்றே
முகையாருங் கமல முகமாதே கேளாய் மொழிந்தனர் முன்னா லுணர்ந்த முனிவர் தாமே.

20. முனிவான வுடல் நொந்துப் பிசமுமாகி முகம் வெளுறி நெஞ்சு நொந்து மயிர்க் கூர்ச் சிட்டு
யினிதார்கத் திகைச்சாற் போல் சாட்டியமதா யிது வாத சிலேஉட்டும மென்றியம்பலாகும்
பனி வேர்வையுடன் ஏங்கப் பிறலாபிக்கப் பருத்த மயிர் சிலுக்க நொந்து நெஞ்சு தாறுந்
முனிவான வுடம் பழத்தப் பித்தக்தோருந் தெரிந்த சிலேஉட்டும சுரத்தின் தொந்தந் தானே.

21. <u>சுரத்துக்கு நாள்ப் பிரமாணம்:-</u>

தானே பேய் கொண்டாற் போலிருந்து பேசும் தனை விழி பருத்திருக்கும் பொய்யுஞ் சொல்லும்
தேனே தீவிரமாகப் பிறலாபிக்கச் செல்ல சனத்தின் பேரில் வாஞ்சையாகு
மூனே தான் மயிர் சிலிர்த்துச் சிரிக்கும் பாடு முற்று ஐக்சம் வருமிவை தானுண் டானுக்கால்
வானேசம் பூத சுரமீதே யென்று வகுத்தனர் நான் மறையுணர்ந்த வல்லோர் தாமே.

22. வல்லதொரு சுரங் காய்ச்சரல் நெருங்க வரும் பிறலாபத்துடனே நெஞ்சு நோகும்
பொல்லாத விக்கலுடன் வாந்தியாகும் போதவே பரிமளிக்கு மிடுப்புங் காலும்
மெல்லவே நொந்திருக்கு மிக் குளமுண்டாகில் மிக்க வசீரண சுரத்தின் விதமிதாமே
சொல்லவே ஊர வழி நடந்திளைத்தார் சிரம் போலும் பிதாக சுரஞ் செப்புங் காலே.

23. செப்பியதோர் தொந்த சீரம் விதத்தைக் கேளும் தேக நிறஞ் சாயலது கண்கள் நாக்கு
ஒப்பில்லாச் சற்றமதுவாய் நிறந்தான் உடலிலே உஷ்ணமுங் குளுமை தோன்றும்
யிப்படியே மலஞ் சிறுநீர் குணங்களெட்டு மிருக்குமேயால் விதமாயிருந்ததானால்
ஒப்பில்லாத் தொந்த சுரமீதே யென்று சொல்லுவார் பெரியோர்கள் சொல்லுவாரே.

24. வாராத வாத சுரந் தனக்கு நாளேழ் வந்த பயித்திய சுரத்துக் காலு நாளாம்
சேராத சிலேஷ்டும சுரந் தனக்கு நாலுஞ் சேர்ந்த நவஞ் தொந்த சுரந் திவசஞ் செப்பில்
காராரும் விழி மடவாய் பத்து நாளுங் குறித்து நீ சொலக் கட்ட வதினி மேலந்தப்
பாராத பத்திய லக்ஷண மிருக்கும் படியதனைச் சொல்லுகின்றேன் பாரின் மீதே.

<u>லங்கண விதம்:-</u>

25. பார்தனி லவங்கணம் வற் சிக்க வேண்டில் பகர் வாத தாதுவு காறுக்குத் தானே
ஒரா மலத்தினிலுப வாசம் பண்ண உத்தர பயித்திய தாதுவு காறலுக்குத் தானே
நேரமுடனல் கஞ்சி யெனச் சொல்லு நீயே.

<u>சுவாச காசத்துக்கு ஊசலாதி லேகியம்:-</u>

ஊஞ்சல் பட்டை நான்கு ~~நல்லா~~ முத்தின பட்டையாக ஐம்பது பலம் பட்டை இடித்துப் பஞ்சு பறக்க யிடித்து ஒரு பானையிலே போட்டு நாலு மரக்கால் தண்ணீர் விட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சி இறக்கி ஆறின பிறகு கோதைப் பிழிந்து எடுத்துப் போட்டுக் கசாயத்தி வடி கொண்டு வேறே சட்டியிலே விட்டுப் பழைய கருப்புட்டி பதினைந்து பலம் போட்டு அடுப்பிலே வைத்து பாகு படுத்தி இதில் கடைத் திரவியம் தம்புராஷ்ட்டம் அக்கிலாகாரம், கடுக்காய், தானிக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு, கண்டங்கத்திரி, வேர்ச் சூரணம் யின்னும் வேர்ச் சூரணம் நிலையாவாரை வேர்ச் சூரணம் இது வகைக்கு பலம். 1½ இதுகளெல்லாம் சூரணம் பண்ணி வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொண்டு ~~பெருங்~~ பெருங்காயம் விராகனிடை. உ வெண்காரம் விராகனிடை 6 இது பொடி பண்ணி வெண் காரங் கரண்டியிலே போட்டு யெரிச்சுக் கூடப் போட்டு முன்பாகிலே போட்டு வெள்ளை வெள்காரம் உரித்து முழுமனே கூடப் போட்டு லேகியம் நன்றாய் வெந்த பிறகு எடுத்துக் கலசத்திலே வைத்து வேடு கட்டி வைத்துக் கொண்டு தினம் புன்னைக் காயளவு தின்னவும். பிறகே வெந்நீருங் காப்பிடவும். இதிலே சந்தேக ரோகந் தீருகிறது மெசுவா யிருந்தால் சிறுநீரிலே கொள்ளவும். இதில் தீரும் வியாதி சுவாச காசம், காச சுவாசம், ஈளை முக்கு நீர்ப் பாய்ச்சல் பாங்கான அசீரணங்கள் சன்னி பாதங் கலமுடைய மாறல் முதற் சுரங்களெல்லாங் கப்பிட்டு முறையிட்டுக் குலைந்து போமே.

<u>தெற்பிணி யானவளுக்குச் சுரம் வந்தால் கசாயம்:-</u>

சந்தனஞ் சீந்தி தானுந் தக்கதோர் முத்தக்காசு அந்தமாஞ் சிறுகாஞ்சொறி

யடவுடன் கஷாயம் வைத்தால் முந்திய வாத மய்யம் முடுகிய சுரங்களெல்லாம்
சந்தத் மோடு மென்று சங்கரரருளிச் செய்தார்.

2. திப்பிலி கண்டங் கத்திரியுந் திகழும் வட்டத் திருப்பியுடன்
பற்படாகஞ் சந்தி யிருவேலி பகரு மிலாமிச்சஞ் சுக்கிவை தான்
செப்பமாய்க் கசாயமிட்டு மாதே கேளாய் சேற்றும பித்த சுரந் தானுந்
தப்புவதெப்படித் தானென்று தயங்கியோடுந் தார் குழலே.

3. நன்னாரி கெற்பு சுரத்துக்கு:-

நன்னாரி மாகாளிக் கிழங்கு தானும் நலமான முத்தமுடன் வெட்டி வேரும்
சொன்னா மதிமதுரஞ் சுக்குச் சீந்தி துலங்கிய தோர் நிலப்பனை சந்தனமுங் கூட்டி
அன்னுளிற் கசாய மிட மாதே கேளாய் அருவையற்றுக் கெற்ப சுர மகலுங் கண்டாய்
பன்னு மொழியார்கள் பிள்ளைப் பெத்த படி யறையிற் சுரங்களுக்கே புகருவோமே.

அறைசுரத்துக்குக் கசாயம்:-

4. சிற்றாமுட்டி வெட்பாலைப் பட்டை சீந்தில் திகழெருக்கன் வேர் சுக்கு நிலவேம்போடு
புக்கியுள்ள பேர் முட்டி கசாயம் வைத்துப் புகழ் பெறவே திப்பிலி மென் பொடியுந் தூவித்
தத்தை யெழு மொழியார்கள் பிள்ளைப் பெத்துத் தனி யறையிலிருக்கையிலே சுரமே வந்தால்
சித்தமாய்த் தீர்ந்து விடுமென்று தங்கள் சுவாமி உமையாள் தனக்குச் சொன்னாரிதே.

5. தேன் விட்டு மூன்று நாள் கொடுக்கவுந் தீரும்.

இன்னமொரு வகை:

ஆலம்பட்டை முத்தக் காசு மஞ்சள் தேவதாரம் இவை சமன் கூட்டிக் கசாயம்
வைத்து மூன்று நாள் கொடுக்க கெர்ப்பிணி மேலே வேதியும் சுரமுந் தீரும்.

சுரத்துக்கு ராம பான குளிகை:-

முந்திரிப்பழம், அதிமதுரம், இலுப்பைப்பூ, திப்பிலி, பேரீச்சம் பழம், சந்தனம்
நன்னாரி வேர் இருவேலி வேர், கரிசிலாங் கன்னிச் சாற்றில் ஒரு நாளரைத்து மறுநாள்
முலைப் பாலில்ரைத்துத் தேற்றாங் கொட்டைப் பிரமாணம் நிழலுலத்திச் சகல
சுரத்துக்குந் தேனிலிடவும். தாப சுரத்துக்கு குருந்து தண்ணீரிலிடவும்:

ஸ்ரீசங்க தோஷங் கட்டினால் முலைப் பாலிலே நசையம் பண்ணவும். அப்படியே
உள்ளுக்கு கொடுக்கவும்.

மகா பித்த வாதி குளிகை:-

முந்திரிப் பழம், அதிமதுரம், விலாமிச்சம் வேர், லவுங்கம், செங்குழுநீர்
கிழங்கு, நன்னாரி வேர், கோரோசனை, கஸ்தூரி இலுப்பைப்பூவு, பச்சைக் கற்பூரம்,
சாலாதிர வேதி, ருத்திராட்சம், தாமரை வளையம், அல்லிக் கிழங்கு, கோஷ்டம்,
பேரீச்சம் பழம் இருவேலி வேர், கோரைக் கிழங்கு இது சமன் கொண்டு கரி
சிலாங் கன்னிச் சாற்றில் ஒரு சாமமரைத்து சுண்டைக்காய் மாதிரி உருண்டை பண்ணி
நிழலுலத்திக் குளிகு காச்சலுக்கு நெட்டைப் பேய் மிரட்டிக் கசாயத்திலிடவும். வேகக்
காச்சலுக்கு வெந்திய கசாயத்திலிடவும். தாப சுரத்துக்கு குருந்து தண்ணீரிலிடவும்.
எந்தப் பித்தத்துக்கும் சீரகக் கசாயத்திலிடவும். பாண்டுவுக்கு வெள்ளாட்டுக் கோமியத்
திலிடவும். மற்ற சுரத்துக்கெல்லாம் குருத் தண்ணீரிலே இடவும். பல் புண்ணு பல சிரங்கு
களுக்கு முலைப் பாலிலே யிடவும். இதிலே விகாளமுந் தீரும். வந்திக்கும் கெற்ப முண்டாகும்

ராம பாணக் குளிகை:-

சாதிலிங்கம் பணவிடை. 4, வெள்ளைப் பாஷாணம் பணவிடை. 6, பொன் மதம்
பணவிடை. 6 இதை உமத்தஞ் சாற்றிலரைத்து சிறு பயறுப் பிரமாணம் குளிகை பண்ணி

நிழலுலர்த்திப் பசுவின் பாலிலே ஒரு உருண்டை இடவும். சீத சுரம் மாறும். சயித்தியத்துக்கு வெந்நீரிலிடவும். சன்னிக்கு யிஞ்சிச் சாற்றிலிடவும் தீரும்.

5.11.63.

அரிதாரக் குளிகை:-

அரிதாரம் பலம். 6 நெல்லிக்காய்க் கெந்தகம் பலம். 6 கெவுரி பாஷாணம் 6 மயில் துத்தம் பலம். 4 இந்த நாலு வகையும் சுத்தி பண்ணி பொன்னரிதாரம் பசுக் கோமியத்தில் காய்ச்சி எடுக்கவும். நொச்சியிலை நீரிலும் சிறுகீரை நீரிலும் சுத்தி கெந்தகம் பசுவின் பாலிலே பிட்டாக வைக்கவும். வைத்து எடுக்கவும். கெவுரி பாஷாணம் சுண்ணாம்பு தாளிச்ச நீரில் காய்ச்சி யெடுக்கவும். துத்தம் சீலையிலே சுத்தி நெருப்பிலே சுட்டு எடுக்கவும். இப்படி இந்த நாலு வகையு மெடுத்து ஓமத்தை யிலைச் சாற்றிலரைத்து குன்றி அளவு உருண்டை செய்து நிழலுலர்த்திச் சகல சுரத்துக்கும் அரைக்காசிடை சீரகம் வெந்நீரிலரைத்து ஒரு உருண்டை இடவும். சுர மெல்லாந் தீரும். பத்தியங் கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும். வெந்நீரிலே பத்தியம் பண்ணவும். நேர்வாளம் உடையாமல் பசுக் கோமியத்திலே நல்லா வேக விட்டு எடுத்து மேலோடு போக்கிப் பருப்பைப் பிளந்து முளையை எடுத்துப் போட்டுப் பருப்பைக் கத்தாழை மடலிலே வைத்துக் கட்டிச் சுட்டுப் பிறகு எடுத்து எலுமிச்சம் பழச் சாற்றிலே போட்டுச் சிவக்கக் காய்ச்சி எடுத்துக் கொண்டு அநுபானங்களுக்குக் கூட்டவும். சுரத்

சுரத்துக்கு குளிகை, விஷசுரம், சீதசுரம், சன்னி பாத சுரத்துக்கு:-

மிளகுடனே கொடிவேலி வேரின் பட்டை முறைவே உணர்த்தி நிறை சரியாய்க் கூட்டித் தளமான காட்டிருக்கும் முருங்கைப் பட்டைச் சாற்றரைத்துச் சுண்டை யளவுண்டை செய்து வளமாக வெந்நியத்தைக் கசரியஞ் செய்து வைத்திடுக தனிச் சுரங்கள் வாங்கி யோடும். குளிர் சுரமும் நெட்டை பேய்மிரட்டி வெந்நீர் கொடுக்க முந்த சுரங் குலைந்தே யோடும்.

சுரங்களுக்கு சீத சுரம், விஷசுரம், சன்னி பாத சுரம் இவைகளுக்கு கசாயம்:-

பேய்ப்புடல், நன்னாரி வேர், ஆடாதோடை யிர்க்கு தண்ணீர் விட்டான் கிழங்கு, பற்படாகம், கோரைக் கிழங்கு, சிறுகாஞ்சொறி, சந்நித் தண்டு, தாமரை வளையும், சித்தாமுட்டி, பேரீச்சம் பழம், திப்பிலி மூலம், சுக்கு, திப்பிலி, மிளகு, வசம்பு, கடுகுரோகணி, தேவதாரம், மரமஞ்சள், கொத்தமல்லி இது சமன் கூட்டிக் கசாயம் வைத்து யிடித்துத் தேன கூட்டிக் கொடுக்கவும். அசீரண சுரம், சீதசுரம், விஷசுரம், சன்னி பாத சுரம் இவை தீரும்.

விஷசுரத்துக்கு பேராமுட்டி வேர், சுக்குச் சமன் கூட்டிக் கசாயம் வைத்து மூன்று நாள் ஆறு பொழுது கொடுக்கத் தீரும்.

இன்னமொரு வகை: துளசித் தண்டு யிலை, உத்தாமணி யிலை, தண்டு, சுக்கு கசாயம் பண்ணிக் கொடுக்கத் தீரும்.

பல சுரத்துக்கு கசாயம்:-

எலுமிச்சம் யிலை, நாரத்த யிலை, வெள்ளெருக்கு, சுக்குக் கஞ்சாங்கோரை, பெருமரப்பட்டை, நொச்சியிலை, உத்தாமணி யிலை இவை சமன் கூட்டிக் கசாயம் வைத்து மூன்று நாள் கொடுக்கச் சகல சுரம் விடும்.

மாறல் சுரத்துக்கு:-

பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, கடுக்காய், அதிமதுரம் இவை கசாயம் வைத்து மூன்று நாள் கொடுக்க மாறல் சுரம் விடும்.

சன்னி லட்சணம்:-

1. பெரிய சுரம் நெத்தியுமே வேர்வையாகும் பெருந்தாக மதிற் பிரமை தேகம் நோகும்
கரிய தலை நோய் சருவாங்கமும் தாகிக் கனப்பச் சென்றிடக்கும் வெகு சோபமாகும்
உரிய பிராந்திய தாம் வாய்ப் பெந்தமாகும் உதர முலைத்தே விக்கலெமக்கும் தாகு
வரு விருமல் மயிர் சிலித்து யிக் குணத்தைக் கண்டால் வந்திடுந் தந்திக சன்னி வகை யென்றேதே.

2. ஒதியுடன் மோகிக்கத் தாகிக்கத் தாளுடல் விருத்தாராட்டந் தலைப் பிரட்டல்
மேத குதப்பறை பேச வராந்தி பன்ன விக்கலெமக்கச் சுரந் தீவரமதாக
நீதி யினிலந்தக மாகு சன்னி செய்யும் நிலை யென்ப வகுத்தபடி நீதி நலோர்
ஆதி யினிலருக்கு தாகச் சன்னி செய்யு மடவுதனைப் புகல்வேன் மொழிய முகன்குளே.

3. அமுத மொழி தப்பறையே சொல்லத் தாக மதிகரிக்கப் பிரமிக்க நெஞ்சு நோகச்
சுமை தலையுஞ் சுத்தத் தாகிக் கத்தானே கூடி யுலர்ந்த விருமலாகுந் விருமல் சாட்டிய மதாக
சுமையுடலம் நடுக்க வெகு பிறலாபிக்க கழுத்துடனே நெத்தியும் வேர்க்கக் கண்ட போதே
தமையுணர்ந்த பெரியோர்களருக்குத் தாகச் சன்னி யிதுவென வறிந்து சாற் வாரே.

4. சித்தப் பிறம சன்னி:-

சாற்சுக் சரீரமும் வெகு நோவதாகும் தான் வாத பித்தமே பிறக்கொபிக்கும்
வெந்சு வந்த பேருடனே மிகக் கோபிக்கும் விருபுரு வந்தடிக்க வாடிக்கிடக்க
மாத்தமுடன் மோகிக்க வழக்குப் பேச வாய் விட்டே யலரு மிந்த வகை யுண்டாகில்த்
தோத்திர சித்தப் பிறமை சன்னி செய்யுஞ் சொல்லிடுமா யுவேதத் துணிவு தானே.

5. சீதாங்க சன்னி:-

தனிந் உடலங் குளிந்து சீதளமதாகத் தலையாரப் பிசத்திடுடு விக்கலுண்டாம்
அனிந்திடு தேகமும் வெளுத்து உடம்பு நோகும் அசி வாந்தி தாகம் வெகு மூர்ச்சையாகும்
தனிந்து வயறது கழியச் சிரம் நடுக்கச் சொல்லிடுங் காண் சீதாங்க சன்னி யென்றே
பணிந்து வடசாலனிலும் வலிசு தானே யிப்பால் மொழிவன் தாந்தரிகப் பண்புதானே.

6. தாந்திரிக் சன்னி:-

பன்பாகங் கட்டிப் போட்டாப் போலே தான் படுக்கையினிற் கிடந்து நித்திரை செய்வார் போல்
நன்பாகக் கண்மூடி முள்குப் போலே நாக்கசைக்க விழியோடுப்புசழு மாகும்
விள்ப்பான சரீரத்தில் தினவுண்டாகும் விழி பிரிந்து பருத்த நீர் பாயுந் தானே
தன்பாக விக்குவிங்கள் செய்யுங் கண்டாய் தாந்திரிக சன்னி யதின் தன்மை தானே.

7. கண்ட குப்பிச் சன்னி:-

தன்மையுள் சுரத்திலேடு தாக முண்டாய்த் தலை கனக்கக் கண்டத்தள் வேர்வையாகுந்
திண்மையதாய் மோகிக்குந் திடுக்கிட்டேங்குந் திகைத் தெழுந்தாப் போலிருக்கு மூர்சையாகும்
பின் மயமாம் விக்குடனிருமல் காட்டிப் பிறரிக்கள்ளே யடைந்து பேதகமதாகும்
வன்ம மதாங் கண்ட குப்பி சன்னி செய்யும் வகையான் குணமதனை மதிக்குங் காலே.

8. கறன்னிக சன்னி:-

மதியரமல் பொய் சொல்லும் வெடித்து நாவும் வடு முதடு முள்ப் போலாயிருக்குங் கண்டாய்
கதியான விருமலுடன் நடுக்கந் தோன்றும் தாக மடத் தன்டிவுங் கனத்து வங்கி
யதிலே திக்கென வெளுத்து யிருக்கச் செய்யும் அடவது கன்னிக சன்னியாகுங் கண்டாய்
விதியான பக்கு நேத்திர குணத்தை விளம்புவன் யானறிந்த படி மேதினிக்கே.

9. மேதினியிற் கண் பெருத்து நீர் தான் பாயும் விழி முழிச்சுப் பார்கப் போகவிருக்கச் செய்யும்

ஒழ மொழி பொய் சொல்லும் பிறமியத்தே தாறுற விடுப் பினில் வலியு முளதாய்ச் செய்யும்
நீதியிலிக் குணங்கள் செய்தால் பக்கு நேத்திரமாஞ் சன்னி நிலையாக வுடல் தன்னில் நின்று தானே
வாதினைகள் செய்து விடு மிதனை மத்த வல்லவர்கள் மருத்தவர் தாள் வணங்கு வாரே.

10. ரத்தாஉச்சிய சன்னி:-

வணங்கிய நாக்கட்டுமிடு வெடித்து ரத்தம் வடிந்து சுரந் தீவிரமாய்க் காய்ந்து மூர்ச்சை
யிணங்கி வயறது கழியும் விக்கல் தோன்றும் மிரண்டு விழி சிவத்தல் தலை நோவு முண்டாங்
குணங் கிருமல் தலை சுத்தி நடுக்கும் நாக்கின் குறி கறுத்து முட்போலே விருக்குங் கண்டாய்
கணங்களிலும் வலி தாமிரஉச்சியந் தன்னைக் காலனென வறிந்து நீ கருதுவாயே.

பிறலாப சன்னி:-

11. கருதிய தோஷட்டமே தவப் புலம்பல் தாபங் கடினமதாம் நினவிலை யனந்தல் செய்யும்
வரு முடம்பு மயக்கமாங் காலுங் கையும் வைத்தட்டிப் பிரட்டல் செய்ய வருத்தங் காணும்
சுர மனவந் தீவிரமாய் பிறலாபிக்குந் தோன்றும் பிறலாப சன்னித் தோஉஷமிதாம்
சுருதி மறைமுடி புணர்ந்த பெரியோர் தாமுஞ் சொன்னபடி தப்பாமல்த் தோன்றுங் காணே.

12. காணுமே சுவாசமது தாகமாகும் கை காலுந் தானெரியு முடலுங் கூட
ஊனும் வாய் நாவிழுந்து செவி கேளாது ஊமையது போலிருக்கும் திநாவெடிக்கும்
தோணுமே யுதிர மதில் வாயுமுடித் தறவாக நாக் கசப்புத் தோன்றி யின்னம்
ஆணுவமும் நாள் வரையில் குறைந்து போகும் ஆன சிம்முக சன்னி யடவதென்னே.

13. அபின்னியா சன்னி:-

என்னெனல் வாத பித்த சிலேஉடுமந் தானிவை கூடி நடக்கு முகமெங்குந் தானே
மின்னியிட நித்திரையும் வேர்வையாகு மெய்யுடம்பு நொந்து வெகு தாபமாகும்
பன்னு பலனில்லாமல் வேர்வை காட்டும் பகரும் பின்னியா சன்னிப் பண்பிதாகும்
சன்னி பதிமூன்றிருக்குஞ் சாத்தியத்திலேது தருகன்ன சாத்திய மீதென்ச் சாத்தவோமே.

14. சாத்திய மசாத்திய மறியும்படி:-

சாற்றிதோர் தந்திகந் தாந்தீரிகஞ் தக்க பிறலாபஞ் சிற்றப் பிறமை
யேற்றமுள்ள சிம்முகங் கறன்னி சுமிதென்று மிவ்வியாறு சன்னியுஞ் சாத்திகமதாகும்
போற்றுக்கு தாக மந்தக மஞ் சன்னிப் பக்கு நேத்திரங் கண்ட முச்ச
மாற்ற ரத்தாஉச்சியஞ் சீதாங்கம் பின்னியாச மேலும் அசாத்தியமதாமே.

நாள் பிறமாணம்:-

15. தாமே தந்திக மேலும் நாள் அந்தகற்குச் சாற்று நாள் பத்தருக்கு தாகந்தானே
நாமே நாலைந்து சித்த பிறமை மூவேழ் நாள் சீதாங்கத்திக்கு நாள் முவைந்தாந்
தேமேவுந் தாந்தரிக மேலும் நாளில் தீராதாலையைந்திற் சிவச மாகும்
பூமேவு கண்டகு நாள் பதின்மூன்றும் புகன்றிடு கறன்னிக நாளும் நவமாம் பொன்னே.

16. நவமேவு பக்கு நேத்திம நாளெட்டு நாடு ரத்தாட்சியந் தனக்கு நாளெட்டாகும்
பவமேவு பிறலாபம் பதினாலாகும் பகர்ந்திடு சிம்முக நாளும் பதினாறும்
மலமேவும் பின்னி யாசத்தினை மூன்றுமான் சன்னி பதிமூன்றுக்கமைந்த நாளாந்
தவமேவு சித்த வித தோஉஷந் தனினைச் சாத்தவன் சிந்தாமணியின் தன்மை தேர்ந்தே.

17. தோஉஷம் வருகிறது அறியும்படி:-

தேர்ந்ததொரு கருமா சுரந் தன்னிலாதல் சேரு மற்றியத்திலே தானுதல்
ஊர்ந்த அவ பத்தியம் வந்தாலெழுந் தோஉஷ மடவது புளிப் புகையப் பளத்திலேது

கூர்ந்து வுடுத்த் திப்புப் பரிமள நீர் பானம் குலவு மெத்தை புசப்பிடவை வெல்லஞ் செத்திலே நெய் சார்ந்த வழி நடத்தல் மந்தம் தாப நீதாலத் தருண சுரம் பத்தியத்தால் சார்வதாமே.

18. பத்திய தோஷம்:-

ஆமே சோம்பலுதி முர்சை பிய்க்கம் தரிக்மய பிறலாபிக்கு மிவை யுவ பத்திற் தாமேவு தோஷமெனச் சாற்றலாகுந் தருண சுரந் தனிலவுனிகுஞ் சங்க தோஷம் தேமேவு உடம்பு நொந்து நடுக்கு மாரிற் தீ யெரியும் பொய் சொல்லும் பிரமிற்றுப் பேசுந் தாமே தானெழுந்திருக்குங் கையுங் காலுந் தான் மெளிரும் நீசங்க தோஷந்தானே.

19. அவபத்திய தோஷம் நீசங்க தோஷம்:-

நிருவி வித்தை எலுமிச்சம் பழச் சாத்திலே உரைத்து உச்சந் தலையைக் கீறித் தேய்க்கவும். புருஷனுக்காகில் அவன் பெண்சாதி துண்டையைக் கீறி ரெத்தம் வாங்கி அதிலே திப்பிலி உரைத்துக் கண்ணிலிடவும்.

சீத சன்னி மத்த சன்னியருக்கு ஆனந்த பயிரவன் மாத்திரை:-

சீரான சாதிலிங்கம் நாபியோடு திரிகடுகு வெண்காரஞ் சுரியாய்க் கூட்டி நேரான எலுமிச்சம் பழச் சாத்தில் நேக வரைத்துண்ட குன்றி நிழலுலத்தி யேரான யிஞ்சிச் சாத்தினிற் கொடுத்தாலே யிந் சன்னி பதிமூன்றும் தோஷமேழு வாரா ரத்தஷட்ட மெல்லாந் தீர்க்கத் தக்க ஆனந்த பயிரவனிதாகு மின்னே.

சன்னியருக்கு நசியம்:-

எருக்கம் வேர், சிறுகீரை, குப்பைக் கீரை யிதளுர் வேர், முருங்கை வேர்ப் பட்டை, யுள்ளி நருக்கியே முலைப்பாலில் சீலை தன்னில் நன்றுகப் பொட்டணத்தால் நசியம் பண்ணத் திருக்மட்டியி சன்னி பதிமூன்றுந் தானுந் தங்காது. அகமதனிற் சாத மீதாம் பொருக்கென்வே யிம்மருந்தைச் செய்த தாஷ்ற பூதலத்தி லெல்லோரும் புகழுவாரே.

சகல சன்னிக்கு லோக தாண்டவ தயிலம்:-

முசுமு முட்டை, முள்ளி மஞ்சள், சிறுகிலுப்பை வேர், கருஞ்சீரகம், நன்னாரி வேர் சந்தனம், கோஷ்டம், இந்துப்பு, சுக்கு, திப்பிலி, மிளகு, வசம்பு, வேப்பம் வேர் விரை, நாகப்பூச்சி இவை வகைக்குச் சமனிடை கூட்டித் தழுதாழைச் சாத்திலரை.

good recipe

வேப்பெண்ணெ புங்கெண்ணெ வகைக்கு படி ..கு என்ணெ சட்டியிலே விட்டு அரைத்த மருந்தெல்லாம் போட்டுக் கறண்டியாலே கிளறி மெழுகு பதமாகக் காய்ச்சி வடித்து வைத்து நல்ல கோழி முட்டை அவையத்தில் வைக்காத முட்டையாக நாற்பது முட்டை சட்டியில் போட்டு முட்டை மறையத் தண்ணீர் விட்டு அடுப்பிலே எரியிட்டுத் தண்ணீர் கொதித்து முட்டை நன்றாய் வெந்த பிறகு எடுத்துக் குளிர்ந்த தண்ணீரிலே போட்டுக் குளிர ஆறின பிறகு உடைத்து மஞ்சள் கருமாத்திர மெடுத்து வேறே என்ணெச் சட்டியில் போட்டு நன்றாய்த் தூள் பண்ணி அடுப்பிலே வைத்துச் சிறு கறண்டி போட்டுக் கிளறிக் கிளறி எரி யிட்டுத் தூளெல்லா நீராளமாய்க் கரைஞ்சு கருகின பிறகு தயிலம் வரும். அது பத மாகும். அதை வேறே கலசத்திலே யிறுத்துக் கொண்டு வெள்ளைப் புண்டுதி தயிலம் வாங்கிச் சத்தே காய்ச்சிக் கோழி முட்டைத் தயிலத்துடனே விட்டுக் கலந்து முன்னே யிறுத்து வைத்த தயிலத்துடன் யிந்த தயிலத்தையும் விட்டு மேலெல்லாம் பிடிச்சுக் காசிடை தயிலம் உள்ளுக்குக் கொடுக்கவும். இப்படி மூன்று நாளாறு பொழுது கொடுத்தால் சன்னி யென்னப் பட்டதெல்லாம் குணமாகும். சூலைப் பிடிப்புகளெல்லாந் தீரும்.

தாள் வூாய் முடக்குச் சன்னிக்குத் தயிலம்:-

கெந்தகம் பலம் .க, வெள்ளுள்ளி வேளை வேரு--- கூட்டப் போட்டு அரைத்து அதை நாலு சதிரமாகச் சீலை கிழித்த இந்த மருந்தை அந்தச் சீலையிலே பரப்பி

வெயிலிலே உலர்த்தி அதைச் சீலையோடே நன்றாய் முத்திச் சுருட்டித் திரியாக்கி வேப்பெண்ணெயிலே முக்கித் திரியைக் கொளுத்திக் கையிலே பிடித்துக் கொண்டு கீழே எண்ணெய்க் கிண்ணம் வைக்கத் தயிலம் சிந்தி விழும். அந்தத் தயிலத்தை எடுத்துத் தாருவாய் பிடறி கழுத்தைச் சுற்றிப் பிடிக்க முடக்குத் தீரும். உள்ளுக்கு முன் தயிலம் கொடுக்கவும். சன்னியள் தீரும். பத்தியம் உப்பு, புளிப்பு, புகையாகாது.

விழுபாகுத்த சன்னிக்கு பூசுகத் தயிலம் :-

நாக்குப் பூ, பன்றி வேர், ஊசி மல்லிகை வேர், வெள்ளைக் குன்றியிலை, சிகப்புக் குங்கிலியம் இவை வகைக்கு விராகனிடை. 3 குன்றியிலைச் சாற்றிலரைத்து வேப்பெண்ணெய் படி. க, புங்கெண்ணெய் படி. க விட்டு முன் மருந்தெல்லாம் போட்டுக் கிளறி அடுப்பிலே வைத்து மெழுகு பதமாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு மேலுக்குப் பூசி உள்ளுக்குங் கொடுக்கவும். இதில் தீரும் வியாதி சன்னிகள் வாத ரோகங்கள் சகலமுந் தீரும்.

இன்னமொரு வகைத் தயிலம் :-

நாக்குப் பூ முள்ளி மஞ்சள் வெள்ளுள்ளி, வசம்பு, கடுகு இவைகள் குன்றியிலைச் சாற்றிலரைத்து வேப்பெண்ணெய் படி. க, விட்டு அரைத்த மருந்தெல்லாம் கிளறி மெழுகு பதமாகக் காய்ச்சி வடித்துக் கோழி முட்டைத் தயிலங் கூட்ட விட்டு மேலுக்குப் பிடித்து உள்ளுக்குங் கொடுக்கச் சன்னியள் எல்லாம் வாத ரோகங்களெல்லாம் தீரும்.

இந்திராணித் தயிலம் :-

நாக்குப்பூச்சி, சிவப்புக் குங்கிலியம்; கடுகு, வேப்பம் பருப்பு இவை வகைக்கு விராகனிடை. 3, வேப்பெண்ணெய் படி க, மருந்தைக் குன்றியிலைச் சாற்றிலே யரைத்து எண்ணெயிலே போட்டு மெழுகு பதத்திலே வடித்து குங்கிலியம் கடுகு — முள்ளி மஞ்சள் பொடி செய்து மேல் பொடி போட்டு உள்ளுங் கொடுத்து மேலும் பிடிக்கச் சன்னியள் தீரும்.

இந்திராணித் தயிலம் :-

நொச்சியிலை, துளசியிலை, பேய்ப்புடல், எருக்கிலை இவை வகைக்குச் சாறு படி. க, நல்லெண்ணெய் படி. உ, கூட விட்டுக் கடைத் திரவியம் சுக்கு, திப்பிலி மிளகு, தேவதாரம், வசம்பு, கோஷ்டம், சதகுப்பை, கடுகுரோகணி, அதிமதுரம், சந்தன மஞ்சள், ஏலம், லவங்கம், சீரகம், கற்கடக சிங்கி சிறுதேக்கு, முள்ளி மஞ்சள்

பெருங்குப்பை சங்கம் வேர்ப் பட்டை, சடாமஞ்சி, ஆடாதோடை வேர் நாக்குப் பூ, நிலவேம்பு, நாய்வேளை வேர், வேப்பம் பட்டை இவை வகைக்கு விராகனிடை. க, முந்திரியிலைச் சாறு விட்டு அரைத்து எண்ணெயிலே போட்டுப் பதமாக எரித்து வடித்து முள்ளி மஞ்சள் மேல் பொடி போட்டு உள்ளுக்குக் கொடுத்து மேலும் பூசவும். இந்த எண்ணெய் சருவ சன்னி, வாதரோகம், குன்மம் இவைகளெல்லாம் தீரும்.

சன்னிக்கு கசாயம் :-

வில்வவேர், காட்டாமணக்கம் வேர், தழுதாழை வேர், சித்தமல்லி வேர், நெருஞ்சி வேர், கண்டங்கத்திரி வேர், சிறுவழுதலை, அஷ்டதிசை மூலிகை பேராமுட்டி வேர், எருக்கம் வேர், நொச்சி வேர், முருங்கை வேர், முளகருணை வேர், சங்கங்குப்பி வேர், செங்கத்தாரி வேர், குமிழம் வேர் இவை கசாயம் பண்ணிக் கொடுக்கச் சன்னியள் திரும்பும்.

சன்னிக்குப் பொட்டணம் :-

புன்னைக் கொட்டை, ஆமணக்கு முத்து, வேப்பங் கொட்டை, மகிழம் விரை, கழற்சி விரை, கொப்பரைத் தேங்காய், புங்கங் கொட்டை, முருங்கை விரை இலுப்பைக் கொட்டை, சாமை கடலை கடுகு அரிசி விரை, அரத்தை, கருங்காலம்

பபுல்லு வேர், எள்ளு, வெள்ளுள்ளி, வசம்பு, பெருங்காயம் இவை வகைக்கு பலம்.3, கூட்டிப் பெரும் பிடியா யிடித்துப் பொட்டணங் கட்டி வேப்பெண்ணெயும் புங்கெண்ணெயும் வெள்ளை வெங்காயத் தயிலமும் யிலுப்பை என்ணெயும் கூட்டி என்ணெச் சட்டி யிலே விட்டுக் காய்ச்சிப் பொட்டணத்தைத் தோய்த்து ஒத்திடவும். சகல சன்னியு மாறும். இந்தப் பொட்டணம் பின்னையும் ஒரு வருஷத்துக்கு வைத்திருந்து ஒத்திடலாம்.

<u>சன்னிக்குப் புகை:-</u>

கடுகு, ஓமம், சணப்பு விரை, வெள்ளை வெங்காயம் பலம்.க, கூட்டி இடித்து மூன்று நாலாது பொழுது புகை ஒட்டிலே நெருப்பிட்டு இந்தத் தூளைப் போட்டுப் புகை பிடிக்கவும். சன்னி முறியும்.

சந்தனம், வெம்மப்பூ, கோரோசனை, மாதளம் பூ, கடுகுரோகணி, சதகுப்பை, கிரும்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, விலாமிச்சம் வேர், பூலாங்கிழங்கு தற்கோலம், புழுகு சட்டம், கல்நார், கல்மதம், மந்திஉஷ்டி, லவங்கப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செங்கழுநீர்க் கோஷ்டம், அதிமதுரம், செண்பகப்பூ இவை வகைக்கு விராகனிடை.க, கூட்டி இடித்து வஸ்திர காயம் பண்ணிப் பசுவின் நெய் படி.உ, விட்டு எரித்துத் தலைக்குத் தேய்த்து இள வென்னீரும் பச்சை பயறப்புத் தேய்த்து முழுகவும். இதுக்குக் கண்ணெரிவு, காலெரிவு, பித்த காசம், கண் புகைச்சல், உஷ்ண ரோகங்கள் தீரும். தலை மயிரும் நன்றாய் வளரும்.

<u>பல் கிட்டின சன்னிக்கு மருந்து:-</u>

சுக்கு, திப்பிலி, மிளகு, மஞ்சள் இந்த நாலும் பொடி செய்து அதிலே எருமைக் கொம்பைச் சீவிப் போட்டுச் சதிரச் சீலையிலே வைத்துத் திரியாகத் திரிச்சு வேப் பெண்ணெயிலே நனைத்து பருப்புச் சலாக்கிலே கோத்துப்பிடித்துக் கொண்டு பெரிய திரியாகவேறே விளக்கிலே போட்டு வேப்பெண்ணெ விட்டு விளக்கேத்தி முன் சலாக்கிலே யிருக்கிற திரியைக் காய்ச்சினால் தயிலம் விழும். அந்தத் தயிலம் வேறே பிடித்துக் கொண்டு கறண்டியாலே வேப்பெண்ணையை மொண்டு காய்ச்சுகிற திரிமேலே விட்டு விட்டுக் காய்ச்சித் தயிலம் பிடித்துக் கொள்ளவும். அதின் பிறகு சலாக்கிலே காய்ச்சின திரிப் பொட்டணத்தைச் சதிரச் சீலையிலே பிடித்துக் கொண்டு சட்டி காய வைத்து அந்த தயிலத்திலே பொட்டணத்தைத் தவைத்துக் காய்ந்த சட்டியிலே ~~சத்தே சத்தே~~ சற்று சற்று வைத்து சுடச் சுட எடுத்துச் சிரசு கழுத்து ரெண்டு கன்னம் கீழ் வாய்ப் பகடு யிதெல்லாஞ் சுருக்கிட ஒத்திடவும். சருவாங்க சன்னிகளெல்லாம் முறியும். அரைச் ~~சீசத்திலே~~ சாமத்திலே பல் கிட்டின தெல்லாம் தீரும்.

<u>சன்னிகளுக்கு ஒத்தடம்:-</u>

ஐந்து வருஷத்து உப்பு, ப் பாளை இடித்து மாப் போலே தெள்ளி ஓடு காய வைத்து வறுத்து அக்கினி போலே ஒத்திடவும்.

பத்து: முடக்கொத்தான் சாறு, வேலிப் பருத்திச் சாறு குழம்பாகக் காய்ச்சிப் பத்துப் போட்டு விடவும். சன்னி முறியும். பாவட்டை யிலைச் சாறு, வெள்ளுள்ளிச் சாறு கொட்டைக் கரந்தைச் சாறு சுழலாவாரைச் சாறு எருமைப் பாச்சான் சாறு, குப்பை மேனிச் சாறு, களக் கொட்டிச் சாறு வகைக்கு உரி.க, கள்ளிப் பால் படி $\frac{1}{4}$, ஆமணக்கெண்ணை படி.1$\frac{1}{2}$ கூட விட்டு கடைத் திரவியம் வெள்ளுள்ளி, மிளகு, திப்பிலி சுக்கு, மரமஞ்சள், கடுகுரோகணி, பாவட்டை வேர், கரந்தை வேர், சுழலாவாரை
2. வேர், <u>எருமைப் பாச்சான் வேர்</u>, குப்பை மேனி வேர், களச்சி வேர் இது வகைக்கு விராகனிடை.உ இடித்து வஸ்திர காயம் பண்ணி முன் என்ணெயிலே போட்டு வெள்ளை வெங்காயம், உரிச்சு முழுமனே போடவும். வெள்ளை வெங்காயம் சிவக்கக் காய்ச்சி என்ணையை யிறுத்து வைத்துக் கொண்டு சாப்பிடவும். இதில் தீரும் வியாதி வயத்து வலி உப்பிச வாய்வு, மலக் கட்டு, சலக் கட்டு, மந்த வாய்வு, உஷ்ணக் கட்டு, கெற்ப

விப்புருதி நெஞ்சு மாதவன் நெஞ்சுக் கரிப்பு மத்தும வாத ரோக மறும். பத்தியம் புளி புகை யாகாது.

<u>இருமலுக் மகா வில்வாதி லேகியம்</u>:-

வில்வ வேர் பலம்.50, சித்தாமுட்டி வேர் பலம்.25, தாமரை வளையம் பலம்.25, ஆடாதோடை பலம்.25, நன்னாரி வேர் பலம்.12, வெட்டி வேர் பலம்.12, பேராமல்லிகை வேர்.12, சித்தமல்லிகை வேர் பலம்.12, நெருஞ்சி வேர் பலம்.12, பெருங்குமிழம் வேர் பலம்.12, முன்னை வேர் பலம்.12, பாதிரி வேர் பலம்.12, விலாமிச்சம் வேர் பலம்.12, கா வாழை வேர் பலம்.12 இது பலத்திலே நிறுத்த தண்ணீர் வள்ளம்.32 பெரிய பானையிலே பேச விட்டு பானைக்கு காப்புக் கட்டி விக்கினேஸ்வர பூசை பண்ணி அடுப்பிலே வைத்து எரிய விட்டு எட்டிலே ஒன்றாய்ச் சுண்டின பிறகு பிரத்துக் கொண்டு பழைய நல்ல வெல்லம் பலம்.50 போட்டுப் பாகு பண்ணிக் கடைத் திரவியம் மிளகு பலம்.உ, சுக்கு பலம்.உ, கிராம்பு பலம்.1½, சிறுநாகப்பூ பலம்.க, கொத்தமல்லி பலம்.க, சீரகம் பலம்.க, ஏலம் பலம்.1½. திப்பிலி பலம்.க, செவ்வியம் பலம்.க, சித்திர மூலம் பலம்.க, திப்பிலி மூலம் பலம்.க, சிறு தேக்கு பலம்.உ, அதிமதுரம் பலம்.உ, கோஷ்டம் பலம்.உ, கண்டந் திப்பிலி பலம்.½, சாதிக்காய் பலம்.½, சாதிபத்திரி பலம்.¼, தாளிச பத்திரி பலம்.உ, தக்கோலம் பலம்.க, ஓமம் பலம்.1½, கடுக்காய் பலம்.க, நெல்லி முள்ளி பலம்.உ, லவுங்கப் பத்திரி பலம்.உ, முந்திரிப் பழம்.பலம்.உ, பேரீச்சம் பழம்.1¼, வால் மிளகு பலம்.½, ரோசாணி ஓமம் பலம்.உ, குகை.நீ பலம்.க, இந்துப்பு பலம்.½, இந்த மருந்தெல்லாம் சூரணம் பண்ணி முன்பாகு பண்ணிதிலே போட்டு பதமாக எரிச்சுப் பதமான பிறகு எடுத்து வைத்துக் கொண்டு தேன் சேர்.உ, நெய் சேர்.க விட்டுக் கிளறி பின்னையும் சிறுக அடுப்பிலே வைத்துக் கிளறி பிஞ்சிச் சாறு, கொம்மட்டிக் மாதளைப் பழத்தின் சாறு ஒரு மானம் விட்டுக் கிளறி எடுத்து வைத்து கொண்டு காலமே ஒரு சுண்டைக் காய் மாத்திரம் உள்க் கொண்டு வரச் சொல்லவும். இதில் தீரும் வியாதி உஷ்ண வாய்வு, சயித்திய வாய்வு, பயித்திய வாய்வு, ஷன்மங்கள் சுவாச காசம், இருமல் ரோகம், மார் நோவு, குலைநோவு, நெஞ்செரிவு, குளிர் காச்சல், காசரோகம், பீனிசங்கள் மாறும்.

<u>உளைப்பு வசித்திராதி லேகியம்</u>:-

சித்திர மூலம் வேர்ப் பட்டை பலம்.20, கொண்டு வந்து இடித்து நாலு வள்ளத் தண்ணீர் விட்டு ஒன்றரைப் படியாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு பழைய நல்ல வெல்லம் பலம்.30, போட்டுப் பாகு படுத்தி அதில் பெருங்காயம், ஓமம், சுக்கு, திப்பிலி, மிளகு, வாய்விளங்கம், வசம்பு, கல்பபறங்கி, பேய்க் கொமட்டி வேர், செவ்வியம், கற்கடகசிங்கி, சீந்தித் தண்டு, கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், ஏலம், நாகேசுரம், கிராம்பு, கோரைக் கிழங்கு, தொட்டால் சுருங்கி, சதகுப்பை, அதிவிடையம், நிலையாவாரை வேர், தேவதாரம், ஏலக்க வேப்பங் கொட்டை சேங்கொட்டை, வெள்ளைப் பூண்டு ஆமணக்கம் வேர், கொட்டைக் கரந்தை இது வகைக்கு விராகனிடை.5, திகடை விராகனிடை.60 ஆக இந்த வகையெல்லாம் உலத்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி முன் வெல்லப் பாகிலே போட்டு அடுப்பிலே வைத்து கிளறி ஒரு படி தேன் விட்டுக் கிளறி விநாயகர் பூசை பண்ணி வைத்துக் கொண்டு நெய் பழகின கலசத்திலே வைத்துக் கொண்டு களச்சிக் காய் மாதிரிக் கொள்ளவும். தீரும் வியாதி ஒடு விப்புருதி, மலக் கட்டுலே வயத்து வலி, வயறு கழிச்சல், பிரமியம் ஷன்மம் சதஸினி கிரிப்புமுக்கடி, சுவாசம் இருமல், அரோசிகம் பாண்டு, சோகை விக்கல் மந்தாக்கினி இந்திரிய நஷ்டம் கண் வியாதி புண் ஜல கேளாத காதடைப்பு சலதோஷம் தீரும். சரீரம் ஆரோக்கிய மாகும். பத்தியம் கைப்பு, புளி தவிர்க்கவும்.

காசத்துக்கு வில்வாதி லேகியம்:-

வில்வ வேர் பலம்.30 தண்ணீர் ஊற்றி விட்டு யெட்டிலொன்றாய்க் காய்ச்சி இறக்கி ஆறின பிறகு பிசைந்து கோசு எடுத்துப் போட்டு அதில் பழைய நல்ல வெல்லம் பலம்.20, போட்டுக் கரைத்துப் பாகுபடுத்தி கடைத் திரவியம் கற்கடக சிங்கி மிளகு, திப்பிலி இந்த வகைக்கு பலம்.4, திப்பிலி பலம்.3/4, தாளிச பத்திரி பலம்.உ, தாமரைக் கிழங்கு அல்லிக் கிழங்கு திப்பிலி மூலம் பலம்.உ, கொடிவேலி வேர் பலம்.க, ஏலம், லவங்கம், சிறுநாகப்பூ இது வகைக்கு கழஞ்சி.3/4, சீரகம் பலம்.உ இது வெல்லாம் சூரணமாக்கி முன் பாகிலே போட்டுக் கிளறி ஆறின பிறகு தானியப்புடம் வைத்து எடுத்து விநாயகர் பூசை பண்ணிக் காய்ச்சிக் காயளவு தின்று வரவும். சுரவ அதிசாரம் பந்த போகம் காமாலை குன்மம், காசம் அரோசகம், மூக்கு நீர்ப் பாய்ச்சல், பசுமை காசம் பீலிகை நெஞ்சில் சோ யுண்டான வியாதி மூலமாறு வகையும் பாண்டுவும் வாத ரோகமும் கிருமி நெஞ்சு நோவு இவைகள் தீரும்.

சித்தர் சாஸ்திரத்தின் படி இந்தக் கசாயம் ஏழு நாள் தினம் ஒரொரு கொதி கொதிப்பித்து எட்டா நாள் கசாய மீந்து அன்று காய்ச்சி லேகியம் பண்ணுகிறது.

விஷத்துக்கு விலங்கா அரித லேகியம்:-

கையாந்தகரைச் சாறு உரி.க, நல்ல வெல்லம் பலம்.உய, கழலாவாரை சங்கிலை, ஆடாதோடை யிலை, தூதுவளை, சமூலம் இது வகைக்கு படி.½ குட்டி பால பிரதி பாகமாகப் பாகு படுத்தி கடைத் திரவியம் திப்பிலி, சிறுலகம், செவியம், கொடிவேலி வேர், அதிவிடையம், சுக்கு, சீரகம் வட்டத் திருப்பி வேர், பெருங்காயம் அரேணுகம், பெருங்கும்பை வெண் கடுகு, கடுகுரோகணி, மிளகு, குங்கிலியம், சுழலா வாரை வேர், ஓமம், ஏலம், சிறுதேக்கு, விழலரிசி, அரப்பொடி இது வகைக்கு விராகனிடை.க, அரப்பொடி பலம்.½ இது வெல்லாம் உலர்த்திப் பொடி பண்ணி வஸ்திர காயம் பண்ணி முன் பாகிலே போட்டுக் கிளறி ஒரு படி தேன் விட்டுப் பதமாகக் கிளறி இறக்கிப் பதினைந்து நாள் தானிய புடம் வைத்து எடுத்து விநாயகர் பூசை பண்ணி களச்சி அளவு கொள்ளவும். இதில் தீரும் வியாதி பாலசுரம், காச சுவாசம், விஷரோகம், எல்லாம் போம். ஆரோக்கியமாம்.

அரிதா லேகியம்:-

பசுவின் கோமியம் பலம்.100, கடுக்காய் 100 போட்டு நாலொன்றாய்க் காய்ச்சி சர்க்கரை பலம்.4, போட்டுப் பாகுபடுத்திக் கடைத் திரவியம், சுக்கு கொடிவேலி வேர், அரப்பொடி விழலரிசி இது வகைக்கு விராகனிடை.க, பொடி செய்து முன் பாகிலே போட்டுப் பதமாகக் காய்ச்சி இறக்கி தினம் பெரிய சுண்டைக் காயளவு தின்னவும். இதுக்கு தீரும் வியாதி குன்மம், அப்பிரமேகம்.20; மகாபாண்டு பாண்டு ரோகம் அஷ்டம்.18; மூலம் ஆறு பவுத்திரம்.ரு தீரும். மலடிக்குக் கெற்பந் தரிக்கும். சரீரத்துக்கு ஆரோக்கியம்.

இன்னொரு வகை: அரிதார லேகியம்:-

கடுக்காய் நூறு கோமூத்திரம் பலம் நூறு, பிரமிப் பூண்டு எருக்கிலை ஆடாதோடை யிலை, சீந்தித் தண்டு, இஞ்சி கழலாவாரை, சங்கிலை இது வகைக்குச் சாறு படி.½ இது வெல்லாங் கூட்டிக் கடுக்காயைத் தட்டிப் போட்டு மெள்ள மெள்ள எரித்து மறுநாள் கொட்டை எடுத்துப் போட்டு சர்க்கரை பலம்.4 போட்டுப் பாகு படுத்தி கடைத் திரவியம், திரிகடுகு, கொடிவேலி வேர், சிறுதேக்கு இது வகைக்கு விராகனிடை.உ, பொடி செய்து முன் பாகிலே போட்டுக் கிளறி தேன் படி.½, நெய் படி.½ விட்டுக் கிளறிப் பதத்திலே இறக்கிக் களச்சி அளவு தின்னவும். இதில் தீரும் வியாதி இருமலஞ்சு, மேல் மூச்சு.அ, விக்கலானதும் எல்லாந் தீரும்.

அஸ்வினி தேவதைகள் சொன்ன லேகியம்:-

பாரிச சூலைக்குக் கொடிவேலிக் குழம்பு:-

கொடிவேலி வேர்ப் பட்டை.50, சுக்கு பலம்.25, சர் அவிளா வேர் சங்கம் வேர், ஆயில்பட்டை, புங்கம்பட்டை சிறுவழுதலை வேர் யிலை, கஸ்டங் கத்திரி வேர் யிலை, வில்லை வேர்ப் பட்டை, திப்பிலி கொடிவேலி வேர், சிறு மூலகம், திரிபலை, அரப்பொடி இவை வகைக்கு பலம்.3, கொண்டு அப்பவே யிடித்துப் பெரிய பானையிலே போட்டு எட்டு மரக்கால் தண்ணீர் விட்டு எட்டி லொன்றும் காய்ச்சி ஆறின பிறகு கோதை பிழிந்து எடுத்துப் போட்டு கசாயம் வடித்துக் கொண்டு இதில் பழைய நல்ல வெல்லம் பலம்.100 போட்டுப் பாகு பண்ணி இதில் கொடிவேலிச் சூரணம் சேங்கொட்டை இடித்த பொடி படி.½, திரிகடுகு வகைக்கு பலம்.½, யிஞ்சி திரிபாலை, அரப்பொடி சீரகம், திப்பிலி மூலம் விழாலரிசி, கடுகு, பெருங்காயம், செவ்வியம், வசம்பு, வெட்டத் திருப்பி, அதிவிடையம், பேரீச்சம் பழம், தேவதாரம், மஞ்சள், மரமஞ்சள் இது வகைக்கு பலம்.க, சூரணித்து முன் பாகிலே போட்டு பதமாகக் கிளறி இறக்கி ஆறின பிறகு ஒரு பட்சந் தானியப்புடம் வைத்து எடுத்து விநாயக பூசை பண்ணி தினங் கழற்சி அளவு தின்று மேலும் புசவும். இதில் தீரும் வியாதி பாண்டுரோகம், பொருமுதல் குஷ்டம், குன்மம், பவுத்திரம், மூலம், பாரிசசூலை, சுவாச காசம், மகா முளை மற்றும் பல வியாதி போம். புத்தி மானுவான். சரீரம் நொய்தாயிருக்கும். தாது வற்றிக்கு மிடத்தில் வியாதிகள் தீரும்.

அசுவினி தேவதைகள் சொன்ன லேகியம்: சகல வியாதியுந் தீரும்:-

கொடிவேலி வேர்ப் பட்டை பலம்.உரு, இதிலே ஊனி தண்ணீர் விட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சி பழைய நல்ல வெல்லம் பலம்.50 போட்டு பாகு படுத்தி கடைத் திரவியம் ஏலம், லவுங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கூகை நீறு, லவங்கப் பத்திரி, பூமி சக்கரைக் கிழங்கு, திரிகடுகு, திரிபலை இது வகைக்கு விராகனிடை.ரு சூரணம் பண்ணி வஸ்திர காயம் பண்ணி முன் பாகில் போட்டு பதமாக ஆக்கி எடுத்து வைத்துக் கொண்டு தினங் கழற்சி மாதிரி தின்று வரவும். இதில் தீரும் வியாதி உஷ்ணம், பித்த குன்மம், உடம்பு எரிவு, உஷ்ண ரோகங்கள் இது வெல்லாந் தீரும்.

வில்வாதி லேகியம்:-

வில்லை வேர் பலம்.30 இடித்து முக்குணி தண்ணீர் விட்டு எட்டி லொன்றாய் காய்ச்சி ஆறின பிறகு பிசைந்து கோதை யெடுத்துப் போட்டு சர்க்கரை பலம்.30, அதிலே போட்டு பாகு படுத்தி கற்கம் சுக்கு பலம்.3, மிளகு பலம்.4, திப்பிலி பலம்.1, செவியம் பலம்.க, தாளிசபத்திரி பலம்.க, சிறு நாகப்பூவு பலம் 1½, திப்பிலி மூலம் பலம்.உ; கொடிவேலி வேர் பட்டை பலம்.க; ஏலம் கழஞ்சு லவங்கம் கழஞ்சு.உ, பச்சிலை கழஞ்சு.ங இது இடித்து பொடி செய்து வஸ்திர காயம் பண்ணி முன் பாகிலே போட்டு பதமாகக் காய்ச்சி எடுத்து வைத்துக் கொண்டு களச்சி மாதிரி தின்னவும். இதில் தீரும் வியாதி சத்தி உத்திர ராகம், காமாலை, குன்மம், கிருமி, வயறு பொருமல், சுவாசகாசம், வயற்றுப் புழுகள் இது தீரும்

மேல் 28,29 ஏடுகள் இல்லை.

.... வள்ளத் தண்ணீரிலே போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் கோதை அரித்துப் போட்டு நெய் படி.உ, அதிலே விட்டுக் கடை திரவியம் விழலரிசி, பொன்முசுட்டை வேர், தேவதாரம், அத்தி, திப்பிலி, ஆவாரை வேர், அவலஉஷாரம் துவர்ச்சிகை, சதகுப்பை, செவ்வியம், கோஷ்டம், வாலுளுவை, மஞ்சள், மிளகு, வெட்பாலை யரிசி ஓமம், கொடிவேலி வேர், கடுகுரோகணி, வெள்ளைக்

கோஷ்டம், வசம்பு, சிறுமூலகம், மஞ்சிட்டி, அதிவிடையம், ஆடாதோடை வேர் சீரகம் இது வகைக்கு பலம். ½ கூட்டி உலத்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி முன் நெய்யில் போட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி எடுத்து வைத்துக் கொண்டு காலமே தின்னவும். இதில் தீரும் வியாதி எலும்பு முறிபாடு கூடும். குஷ்டம். 18, மூலம் ஆறாத புண்ணுகள் அற்புத வாய்வு, கண்டமாலை, மேலிளைப்பு குன்மம், அமுத நீர், சாரப் பிறமேகம். உக, கிரந்தி புண்ணுகள் இது தீரும். பத்தியம் கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்:

பஞ்ச திரவிய கிருதம்:-

கோசலம் பாலு தயிரும், சாணம் பால் நெய் ஆறும் ப்சறி இது வகைக்கு படி. ½, நெய் படி. க, விட்டு மூன்று நாளுற வைத்து கடைத் திரவியம் திரிபலை வியலரிசி, அதிமதுரம், திப்பிலி, தேவதாரம், முந்திரிப் பழம், வசம்பு, அதிவிடையம், மஞ்சள், மரமஞ்சள், முத்தக்காசு, வட்டித் திருப்பி சிவதை வேர் இது வகைக்கு பலம். க உலத்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி முன் நெய்யில் போட்டு பதமாகக் காய்ச்சி மெழுகு பதத்திலே வடித்துக் காலமே சாப்பிடவும். இதில் தீரும் வியாதி பிறமஉஷ்சதி, பிசாசு போம். சோகை தீரும். ஊது கருந் தீரும். பாண்டு தீரும். வாத ரோகந் தீரும்.

மகா பஞ்ச கௌவ்விய கிருதம்:-

வாகை வேர், குமிழம் வேர், முன்னை வேர், பாதிரி வேர், வில்லை வேர் ஆக வகை. 5, சித்தமல்லி, பேராமல்லி வேர், கண்டங்கத்திரி வேர், சிறுவழுதலை வேர், நெருஞ்சி வேர், ஆக. 5, சித்தமல்லி, பேராமல்லி வேர், கண்டங்கத்திரி வேர், சிறுவழுதலை வேர், நெருஞ்சி வேர், ஆக. 5, நாயுருவி வேர், திரிபலை அவுரி வேர், கடுகுரோகணி, கோஷ்டம், மஞ்சள், மரமஞ்சள், கொன்றைப் பட்டை, மஞ்சி, கார்போக வேர், சிறுகாஞ்சொறி வேர் இது வகைக்கு பலம். உ, கூட்டி பெரிய மிடாவிலிட்டு பதக்கு நீர் விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி யிறுத்த கசாயத்தில் நெய் படி. 1½ விட்டு கடைத் திரவியம், சிறுதேக்கு, வட்டத் திருப்பி வேர், சிவதை வேர், நாகந்திக் கிழங்கு, மருதோன்றி யிலை, திரிகடுகு, கடுகுரோகணி, வெள்ளறுகு, நிலவேம்பு, நத்தைச் சூரி வேர், நன்னாரி வேர், மாகாளிக் கிழங்கு, கொடிவேலி வேர், வஞ்சப் பட்டை இது வகைக்கு விராகனிடை. உ, அரைக்கிறது வெள்ளை நொச்சி சாத்தில் அரைத்து முன் நெய்யிலே போட்டுக் கலக்கி பசுக் கோமியம் படி. 4, பால் படி. க, தயிரு படி. க விட்டு மெழுகு பதத்திலே வடித்துக் கொடுக்கவும். தினம் பெரிய கட்டிடை ஏழு நாள் சாப்பிட்டு வரவும். தீரும் வியாதி அஸ்தி சுரம், முயல்கன் வலிப்பு, அஷ்டகுன்மம், எலும்புருக்கி, பாண்டு சோபை, பீலிகை மூலம், காமாலை பவுத்திரம் இவை தீரும். பத்தியம் உப்பு முதல்க் கொண்டு ஆகாரம். ஏழா நாள் மறு பத்தியத்திலே உப்பு வறுத்து கூட்டவும்.

அண்ட வாதத்துக்கு:-

முடக் கொத்தானென்றுங் கசாயம் வைத்து யிறுத்து ஆமணக்கு எண்ணை குத்திக் கொடுக்கவும்.

(வேறு)

கள்க் கொட்டிப் பருப்பைப் பொடி செய்து அதின் இலைச் சாறு வார்த்து பிசைந்து காய வைத்து சூரணத்தை எடுத்து வெருகடிப் பிரமாணம் சூரணத்திலே ஆமணக்கெண்ணையைக் குத்திக் குழப்பிச் சாப்பிடவும். மூன்று நாளாறு பொழுது சாப்பிடவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். அண்ட வாதந் தீரும்.

கழல் பருப்பு, முடக் கொத்தான் கொடி, சுக்கு, சவுரிக் கொத்து, வெள் ளள்ளி, பேரரத்தை, வசம்பு, மிளகு கருஞ்சீரகம்பிளி, கருக்கி கசாயத்துடனே கூடப்

போட்டுக் கசாயமிட்டு விளக்கெண்ணெய் குத்தி மூன்று நாளைக்கு பொழுது கொடுத்து மா பாகமாகக் கால் பெருவிரலிலே சூடு சுட்டவும். பத்தியம் உப்பு, புளி முதலாகாது. அண்ட வாதந் தீரும்.

பாவட்டை யிலைச் சாறு, முடக் கொத்தான் சாறு, திருகு கள்ளிச் சாறு. சாரணைச் சாறு, களக்கொட்டிச் சாறு, எருமைப் பாச்சான் சாறு, வெள்ளறுகுச் சாறு இவை வகைக்குச் சாறு படி.½, விளக்கெண்ணெய் படி.௨, கூட விட்டுக் கடை மருந்து வசம்பு, தம்புராஷ்டம், மிளகு இது விராகனிடை. பொடித்து எண்ணெயிலே போட்டு மெழுகு பதத்தில் வடித்து ஏழு நாள் கொடுத்து மறு பாகம் காலில் பெருவிரலிலே குறுக்காகச் சுடுவது. அண்ட வாதந் தீரும். உப்பு முதலாகாது.

<u>மந்திஉஷ்டிக் கிருதம்:-</u> (கிரந்திமை நஷ்டத்திற்கு)

மந்திஉஷ்டி, அதிமதுரம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வங்காளச் சர்க்கரை, கீழாநெல்லி, ஓமம், மரமஞ்சள், பெருங்காயம், கடுகு ரோகிணி, நிலப்பனை வேர், தேள் கொடுக்கு வேர், அமுக்கிரா வேர், நீர் வள்ளிக் கிழங்கு இது வகைக்கு விராகனிடை.2¼ கொண்டு பசுவின் பால் விட்டரைத்து எண்ணெய்ச் சட்டியில் போட்டு ~~போட்டு~~ பசுவின் நெய் படி.1½, விட்டு பால் நாழி விட்டு மெள்ள மெள்ள எரித்து மெழுகு பதமான வாறே செம்புச் சட்டியில் வடித்து தினம் பெரிய துட்டிடை.௧ உள்ளுக்கு வாங்கிக் கொண்டு வரவும். இப்படி 7 நாள் சாப்பிட்டு எட்டா நாள் பத்தியம் முறிக்கவும். இதில் தீரும் வியாதி இந்திரிய நஷ்டம், உஷ்ணரோகம், உள்க் காச்சல், எலும்புருக்கி, பித்தரோகம், தலை கிறுகிறுப்பு, பெண்களுக்கு மலடு தீரும். மூதேவி விட்டுப் போம், லக்ஷ்மி கரமுண்டாம். அழகுண்டாம். அந்த உடல் மோட்சத்தை அடையும்.

<u>பாண்டுவுக்குப் பஞ்ச மூலக் கிருதம்:-</u>

சுக்கு, திப்பிலி, செவியம், கொடிவேலி, சிறுமூலகம், சாரணைக் கிழங்கு, <u>விழுதி வேர்,</u> சத்தி சாரணைக் கிழங்கு (சிறு கொள்ப் பெருயிடு கொள்ளு) நீர் வள்ளிக் கிழங்கு சங்கங் குப்பி வேர் இலை அரத்தை இது வகைக்கு பலம்.௧, சேர்த்துப் பெரிய பானையில் போட்டு எட்டு மரக்கால் தண்ணீர் விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி வடித்து நாழி நெய் கூட விட்டு பால் படி.௨, நெல்லிக்காய்ச் சாறு படி.௧, கரிசிலாங் சாறு படி.௧, வெள்ளாட்டுக் கோமியம் படி.4 அது வேறே காய்ச்சி நாலொன்றாக பிறகு கூட விடவும். விட்டு கற்கம்.

மேதை மகா மேதை பெருங் குமிழங்காய், செங்கழுநீர், கிழங்கு, திப்பிலி, முந்திரிப் பழம், ஆனைத் திப்பிலி, பேரீச்சம் பழம், தாமரை விரை, சாரணைக் கிழங்கு, சுக்கு, தேள் கொடுக்கு வேர் சிறிலைத் தாமரை சிறுவழுதலை, கண்டங் கத்திரி, கற்கடசிங்கி, செவியம், பூனைக்காலி விரை இது வகைக்கு பலம்.௧, பசும் பால் விட்டு அரைத்து கூடப் போட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு ஏழு நாள் சாப்பிடவும். இதில் தீரும் வியாதி பாண்டு விக்கல், மந்தக் குரல், பவுத்திரம், பாரிச சூலை, விஷரோகம், சுவாசம், மேலிளைப்பு, பீலிகை சொணிவாதம், முயல் வலிப்பு, கல்லெரிப்பு, தண்டில் சக்கரச் சரீரம் பலமுண்டாம். அழகுண்டாம். தன முண்டாம். மயிர் கழியிறது மயிர் முறியிறது நுனி மயிர் பிளக்கிறதுகளெல்லாந் தீரும். ஆயுசும் தாது வர்திக்கும். புத்திர உற்பத்தியுண்டாம்.

<u>மகோதரத்துக்கு சமுத்திராசித்திக் கிருதம்:-</u>

சமுத்திரா சித்தி யென்கிற சிப்பியின் சதை பலம்.௨, வெள்ளுள்ளி பலம்.௨ இது உ வகையும் ஒரு பானையில் போட்டு ஆறு படி தண்ணீர் விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி வடித்து அதிலே பசும் பால் பதக்கு விட்டு நெய் படி.௨, விட்டு கற்கம் பெருங்காயம், ஓமம், சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு, திரிகடுகு, செவியம்,

செங்கொடி வேலி, நல்ல கொடி வேலி வேர், முருங்கை வேர் அவுஉங்சாரந் தவற் சீவை ஆனைத் திப்பிலி, புளியருனைக் கிழங்கு, சிறுமூலகம் இது வகைக்கு விராகனிடை.உ, பசும் பாலில்அரைத்து முன் நெய்யிலே விட்டு மெழுகு பதமாகக் காய்ச்சிக் காலமே கொடுக்கவும். இதில் தீரும் வியாதி மேல் வயத்திலே பொட்டுப் போலே இருக்கிற பிலிகை அந்தர வாய்வு குன்மம், அடி விதைக்தனி வீக்கம் நீர்க் கோவை, மகோதரம், இவைகள் தீருமென்ற வாறு யோனியாலே கட்டியாக உதிரம் வாறதுக்கு அஉட்ட கசாயக் கிருதம்.

<u>சதவரிக் கிறதம்: பற்பம்:-</u> 6.11.63.

இலைக் கள்ளிப் பட்டை இலை, செவியம், கொடிவேர், செண்பகயிலை, விலாமிச்சை இலை, ஆயல் பட்டை, புங்கம்பட்டை, உத்தாளி யிலை இது வகைக்கு பலம்.உ, இந்த மருந்துகள் கூடின பலங் கல்லுப்புக் கூட்டி ஒரு பானையிலிட்டு மேல் மூடி மண் செய்து எருவில் வைத்து புடம் போடப் பற்பமாம். இதை எடுத்து வைத்துக் கொண்டு அப்ப உருக்கின நெய்யில் இந்தப் பற்பம் போட்டு சாப்பிடவும். இதில் தீரும் வியாதி வாத குன்மம், வெப்பு பாவை, வயறு உப்புல், பொருமல், வாய்வுகளெல்லாம் போகு மென்ற வாறு.

<u>சதவரிக் கிறதம்:-</u>

நீர் வள்ளிக் கிழங்கு தோலரித்து அவைத்து பானையில் போட்டு நாலு வள்ளந் தண்ணீர் விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி இறக்கி ஆறின பிறகு கோத்து போக்கி அதிலே நாழி நெய் விட்டு பதக்குப் பால் விட்டு (கற மகா கோழி சாகோழி மேதை மகா மேதை சிறு விடு கொளப பெருவிடு கொள சிவக மயவ வகம்) அதிமதுரம், நீர் வள்ளிக் கிழங்கு, என்கிற தண்ணீர் விட்டான் கிழங்கு, முந்திரிப் பழம், சித்தீசன், செ குருந்து திப்பிலி பலம்.க, மக்த. மருந்து யெல்லாம் வகைக்கு பலம்.க, கூட்டிப் பால் விட்டு அரைத்து முன் நெய்யில் போட்டுப் பதமாகக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும் காலமே சாப்பிடவும். இதில் தீரும் வியாதி பாலச் சுருதி போம். யோனியிலுண்டான ரெத்தம் போம். சோபத்தைப் போக்கும். தாது வர்த்திக்கும். கெறப முண்டாம். க்ஷயமெல்லாந் தீரும். யோனியிலே ரெத்தம் கட்டியாய் விழுகிறது காச சுவாசம், சுவாச காசம், மேலிளைப்பு, பித்தம் வலி மகா முளை வாத உபத்திரம், விஉந பாகம், நெஞ்சியுண்டா வியாதி தலையிலுண்டான வியாதி முயலகன் சத்தி உம்மாதம் உஉங்ஙங்கள் தீர்ந்து உடனே கெற்ப முண்டாம். ஸ்திரீகள் பித்தம் போக்கும். இந்த நெய்யிலே புஉடி யான சூரணத்தைக் குழைத்துக் கொள்ள யோனி சோபம் போமென்ற வாறு.

<u>க்ஷயரோகத்துக்கு சவ்வாசு கிறதம்:-</u>

முகலச்சை கூறு எட்டு படி தண்ணீர் விட்டு நாலொன்றாய்க் காய்ச்சிக் கசாய மிறுத்துக் கொண்டு ஆடாதோடைச் சாறு படி.½, நெய் படி.க, கூட விட்டு கற்கம், தேவதாரம், விழலரிசி, அமுக்கிரா வேர், முத்தக்காசு, மஞ்சள், சீரகம், இப்பைப்பூ, திப்பிலி, யரத்தை, கற்கடக சிங்கி, சிறுதேக்கு நன்னாரி வேர், காகோழி, சாகோழி, சுக்கு, அதிமதுரம், நவறத்து பிறுதி கற்கண்டு, வங்காளச் சனி சிறுவிடு கொள் பெருவிடு கொள் இவை வகைக்கு விராகனிடை.1½, கூட்டி அமுக்கிரான் சாறு விட்டு அரைத்து முன் கசாயத்திலே பழங் கருப்புட்டி பலம்.10, போட்டு பாகு பண்ணி கற்கம் அரைத்த மருந்தெல்லாம் போட்டு பதமாகக் காய்ச்சி லேகியமான பிறகு நெய்யை விட்டுக் கிளற வேண்டியது. கிளறி யெடுத்து வைத்துக் கொண்டு தின்று வரவும். இதில் தீரும் வியாதி க்ஷயரோகம், காசம், சுரம், இரத்தம், பித்தம், அருசுவி வாசம், குன்மம் இவை தீரும்.

<u>காமாலைக்கு புட்லாதி கிறதம்:-</u>

கடுக்காய், கீழாநெல்லி, அவுரி வேர், கய்யாந்தகரை சமூலம், சாரணைக் கிழங்கு, சிவதை வேர் இது வகைக்கு பலம்.உ, கூட்டிப் பதக்கு நீர் விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி யிறுத்துக் கொண்டு கற்கம் சுக்கு சீரகம், கருஞ்சீரகம், வாய்

விளங்கம். திப்பிலி, இந்துப்பு கடுக்காய் இவை வகைக்கு விராகனிடை.3 கூட்டி அந்தக் கசாயத்தை விட்டு அரைத்து வடகம் பண்ணி தினம் சாப்பிடவும். காமாலை பாண்டு சோகை இவைகள் தீரும். பத்தியம், உப்பு, புளி புகை தவிர்க்கவும்.

குலைப் புண்ணுக்கு மருந்து :-

கமுகதழை யிலை, சாதியிலை, கருநொச்சியிலை, செருப்படி யிலை, தவசி முருங்கை யிலை, நஞ்சுண்டான் வேர்ப் பட்டை, ஈர வெங்காயம் இவை யெல்லாம் நொறுங்க இடித்து சித்தாமணக்கெண்ணெயில் வேக வைத்து இலை முறுகின பதத்திலே வடித்து வைத்துக் கொண்டு பனிரெண்டு நாள் கொள்ளவும். சரீரம் மாதா பெத்த மேனியாம். சங்கன் குப்பி யிலை கூடப் போடவும். புளி புகையாகாது. குப்பை மேனிச் சாறு விட்டு உப்பு வறுத்துக் கொள்ளவும்.

நீர்க் கடுப்புக்கு மருந்து :-

ஞாப்பாலை வேரரைத்து மணப் பாகுங் காராட்டுப் பாலுங் கலந்து கொடுக்கவும். தண்ணீரிலே விளக்கெரிய சிறுகீரை வேர், கெந்தகம் பொடி பண்ணிச் சீலையிலூட்டித் திரிச்சுத் தண்ணீர் வார்த்து விளக்கெரிக்க எரியும்.

வயத்தில் செத்த பிள்ளை விழ :-

இந்துப்பு, சங்கம்வேர், காடித் தெளிவிலரைத்துக் கொடுக்க வயத்திலே செத்த பிள்ளை விழும்.

அஞ்சனமை :-

மூக்குறட்டை வேர், சுட்டுக் கரியாக்கிப் பசுவின் நெய்யில் சாரித்து உள்ளங் கையிலிட்டுப் பார்க்க களவு யின்னதென்று சொல்லும்.

விநோதம் கறடி எலும்பு அரைத்து தேனில் குழைத்துக் கண்ணிலிடவும். இந்த விநோதம் யிந்திர கோபத்தைப் பொடி செய்து சிவந்த சீலையில் பொடி செய்ததை வைத்து திரிச்சு செப்புக் கிண்ணியிலெண்ணெய் வார்த்து திருவிளக்கிட உதிரமாகத் தோன்றும். மின்மினிப் புழுவை அரைத்து பயறு போலே உருண்டை செய்து குயவன் சூளையிலே போட வேகாது. செம்பு போட மாறும். பிறகு வேகும். இந்தப் பொடியைச் சுண்ணாம்புடனே தின்னப் பெரும் பாடாகும். சுக்கு தின்ன மாறும்.

மகோதரத்துக்கு எண்ணெய் :-

எருக்கிலைச் சாறு கரந்தைச் சாறு, விழுதிலைச் சாறு, நீர் மேல் நெருப்புச் சாறு, நொச்சிச் சாறு, யிஞ்சிச் சாறு, குப்பை மேனிச் சாறு இவை வகைக்கு சாறு படி.3/4 கூட்டி விளக்கெண்ணெய் படி.4 கூட்டி விட்டு கற்கம் குப்பை மேனி வேர், சுக்கு, திப்பிலி, செவியம், கொடிவேலி வேர், சிறுமூலகம், தேவதாரம், தாரணைக் கிழங்கு, அரத்தை சதகுப்பை, மஞ்சிட்டி, அமுக்கிரா வேர், கோஷ்டம், மிளகு, கிராம்பு, சிறுநாகப்பூ, ஓமம், சீரகம், கருஞ்சீரகம், பெருங்காயம், கல்லுப்பு, இந்துப்பு, வெடியுப்பு, அவட்சாரம், சவர்ச்சிகை, சிவதை வேர், கடுக்காய், வசம்பு இவை வகைக்கு விராகனிடை.உ கூட்டி நொச்சி சாறு விட்டரைத்து முன் எண்ணெயில் போட்டு கள்ளிப் பால் படி.$\frac{1}{2}$ விடவும். இதில் தீரும் வியாதி வாதப் பொருமல் குன்மம், பீலிகை பாவை, வெப்பு பாவை, பிறதட்டி மகோதரம், பெரு வயறு கெர்ப்ப விப்புருதி, அடி வயத்துக் கழலைமமத்தும் வாதத்திலெழுந்த வியாதி களுந் தீரும்.

எரிச்சல், உள்க் காச்சல், பழங் காச்சலுக்கு மோர் எண்ணெய் :-

பசுவின் மோர் படி.3, நல்லெண்ணெய் படி.$1\frac{1}{2}$, கூட விட்டு கற்கம் பேரரத்தை சுக்கு, கோஷ்டம், சந்தனம், மலைமஞ்சள், அதிமதுரம், முத்தக்காசு, திப்பிலி, குருந்தொட்டி, பொன் மெழுகு இந்துப்பு, நன்னாரி வேர், பெருங்குரும்பை தேவதாரம்

கடுகுரோகணி, விலாமிச்சம் வேர், கடல் நுரை, முசுமுசுக்கை முட்டைப் பால் இது வகைக்கு பலம்.க கூட்டி மோரிலே யரைத்து முன் எண்ணெயிலே கரைத்துக் காய்ச்சி மெழுகு பதமாக வடித்து தினம் தட்டிடை உள்ளுக்குக் கொள்ளப் பழைய சுரம், அஸ்தி சுரம், உட் காச்சல் உஷ்ணரோகம், மேலெரிவு, பித்த மயக்கம் இது தீரும். பத்தியம் உப்புக் கூட்டிக் கொள்ளவும்.

<u>வயத்துப் புழுவுக்கு பேதி, மேலிளைப்புக்கு கசாயம்:-</u>

கடுக்காய்.உ, வேப்பீர்க்கு.10, இது இரண்டும் பிரண்டைச் சாறு விட்டு நன்கு அரைத்து விளக்கெண்ணெ தட்டிடை.உ விட்டுச் சற்றே வெதுப்பிச் சாப்பிடவும். பேதியாகும். வரட்டுப் புழு, திமிரி திரிப் புழு மற்று முள்ள புழுவெல்லாம் விழுந்து போம். பிறகு வெந்நீர் மேலே விட்டுக் கொண்டு சாப்பிடவும். சித்தாமணக்கம் வேர் முருங்கை வேர், வெள்ளுள்ளி, சாரணைக் கிழங்கு இது வகைக்கு பலம்.க, கூட்டி தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி இறுத்து விளக்கெண்ணெ சுத்திச் சூட்டுடனே கொடுக்கவும். மேலிளைப்பு, ப்லிகை வாய்வு, மகோதரம், அட்டிலை குன்மம், இது தீரும். பத்தியம், புளிப் புகை யாகாது, இப்படி மூணு நாளாறு பொழுது கொடுத்து மறுபடி முன்னெண்ணெ பண்ணிக் கொடுக்கவும்.

<u>பிள்ளை பிறந்து செத்துப் போறதுக்கு எண்ணெ:-</u>

மரவெண்ணெ படி.உ, ஈர வெங்காயம் படி.க, உரிச்சு அரிஞ்சு எண்ணெயிலே முன்னே போட்டுப் பொன்னிறமான பிறகு மிளகு படி.$\frac{1}{4}$, சீரகம் படி.3/8 வெந்தியம் படி.1/8, சுக்குத் தேநு.4 வெள்ளுள்ளி.4 கூட்டி இது ஐந்தும் பொடி பண்ணிக்கூடப் போட்டு பிறகு வெங்காயங் கிழங்கு சூரணம் படி.3/8 தூவிக் கிளறி எண்ணெ பிரிந்த பதத்திலே வடித்துக் கரல் மண்டலங் கொள்ளவும். பத்தியம் கார்ப்பு, புளிப்பு, புகை விடவும். வயறு கழியும். குளிர்ந்த தண்ணீர் தொடாமலிருக்கவும். வியாதி குணமாகி பிறந்த பிள்ளைகள் சாகாமல் பிழைக்கும். கிரந்தி தீரும். சூலைக் கட்டு விழும். நல்ல மருந்தும் பேதி வாங்கலாம். இந்தக் கடுகு எலுமிச்சங் காயளவு அரைத்து வெந்நீரிலே கொடுக்கப் பேதிக்குஞ் சரீரஞ் சுகமாயிருக்கும்.

<u>கணத்துக்கு எண்ணெ:-</u>

கோழியவரை வேர் பலம்.க, பொன்முசுக்கன்னி வேர் பலம்.க, சிறுக்கீரை வேர் பலம்.க, வேப்பீர்க்கு பலம்.$\frac{1}{2}$ புளியீர்க்கு பலம்.$\frac{1}{2}$, நெல்லி யீர்க்கு பலம்.$\frac{1}{2}$, இளநீர் படி.$\frac{1}{2}$, ஈர வெங்காயம் சாறு படி.$\frac{1}{2}$, கம்பஞ் சோற்றுப் பழநீரு படி.$\frac{1}{2}$ பசும் பால் படி.$\frac{1}{2}$, சாறு வகையை மாத்திரம் எண்ணெச் சட்டியிலே விட்டு விளக்கெண்ணெ படி.1$\frac{1}{2}$, கூட விட்டு வைத்து ஒரு நாள் போன பிறகு கடை மருந்து யீர்க்குகள் வேறு வகையும் கரிசிலாங் கண்ணிச் சாறு விட்டு அரைத்து எண்ணெ சாறு விட்டு இருக்கிற சட்டியிலே போட்டு ஈருள்ளி சிவந்ததே பதமாய் வடித்துக் கொண்டு உள்ளுக்கு கொடுக்க கணமென்பது சோகை கணம் முக்கு கணம் வறக்கணம், உடம்பிலே உள்க் காச்சல் இதுகள் தீரும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும்.

<u>காதிலே சீழ் விழுகிறதுக்கு எண்ணெ:-</u>

இலுப்பைப்பட்டைச் சாறு படி.$\frac{1}{4}$, கிரந்தி நாயகச் சாறு படி.$\frac{1}{2}$, அமுக்கிலான் சாறு படி.$\frac{1}{4}$, தவசி முருங்கைச் சாறு படி.$\frac{1}{4}$, ஆமணக்கு எண்ணெ படி.க, சாறுகளும் எண்ணெயும் கூட விட்டு கற்கம் வசம்பு வெள்ளுள்ளி, செங்கத்தாரிப்பட்டை, அவுரி வேர்ப் பட்டை, மீச்சங் கொட்டை வேர்ப் பட்டை இது ஈச்சங் கொட்டை பிலைச் சாற்றிலரைத்து எண்ணெயில் போட்டு வெள்ளுள்ளி நறுக்கிப் போட்டு அது சிவக்க காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு காதிலே சுத்திச் சீலையாலடைத்துக் காதைச் சுத்தி நெருஞ்சிக் காயரைத்துப் பூசவும். இதில் தீரும் வியாதி காதுச் சீய், செவிடு, எழிச்சி காதிலே எரைச்சல், தலைவலி, மண்டைக் கரப்பான் தீரும்.

சோபைக்கு சுகுமார ரசாயனம்:-

தசமூலம் வகைக்கு பலம்.10, சாரணைக் கிழங்கு, தெற்பைப்புல் வேர், நாணப்புல் வேர் வகைக்கு பலம்.5, இது கொண்டு வந்து குறுனையாய் நசுக்கி இடித்துப் பெரிய குடாரப் பானையில் போட்டு ஏழு நாள் மட்டும் அடுப்பிலே வைத்துப் போக வரவும் எரியிட்டு பதினாறிலே ஒரு பங்காக்கி யிறுத்துக் கொண்டு அதிலே நல்ல வெல்லம் பலம்.30 கரைத்து நெய் படி.½, ஆமணக்கெண்ணை படி.½, கூட விட்டு மெள்ள மெள்ள யெரிக்கக் குறுகி வரச்சே கடை மருந்து அரப்பொடி, திப்பிலி, திப்பிலி மூலம், இந்துப்பு, அதிமதுரம், இலுப்பைப் பூ, முந்திரிப் பழம், தவரை, சுக்கு இது வகைக்கு விராகனிடை.உ சூரணம் பண்ணிக் கூடப் போட்டுக் கிளறிக் காய்கிற பதத்தில் தாலத்தில் தண்ணீர் விட்டு அதிலே வைத்துக் கரையாத பதத்திலே இறக்கி நாழி தேன் விட்டு கிளறி எண்ணெய் பானையாகுதல், நெய்ப் பானையாகுதல் வைத்துக் கொண்டு காலமே சாப்பிடவும். விஷயகபுசை பண்ணிச்சாப்பிடவும். இதுக்குச் சுகுமாரகுக இளமை பிறக்கும். அனேகங் கால மிருப்பார்கள். இவன் வார்த்தை ஸ்திரீகளுக்கு இஷ்டமாயிருக்கும். லெட்சுமி கரமுண்டு. கவிஜசனமாம். சார்வா காலத்திலும் யிந்திரியம் போங்கும். உதரம் பொருமல் தலைப் போக்கும். ஈசுவரனைப் போலே சுகமா யனேகங் காலமிருப்பன். மழை வடுப்போம். அழகுண்டாம். இளைத்தவன் பருப்பன். அல்லாமலும் குன்மம் கெற்ப விப்புருதி மூலம் யோனிச் சூலை வாய்வு சொர்ரை வீக்கம் பீலிகை இவை தீரும். ஆலிங்கனம் நிற்கும்.

பெருஞ் சொறிக்கு அரக்குத் தயிலம்:-

அரக்கு சேர்.4-க்கு தண்ணீர் படி.4 விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி யிறுத்துக் கொண்டு அதிலே பேராமுட்டி வேர் நன்னாரி வேர் அமுக்கிறா வேர் இது 3-ம் யிடித்து தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி இறுத்து படி.½ இளநீர் படி.உ ஆக படி.2½யும் அடுப்பிலே வைத்து இதுக்குக் கற்கம் மரமஞ்சள், அரேணுகம், கோரைக் கிழங்கு, பூலாங்கிழங்கு, சந்தனச் சிராய், அதிமதுரம், கடுகுரோகணி, அரத்தை கண்டு பறங்கி வாய் விளங்கம், வகைக்கு விராகனிடை.2½ இது கூட்டி மருள் கிழங்குச் சாத்திலரைத்து முன் கசாயத்திலே போட்டு விளக்கெண்ணை படி.உ, கூட விட்டு மெழுகு பதத்தில் வடித்து மேலும் பூசவும். உள்ளுங் கொள்ளவும். இதில் தீரும் வியாதி அஸ்தி சுரம், குஷ்டரோகம், சுவாசம், மேலிளைப்பு, பித்தம், வறட்சி, சொறி சிரங்கு, தினவு கை கால் மேல் கறுப்பு திரேக தோஷமிவ வெல்லாந் தீரும். சரீரம் பிறகு அழகுண்டாம். பத்தியம், புளி புகை தவிர்க்கவும்.

ஐந்து வித யிருமலுக்கு அவாதேசித் தயிலம்:-

கரிசிலாங் கண்ணிச் சாறு அவுரிச் சாறு, ஆடாதோடைச் சாறு, சிறுவழுதலைச் சாறு, தேள்க் கொடுக்கு யிலைச் சாறு, பொடுதலைச் சாறு, வெள்ளை நொச்சிச் சாறு, விசாமுட்டிச் சாறு, தீயா நெல்லிச் சாறு, சங்கிலைச் சாறு கழல வாரைச் சாறு இது வகைக்கு படி.½ கூட்டி யிதிலே விளக்கெண்ணை படி.1½, இரண்டு நாளூறின பிறகு கற்கம் திப்பிலி கொடிவேலி வேர், வசம்பு, வெட்பாலை யரிசி, அழிஞ்சி விரை சிறுமூலகம், முத்தக்காசு, சுக்கு, அதிவிடையம், காட்டா மணக்கு வேர், யிஞ்சி, மிளகு, ஆனைத் திப்பிலி, சீரகம், சிறுதேக்கு, பெருங்குரும்பை யரிசி, பெரு மரத்துப் பட்டை, ஓமம், கடுகு, பெருங்காயம், கடுகுரோகணி, விழலரிசி இது வகைக்கு விரா கனிடை.க, கூட்டி அரைக்கிறது. நொச்சிச் சாத்திலரைத்து முன் எண்ணெயிலே போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்திலே வடித்து நாட்டிடை உள்ளுக்குக் கொள்ளவும். இகி.ல தீரும் வியாதி ஐந்து வித யிருமல், மேல் மூச்சு ஈளை, மூக்கு நீர்ப் பாச்சல் குன்மங்கள், உள்மாந்தை, நெஞ்சிலே உள்ள வியாதியும், சூலை மூல வியாதி பீலிகை, மகோதரம் வயத்தில் புழு, சுவாச காசம், சிறுயிருமல் ஒரு பக்கத்துச் சூலை, வயறு பொருமல், கிருமி இது முதலானதுந் தீரும். பத்தியம் கைப்பு, புளி, புகையாகாது.

கடி விஷத்திற்குத் தயிலம்:-

வேம்பின் மேல் பிருணி புளியின் மேல் பிருணி விளாமேல் பிருணி உசிலை மேல் பிருணி கொடிக் கள்ளி மேல் பிருணி வெள்ளாட்டுப் புழுக்கை பருத்திக் கொட்டை இது சமஎடை கொண்டு உலர்த்தி ஒரு மிடாவில் வைத்து பெருந் தொடை மட்டு மாழமாகக் குழிவெட்டி அந்தக் குழி நடுவே சிறு குழி தோண்டி அதற்குள்ளே எண்ணைக் கலசம் வைத்து அது மேல் ஒரு கலசம் வைத்து அதனடியில் இரண்டு காசு அகலம் துளைத்து இரண்டு கலசத்தினிசை தலையிற் சீலை மண் செய்து ரெண்டு கலசமுங் குழிக்குள்ளே வாயளவாக மூடி அதின் மேலே ஒரு சட்டி வைத்து சட்டி அடியிலே இரண்டு காசு அகலம் துளைத்து சட்டிக்கு கட்டளவு குழைத்த மண்ணை அரைந்து அந்தச் சட்டியின் மேலே மிடாவைத்து மிடாவின் வாய்க்குப் பச்சை வேப்பங் காம்பைக் கொண்டு வந்து தாறுமாறாகத் தைத்து அந்த மிடாவைச் சட்டியின் மேலே கவுத்து கவுத்த விப்புக்குச் சீலை மண் செய்து மிடாவைச் சுத்தி வறண்டு யிருக்கிற எருமுட்டை யடுக்கி மிடாவுக்கு மேலே ரெண்டு சாண் எருவடுக்கிக் குழிக்குள்ளாக அடக்கமாக அமுக்கி நெருப்பை அடியிலும் மேலும் நடுவிலும் வைத்து ஒரு நாள் கிடந்து மறுநாள் எடுக்கும் போது அசையாமல் எடுத்துக் கொள்ளவும். இந்தப் படி தயிலங் களானதுக்கு கெல்லா மிது திட்டம். இந்தப் படி வைத்து எடுக்கவும்.

இன்னமொரு வகை தயிலம்:-

குதிரைக் குளம்பு பார்த்து எடுத்து வந்து உளியிலே சிராயாகச் சீவி மிடாவில் வைத்து முன் போலே வைத்து சகல கடிக்கும் மிடலாம். பொருக்கும். யினமொரு வகைத் தயிலம்:-

சிவனார் வேம்பு சமூலம் கொண்டு வந்து நருக்கி புணர்த்தி முன் போலே தயிலம் வைத்து எடுத்து சகல கடிக்கும் ஆகும். தீரும்.

கண் புகைச்சல் எரிவுகளுக்கு சந்தனாதி தயிலம்:-

சந்தனம் பலம்.உ, விலாமிச்சம் வேர் பலம்.க, யிருவேலி வேர் பலம்.½, இது மூன்றும் நிறை ~~நிறை~~ அதிமதுரம் பலம். 3½ அகில் பலம். 2½, ஏலம் பலம்.க, லவங்கம் பலம். 1¼, ஆக பலம். 12 இதுக்குத் தண்ணீர் படி. 16 இது நாலொன்றாய்க் காய்ச்சி யிறுத்து இதில் இளநீரு படி. 8, பசும்பால் படி. 8, நல்லெண்ணை படி. 1½, விட்டு அகில் கற்கம் மஞ்சிஷ்டி அஞ்சனக் கல்லு நன்னாரி வேர் முத்தக்காசு, கடுகு ரோகணி, கற்கோலம், தகரம், சாதிக்காய், செஞ்சந்தனம், திரிபலை, சடாமஞ்சி, கோஷ்டம், அதிமதுரம், ஏலம், லவங்கம், பச்சிலை, நாகப்ப, விலாமிச்சம்வேர், அகில் கஸ்தூரி மஞ்சள் அடவிக் கச்சோலம், புழுகு பச்சைக் கற்பூரம் இது பொடி செய் போட்டு நல்ல முகூர்த்தத்திலே வடிக்கவும். இந்தத் தயிலம் மூன்று நாளைக்கொருக் கால் தலை முழுக இதில் தீரும் வியாதி பயித்திய விகாரம், கண் புகைச்சல், எரிச்சல், சிவந்த கண்கள் இது தீரும். கன்னரோகம், நாசரோகம் இவை யெல்லாஞ் சடுதியில் போம்.

மகா சந்தனாதி தயிலம்:-

சந்தனம் பலம். 8, விலாமிச்ச வேர் பலம். 8, பதினாறு படி தண்ணீர் விட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சி யிறுத்து அதிலே நல்லெண்ணை படி. 1½ விட்டு கற்கம் கோஷ்டம், முத்தக்காசு, அதிமதுரம், கைச்சோலம், அடவிக் கச்சோலம், மஞ்சிஷ்டி அஞ்சனக்கல்லு, சாதிக்காய், சந்தனம்; செஞ்சந்தனம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், விலாமிச்சம் வேர், நன்னாரி வேர், செண்பகப்பூ, ஏலம், வாலுகம், பச்சிலை நாகப்பூ, மாஞ்சில், செங்கழுநீர்க் கிழங்கு, தாமரை வளையம், கஸ்தூரி மஞ்சள், அரத்தை கடுகுரோகணி, தாழைப்பூவு, செண்பகப்பூவு, பசும்பால், நாழி இளநீர் நாழி இவை வகைக்கு விராகனிடை.உ கூட்டிச் சூரணம் பண்ணி எண்ணையில் போட்டு மெழுகு பதமாய் வடித்து தலை முழுக யிதில் தீரும் வியாதி கண்ணிலுண்டான வியாதி தலை

வியாதி தலையிலுண்டான வியாதி, பித்தத்திலுண்டான வியாதி சேத்துமத்திலுண்டான வியாதி வாயிலுண்டான வியாதி; பிறமேகம், யின்னம் சறுவ வியாதியுந் தீரும்.

பிறமேகத்துக்கு ஏலாதி தயிலம்:-

அத்திப்பட்டை, யிச்சிப் பட்டை, ஆலம் பட்டை, அரசம் பட்டை, மாம் பட்டை, நாவல் பட்டை, ~~கொன்றை, தேத்தான் வேர்ப் பட்டை~~, கடப்பம் பட்டை, மருதம் பட்டை, வஞ்சிப் பட்டை, கொன்றை, தேத்தான் வேர்ப் பட்டை, அழிஞ்சிப் பட்டை கோவைத் தண்டு, யிலந்தை வேர்ப் பட்டை, பாலரசம் பட்டை, வேப்பம் பட்டை, சீந்தி தண்டு, வெள்வேலம் பட்டை, கருவேலம் பட்டை, ஆவாரை வேர்ப் பட்டை, விலாமிச்சம் வேர், நெல்லிக்காய், முத்தக்காசு, அமுக்கிரா வேர், சித்திலந்தை வேர், பட்டை, தலை சுருளி வேர்த் தண்டு இவை வகைக்கு பலம் 9½ கூட்டி ஒரு மிடாவிலிட்டு பத்து மரக்கால் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி யிறுத்து நல்லெண்ணை படி.உ, பசும் பால் படி.3, கூட்டி கற்கம், ஏலம், லவங்கம், கிராம்பு, பச்சிலை, நாகப் பூ, கைச்சோலம், கோஷ்டம், மாஞ்சி, சதகுப்பை, யிருவேலி வேர், கல்மதம், குக்குல கடுகு, குங்குமப்பூ, அறுகம் வேர், வெள்ளறுகு அமுக்கிலா வேர், பொன் மெழுகு, (புன்)னைப்பூ, அழிஞ்சி விரை, காரை விரை, சாதிக்காய், தற்கோலம், சந்தனம், தேவதாரம், மஞ்சள், செங்கழுநீர் கிழங்கு, அதிமதுரம், செஞ்சந்தனம், கருஞ்சீரகம், அவுரி வேர், அகில் சந்தனம், முத்தக்காசு, வேப்பம் பிசின், நெருஞ்சி வேர், நன்னாரி வேர்------தாளிக் கிழங்கு. வெப்பாலை வேர், பருத்தி வேர் பட்டை, கார்போகவரிசி, நற்பாலை முகிள் கொன்றைப் பிசின் விலாமிச்சம் வேர், புழுகு சட்டம் தாமரைக் கிழங்கு அல்லிக்கிழங்கு இவ்வ வகைக்கு விராகனிடை.5 கூட்டி பசும் பாலிலே அரைத்து முன் எண்ணெயிலே போட்டு மெழுகு பதமாய் வடித்து வைத்துக் கொண்டு உள் கொள்ளவும். நசியம் பண்ணவும். மேலுக்குப் பூசவும். இதில் தீரும் வியாதி விஷபாகம், பிறமேகத்தின் மேல் பிளவை, சிரங்கு, புடை விப்புருதி, மத்தகப் புண்களுகள் கண்ட மாலை, ஆறுத புண்கள், வாத பித்த சேற்பத்திலுண்டான வியாதிகள் எட்டு வகை விஷம் மருந்தீடு வகை யின்னம் பல வகை வியாதிகள் தீரும். இந்த தயிலம் ஈசுவர வரத்தாயிருக்கும்.

இன்னமொரு வகை ஏலாதித் தயிலம்:-

ஏலம், செண்பகப்பூ, கற்பூரம், மந்திஷ்டி, கோஷ்டம், நன்னாரி வேர், சந்தனம், விலாமிச்சம் வேர், தாமரை வளையம், கடுகுரோகணி, செங்கழுநீர் கிழங்கு, அல்லிக் கிழங்கு, ஓரிலைத் தாமரை, குங்குமப்பூ, பச்சிலை, சாதிக்காய், தற் கோலம், முத்தக்காசு, குங்குமப்பூ, புழுகு சட்டம் இது வகைக்கு பலம்.க, கூட்டி தண்ணீர் விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி யிறுத்துக் கொண்டு நல்லெண்ணை நாழி விட்டு கற்கம் சந்தனம், ஏலம், விலாமிச்சம் வேர், குங்குமப்பூ, பச்சிலை, சாதிக்காய், புழுகு, கடுகுரோகணி, தற்கோலம் இவை வகைக்கு விராகனிடை.2 கூட்டிப் பொடி செய்து முன் எண்ணையிலே போட்டு பசுவின் பால் படி.க, விட்டு காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு கழுத்துக்கு கீழே பூசவும். உள்ளுக்கு கொள்ளவும். பத்தியம் உப்பு, புளி, புகையாகாது, இதுக்கு தினவு சிரங்கு, பிளவை பிறமேகம், வாத சேட்பம் இதுகள் யின்னம் பல வியாதி தீரும். சரீரம் அழகு கொடுக்கும்.

தலைவலிகளுக்கு அஞ்சன வில்வாதித் தயிலம்:-

வேங்கைச் சிரா்ய் சீந்தி தண்டு, வில்வப் பத்திரி வேர், சிற்றாமுட்டி வேர் இது வகைக்கு பலம்.4 இதை ஒரு பானையிலே போட்டு எட்டு மரக்கால் தண்ணீர் விட்டு நாழிலொன்றாய்க் காய்ச்சி யிறுத்துக் கொண்டு நல்லெண்ணை படி.1½, விட்டு பசும் பால் படி.க, விட்டு கற்கம் அமுக்கிலா வேர், சிற்றாமுட்டி வேர், அரத்தை, திரிபலை, அதிமதுரம், ஏலம், தேவதாரம், மஞ்சள், மரமஞ்சள், சுக்கு,

கைச்சோலம், சிற்றேலம், லவங்கப் பட்டை, பச்சிலை, சாதிக்காய், தக்கோலம், சந்தனம், சந்தனப்பு, புருகு, கும்மப்பு, அகில் இருவேலி வேர், நன்னாரி வேர், விலாமிச்சம் வேர், முத்தக்காசு, தாமரை வளையம், செங்கழுநீர்க் கிழங்கு, சரிலைப்பு, இது வகைக்கு விராகனிடை. 3/4 கட்டி பசுவின் பாலிலரைத்து எண்ணெயில் போட்டுக் கரைத்து மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு முழுகிறது. தலையிலே தயிலம் தேய்த்து பச்சை பயறரைப்பிட்டு முழுகவும். அந்தத் தயிலத்தில் பச்சைக் கற்பூரம் பொடி செய்து போட்டு கட்டி வைக்கவும். இதில் தீரும் வியாதி கறன ரோகம், கனத்திலிரைச்சல் தலைநோக்காடு, கண்ணிலுண்டான வியாதியுள் முகத்திலுண்டான வியாதியுள் வாத சிலேஷ்டு மத்திலுண்டான வியாதியுள் பீனிசம், மூக்கு நீர்ப் பாச்சல் இதுகள் தீரும். இந்தத் தயிலத்துக்கு கசாயம் பனிரெண்டு நாள் கொதிப்பித்து ஆறிக் காய்ந்த பதினைந்துநாள் எண்ணெய் விட்டு அதுக்கு மூணுநாள் பால் விட்டு மறுநாள் கற்கம் போட்டுத் தயிலம் வடிக்கவும்.

மண்டை வலி முகத்திலுள்ள வியாதிகளுக்கு திரிமூலத் தயிலம் :-

தாழைப்பூவையும், உள்ளி மடலையும் வேகிற எண்ணெயில் சீறிப் போட்டு முன்னை வேர் பாதிரி வேர், பெருங்குமிழம் வேர், பெருவாகை வேர், வில்லை வேர், கண்டங்கத்திரி வேர், நெருஞ்சி வேர், சித்தமல்லி வேர், பேராமல்லி வேர் இந்த பத்து வகையும் வகைக்கு பலம். 5 கட்டி இடித்து பானையிலே போட்டு நாலு மரக்கால் தண்ணீர் விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு கற்கம் சுக்கு, திப்பிலி, மிளகு தேவதாரம், கோஷ்டம், ஏலம், சரிலைத் தாமரை, நாணப்புல் வேர், கொத்தமல்லி சடாமஞ்சி இந்துப்பு வெட்டி வேர், விலாமிச்சம் வேர், லவங்கம் சாதிக்காய், சமுத்திராப் பச்சை, தாளிச பத்திரி, கோரைக் கிழங்கு, நன்னாரி வேர் இது வகைக்கு விராகனிடை. 8 கட்டி பசும் பாலிலரைத்து முன் கசாயத்தில் போட்டு நல்லெண்ணை படி. உ விட்டு கலக்கி அடுப்பில் வைத்து மெழுகு பதமாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு உள்ளுக்குங் கொள்ளவும். மேலுக்குந் திமிரிட்டு தலைக்குந் தேய்த்து முழுகவும். இதுக்குத் தீரும் வியாதி தலைவலி, மண்டை வியாதி, வாதம், முகவாய்வு, சேத்தும கார்ச்சல், சன்னி, அஸ்திசுரம், க்ஷயம், மண்டை வியாதி யெல்லாம் போம். பத்தியம் இச்சா பத்தியம்.

சகல சன்னிக்கும் புகை தயிலம் :-

சங்கம் வேர், சங்கங்குப்பி, வெள்ளெருக்கம் வேர், ஆடுதின்னாப் பாளை வேர், பொன்முசுட்டை வேர், சிறுகுறிஞ்சா வேர், பெருமரத்து வேர், செங்கத்தாரி வேர், விழுதி வேர், ஆயில் பட்டை, வேப்பம் பட்டை, புங்கம் பட்டை, மாம்பட்டை, இலுப்பை பட்டை, பெருமரப்பட்டை, ஊஞ்சல் பட்டை, முள்முருங்கைப் பட்டை, ஆவாரை வேர் கண்டங்கத்திரி வேர், முள்ளி வேர் இவை வகைக்கு பலம். 3, கட்டி இடித்துப் பானையிலே போட்டு வெள்ளாட்டுக் கோமியம் கூட விட்டு கற்கம் கடுக்காய் பொடி படி. $\frac{1}{2}$, வெள்ளைப் பண்டு பருப்பு படி. க, கடுகு படி. 1/8, மிளகு படி. 3/4, ஓமம் படி. 3/ வசம்பு பலம். க இது வகைக்கு கூட்டி இடித்து அந்த மருந்தோடே கூடப் போட்டு மேல் சட்டி மூடி குழி வெட்டி அந்தக் குழியிலே வெள்ளாட்டு எருவைப் போட்டு அது மேலே மருந்துப் பானையை வைத்து அது மேலே சட்டி மூடி அந்த எருவைப் போட்டு மூடி அதின் மேலே மண்ணைத் தள்ளிப் பத்திரமாக வைத்து நாற்பது நாள் போனால் பிறகு எடுத்துக் கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி சன்னி: 13, குஷ்டம்: 8, வாதம். 84 விஷங்கள் பழைய கடிகள் தீரும். பத்தியம் உப்புக் கூட்டவும். வெண்பொங்கல் காது.

மேக வெட்டை, மேல் கண் புகைச்சலுக்கு தயிலம் :- நாபி தயிலம் :-

நாபி விராகனிடை. 3, கெந்தகம் பலம். க, நிறவிஷம் விராகனிடை. க, மிளகு பலம். $\frac{1}{2}$, வெள்ளுள்ளி பலம். க, பெருங்காயம் விராகனிடை. $1\frac{1}{2}$, வசம்பு பலம். க உத்தாமணி குப்பை மேனி, நொச்சி வேளை இந்தச் சாறு விட்டு அரைத்து சீலையிலே தடவி திரிபோலே சுருட்டி வேப்பெண்ணை படி. க, அந்த எண்ணையிலே திரியை நனைத்து

விளக்கிலே கொளுத்தி யிடுக்கியாலே பிடித்துக் கொண்டு கீழே கிண்ணம் வைத்து இந்தத் திரியை கிண்ணத்தின் மேலே சாணுயரத்தில் பிடித்துக் கொண்டு எரிகிற சுட்டரிலே கிட்ட யிருக்கிற வேப்பெண்ணெய்யை மொண்டுத்தவும். கிண்ணத்திலே விழுந்த தயிலத்தை எடுத்து வைத்துக் கொண்டு மேலே பூசவும். சரவாங்கத் திமிரு பாரிச வாய்வுகளுந் தீரும்.

<u>மேக வெட்டை மேல் கண் புகைச்சலுக்கு தயிலம்:-</u>

வெட்டி வேர் பலம்.உ, விலாமிச்சம் வேர் பலம்.உ, நெல்லிக்காய் பலம்.உ தானிக்காய் பலம்.க, சுக்கு பலம்.க, இவை வொரு பானையிலே போட்டு நாலு வள்ளத் தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து அதிலே நல்லெண்ணை படி.க, நெய் படி.½ விளக்கெண்ணை படி.½, பொன்னாங்கண்ணிச் சாறு படி.¼ கூட விட்டுக் காய்ச்சவும். மெழுகு பதமாய் வசிகையில் கற்கம். கஸ்தூரி மஞ்சள் மிளகு, சடாமஞ்சி இவை பொடி பண்ணிக் கூடப் போட்டு அந்தக் கொதியிட்டு எண்ணெயை வடித்து கொண்டு தலை முழுகவும். பச்சை யரப்புத் தேய்த்து முழுகவும். இதில் தீரும் வியாதி தலைவலி, நேத்திர வாய்வு, கண் புகைச்சல், சிகப்பு இவைகள் தீரும்.

<u>வாதப் பிடிப்புக்கு விஷமுட்டித் தயிலம்:-</u>

எட்டிப் பழச்சாறு, விளக்கெண்ணை பசுவின் பால் படி.க, எருக்கம் பூச்சாறு படி.க இந்த நாலும் ஒன்றாய் விட்டு காட்டு முருங்கைப் பட்டை நல்ல முருங்கைப் பட்டை வே---ரனை வேர் மூன்றும் வகைக்கு பலம்.30 கூட்டி இடித்து நாலு வள்ளத் தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு முன் சாறு எண்ணெயுடனே கூட விட்டு கற்கம்.

சுக்கு மிளகு, திப்பிலி, ஓமம், இந்துப்பு இது வகைக்கு விராகனிடை.2, கூட்டிப் பொடிப் பண்ணி கூடப் போட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு தினம் காசிடை எண்ணை உள்ளுக்கு கொடுக்கவும். பிறகு கடுகு காசிடை தின்னவும். பதினைந்து நாள் தின்ன எண்பத்தி நாலு வாதமுந் தீரும். பெரு வயிறுந் தீரும். இது கை கண்டது. பத்தியம் கைப்பு, புளிப்பு, புகை தவிர்க்கவும்.

<u>நேத்திர வாய்வுக்குத் தயிலம்:-</u>

அதிமதுரம், முத்தக்காசு, யிருவேலி வேர், கோஷ்டம், தாமரை வளையம் விலாமிச்சம் வேர், கச்சோலம், புழுகு, குங்குமப்பூ, சே அல்லிக் கிழங்கு, செவ்வள்ளிக் கொடி, பச்சைக் கற்பூரம் ஆக 11-ம் வகைக்கு விராகனிடை.உ செவ்வள்ளிக் கொடி பலம்.5 இளநீர் விட்டு அரைத்து ஒரு சட்டியில் போட்டு பசுவின் பால் படி.க, இளநீர் படி.க, கரிசிலாங் கண்ணிச் சாறு படி.½, பொன்னாங்கண்ணிச் சாறு படி.க, நல்லெண்ணை படி.1½ விட்டு மூன்று நாளுறின பிறகு அடுப்பிலே வைத்து மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு பச்சை யரப்பு அரைத்து தலைக்குத் தேய்த்து முழுகவும். நேத்திர ரோகமானதெல்லாந் தீரும்.

<u>உஷ்ணத்துக்கு பற்பம்:-</u>

நாலுக் குதக் சிலை ரெண்டு நற் கெந்தகமும் காலிரண்டு
ஆன காந்தம் பதினாறு அதற்கு ரெட்டி அரலோகம்
சாலக்குமரிச் சாறு கொண்டு தனிய அரைத்துத் தாயலத்தி
தாலத்திட்டு வெயில் வைக்கத் தனலா யெரியுங் கண்டீரே.

இந்தப் பொடியைத் தேனிலிட மென்மம், காமாலை, வாத ரோகந் தீரும். உஷ்ணங்கள் மேகங்களுக்கு பசு வெண்ணெயிலே தின்னவும். உஷ்ணம் யாவையுந் தீரும்.

<u>மேகத்துக்குச் சூரிய பற்பம்:-</u>

வட்டத் திருப்பி வேர், நாவல் கொட்டை, மாங்கொட்டை அஞ்சனக் கல்லு,

முசுட்டை வேர், இலவம் பிசின், வற்ச் சுண்டி, வெப்பாலைப் பட்டை, கொடிவேலி வேர், வில்வை பத்திரி வேர், அதிவிடையம், வெள்ளி லோத்திரப் பட்டை, முடக் கொத்தான் சாறு மூலம், ஆத்திப்பூ, அதிமதுரம், மருதம் பட்டை இவை சமன் கொண்டு சூரணம் பண்ணி தேனிலே யாகுதல் நெல்லரிசிக் கழுநீரிலே யாகுதல் கொள்ளவும். இதுக்கு தீரும் வியாதி மூலரோகம், வயறு பேதிகளும் வாய் மூக்கு வயத்திலேயும் ரெத்தம் விழுகிறதும் பிர பிள்ளையள் வியாதி யோனி தோஷமும் போகும். இந்தச் சூரணம் ஆச்சிலை மகாவிருட்சி சொல்லப்பட்டது.

<u>இன்னொரு விதைச் சூரணம் மலக்கட்டுக்கு:-</u>

பெருங்காயம் வசம்பு, விழலரிசி, சுக்கு, சீரகம், கடுக்காய், கடுகுரோகணி, நிலாவாரை, திரிமூலம் இது ஒன்றுக்கு ஒன் அதிகமான நிறையாகக் கூட்டிச் சூரணம் பண்ணி வஸ்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு வெந்நீரிலாகுதல் மிளகு கஷாயத்திலாகுதல் இடவும். இன்னம் பிரயோகத்துக்குத் தக்க அநுபானத்திலிடவும். இதில் தீரும் வியாதி மலக்கட்டு, சலக்கட்டு, வயறு பொருமல் உதிரச் சூலையள் இது தீரும்.

<u>அரோசியத்துக்கு பழங்கியாதிச் சூரணம்:-</u>

தாமரைக் கிழங்கு அல்லிக் கிழங்கு மாதளம் வேர், சுக்கு, திப்பிலி, மிளகு, இந்துப்பு இது வகைக்கு சமனிறையாகச் சூரணம் பண்ணி சமனிறை சர்க்கரை கூட்டித் தேனிலே வெருகடி பிரமாணம் கொள்ளவும். தீரும் வியாதி அரோசிகம் சத்தி மேல் மூச்சு பீனிசம் குரல் கம்மல் இவை தீரும்.

<u>தாளிச பத்திரி சூரணம்:-</u>

மிளகு விராகனிடை. உ, சுகுந்தர் விராகனிடை. 2, லவங்கப் பட்டை விராகனிடை. 10 இது சூரணம் பண்ணி வஸ்திர காயம் பண்ணி சர்க்கரை விராகனிடை. 16 கூடப் போட்டுக் கலந்து தேனிலே வெருகடி பிரமாணம் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி காசசுவாசம், வாந்தி பித்தப்பிரமேகம், பீலிகை பித்த பிரமேகம் பாரிச சூலை பாண்டு சுரம், அதிசாரம் இது தீரும். பத்தியம் உப்பு மாத்திரம் கூட்டிக் கொள்ளவும்.

<u>ஏலாதிச் சூரணம்:-</u>

லவுங்கம், சிறுநாகப்பூ, சுக்கு, திப்பிலி, மிளகு, சிறுதேக்கு இவை ஆறும் ஒன்றுக் கொன்று அதிகமாய்க் கூட்டிச் சூரணம் பண்ணி இதுக்கு சரியாகச் சர்க்கரை கலந்து வெருகடி பிரமாணம் தேனிலிடவும். இதுக்குத் தீரும் வியாதி அரோசிகம், சத்தி மேல் மூச்சுப் பீனிசம் அரிகின குரல் இவை தீரும். பத்தியம் உப்புக் கூட்டிக் கொள்ளவும்.

<u>அதிசாரத்துக்கு வியயோஷாதிச் சூரணம்:-</u>

சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், கருஞ்சீரகம், லவுங்கம், கடுக்காய், சுண்டை வத்தல் ஓமம் கருவேப்பிலை மீர்கு யிலை, பெருங்காயம், இந்துப்பு, விழலரிசி, கழல் பிருப்பு நாய்க் கடுகு இவை சமன் கொண்டு இள வறுப்பாக வறுத்துச் சூரணம் பண்ணி புதிய கலசத்தில் வைத்து தேனில் கொள்ளவும். வாய்வு வயறு பொருமல் வயறு நோவு அதிசீரணம் தீரும்.

<u>கிராணிக்கு டாம்பாதிச் சூரணம்:-</u>

மாதளம் ஓடு, மாங்கொட்டைப் பருப்பு, விளாம் பிசின், வில்வைக் காயின் சதை இலவம் பிசின் சாதிக்காய் வெட்பாலைப் பட்டை, சுக்கு பெருமரப்பட்டை, முத்தக் காசு, சீரகம், திப்பிலி, கிசதிப்பிலி, வெள்ளி லோத்திரம், கடுகு இது வெல்லாஞ் சமன் கொண்டு வனமூலிகைகளைக் காயப் போட்டு கடை மருந்தையெல்லாம் இள வறுப்பாய் வறுத்து எல்லாம் ஒன்றாய் போட்டுச் சூரணம் பண்ணி வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொண்டு வடிகட்டின தயிரிலும் கொள்ளலாம். தேனிலும் கொள்ளலாம்.

இதுக்கு அதிசாரக் கிராணி போம். பொருமல் நீரிழிவு தீரும்.

(வேறு)

பிரண்டைத் தண்டு வேண்டின மட்டுங் கொண்டு வந்து கரிசலில்லாமல் ஆய்ந்து கணுக் கணுவாய்க் கண்டஞ் செய்து ஒரு பானையிலே போட்டு சரி நிறை உப்பு போட்டு நீருவிட்டு வேக வைத்து தண்ணீரில்லாமல் வெந்த பிறகு நிழலுலத்தா உலத்தி மறுபடி கரிசலாங் கண்ணிச் சாறு படி.உ, விட்டு ஊறி உலத்தி மறுபடி வாதமடக்கிச் சாறு படி.உ, விட்டு ஊறி உலத்தி மறுபடி வாத மடக்கிச் சாறு படி.உ விட்டு ஊறி உலத்தி மறுபடி யெருக்கம் பழுப்புச் சாறு படி.உ விட்டு ஊறி உலத்தி பெருந் தும்பைச் சாறு படி.உ விட்டு ஊறி உலத்திக் கொண்டு சிவனார் வேம்புச் சூரணம் படி வெள்ளறுகுப் பொடி படி.½, நொச்சிக் கொழுந்துச் சூரணம் படி.3, ஓமம் படி.க வெள்ளுள்ளி பலம்.க, மிளகு பலம்.க, இதுவும் வெதுப்பிச் சூரணம் பண்ணி முன் பிரண்டை நன்றியுலத்திச் சூரணம் பண்ணி இந்த மூன்று வகைச் சூரணமு மொன்றாய்ச் சேர்த்து வடித்து ஒரு கலசத்திலே யிட்டுக் கட்டி வைத்துக் கொண்டு வெருகடிப் பிரமாணம் வெந்நீரில் கொள்ளச் சகல வாய்வும் தீரும். பாலில் கொள்ள பித்த மாதியாய்த் தீரும். சீரகக் கஷாயத்திற் கொள்ள அதிசாரம் அசீரணம் தீரும். நெய்யிற் கொள்ள வயறு அதிகமாய்ப் பசிக்கும். யின்னம் ரோகத்துக்குத் தக்க அநுபானத்திலே யிடச் சகலமான வியாதியுந் தீரும்.

கடினம்பனச் சூரணம்:-

சதகுப்பை, நற்சீரகம், கருஞ்சீரகம், சன்ன லவுங்கப்பட்டை, அதிமதுரம், கொத்தமல்லி இது சமன் கொண்டு சூரணம் பண்ணிச் சும்முகச் சீனி கற்கண்டு கூட்டிக் கொள்ள வாய்வு தீரும். பசி அதிகமாகும்.

விக்கல் குன்மத்துக்குச் சுக்கு யுண்டைச் சூரணம்:-

சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், வசம்பு, யிஞ்சி, வெள்ளுள்ளி, ஓமம், பெருமருந்து, அத்திக் திப்பிலி, நேர்வாளம், கள்ளிச் சாம்பல், முக்காவளை வேர், ஊசி மல்லிகை வேர், நொச்சி வேர், கய்யான் தகரை வேர், நிலவேம்பு, ஆயில் பட்டை, தாமரை வளையம், நற்சீரகம், கருஞ்சீரகம், தேவதாரம், குரோசானி, ஓமம், பிறண்டை, ரேணுகம், கொத்தமல்லி, மஞ்சள், நவச்சாரம், சத்தி வெடிச்சாரம், வெங்காரம், கல்லுப்பு, வெடியுப்பு, இந்துப்பு, பாத்தியுப்பு, காச்சுப்பு, புங்கம் பட்டை, வில்வலப் பழச் சதை, கடுகுரோகணி, வகைக்கு பலம்.½ கூட்டி கண்ட பலத்துக்கு சிவதை வேர் மூன்று பங்கு கூட்டிச் சூரணம் பண்ணி வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொண்டு வெருகடிப் பிரமாணம் சித்திர மூல மிளகு கசாயம் வைத்து அந்தக் கசாயத்திலே கொள்ள எட்டு வகைக்குன்மமுந் தீரும். தேனில் கொள்ளக் கிரந்தி தீரும். எலுமிச்சம் பழச் சாத்தில் கொள்ள பித்த வகை யெல்லாந் தீரும். யிஞ்சிச் சாத்தில் கொள்ள வாதமும் கபமும் தீரும். வெள்ளாட்டுக் கோமியத்தில் வாங்க அமுவை பீலிகை கெண்டை சோபை வீக்கம் இது தீரும். பசுக் கோமியத்தில் கொள்ள மலக் கட்டு சலக் கட்டு விடும். ஊஞ்சல் பட்டை தம்புராஉட்டம் கசாயத்தில் கொள்ள மேலிளைப்பு யீளை உள்மாந்தை தீரும். நெய்யிற் கொள்ள மந்திப்பு அசீரணம் புளியேப்பம் தீரும். பசியாகும். சீதகக் கசாயத்தில் கொள்ளப் பழைய சுரம், விக்கல், கல்லெரிப்பு, நீர்க்கட்டு இது தீரும். எருமை மோரில் கொள்ள நீரிழிவு காமாலை பாண்டு மதி கெட்ட நோய் தீரும். யின்னம் சோகத்துக் கேற்றபடி அநுபானங்களிலிட்டால் அனேக ரோகங் குணமாகும்.

பெரும்பாட்டுக்கு மருந்து:-

சிறுவழுதலை யிலையைக் கருப்பு நெல்லரிசி மாவிலே யிடித்துப் புட்டுச் சுட்டு

நல்லெண்ணெ வார்த்து மூன்று நாள் தின்னத் தீரும். ~~இன்ன-மொரு-வகை~~

<u>இன்னமொரு வகை</u>:-

ஈர வெங்காயத்தை ஒரு படி கொண்டு விந்து சிறுக அரிந்து பசுவின் நெய்யிலே வறுத்துச் சர்க்கரை தூவித் தின்னத் தீரும். நல்ல முத்தின கோவைத் தண்டுச் சூரணம் காடியிலே அரைக்கால் படி சூரணம் போட்டுக் கரைத்து மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

<u>வெள்ளைக்கு மருந்து</u>:-

கோழிச் சார்ந்துக் சாற்றையை எலுமிச்சம் பழச் சாத்தில் நன்று அரைத்து மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

<u>இன்னமொரு வகை</u>:-

திரு நீத்துப் பச்சையிலையை இடித்துப் பிழிந்து சாறு படி. $\frac{1}{4}$, நல்லெண்ணை படி. 1/8 கூட்டிக் கொடுக்கத் தீரும். குப்பை மேனிச் சாறு படி. $\frac{1}{4}$ நல்லெண்ணை படி 1/8 கூட்டிக் கொடுக்கத் தீரும். புளவித் தண்டுச் சாறு படி. $\frac{1}{4}$ நல்லெண்ணை படி 1/8 கூட்டிக் கொடுக்கத் தீரும். காத் தொட்டித் தழையை பசும் பாலிலரைத்துக் குடிக்கவும். கீழாநெல்லி சமூலம் காராட்டுப் பாலிலரைத்துக் குடிக்கவும் தீரும். கீழ நெல்லி சமூலம் காராட்டுப் பாலிலரைத்து நெய்யும் பனை வெல்லமுங் கூட்டிக் கொடுக்கத் தீரும். கழுதை விட்டையை எருமை மோரிலே பிசைந்து வடித்துக் கொடுக்கத் தீரும். அத்தி வேரும் கீழா நெல்லி வேரும் பசுவின் பாலிலரைத்துக் குடிக்கத் தீரும். விழுதி யிலையைக் காராட்டுப் பாலிலரைத்துக் குடிக்கத் தீரும்.

<u>கெற்ப விப்புருதிக்கு மருந்து</u>:-

நீம் போது

கறுப்பு நெல்லரிசி காராட்டுப் பாலிலே சோறுக்கிச் சோறு ~~வெ… சே~~ புளியறணைக் கிழங்கு எலுமிச்சங் காயளவு அரைத்துக் கூடப் போட்டு ஆக்கி நெய் வார்த்து வெல்லங் கடித்துக் கொண்டு மூன்று நாள் தின்னவும். அழிஞ்சி வேர் முட் கொளிஞ்சி வேர் கண்டங்கத்திரி வேர், சுக்கு, மிளகு, வெள்ளை வெங்காயம் இவை யெல்லாம் சமனாகக் கொண்டு நல்லெண்ணெயிற் கொதிப்பித்துத் தினமொரு கறண்டி எண்ணை உள்ளுக்குக் கொள்ள விப்புருதி தீரும்.

<u>மூலக் கிறுணிக்கு மருந்து</u>:-

முப்பிரண்டைக் கிழங்கு புளியரணைக் கிழங்கு மருள்க் கிழங்கு, செம்பிரண்டைக் கிழங்கு இவை நாலுஞ் சூரணம் பண்ணிக் கறுப்பு நெல்லரிசி மாவு கூட்டி இடித்துக் களிக் கிண்டி நல்லெண்ணை வார்த்து பழைய வெல்லங் கூட்டிக் கொண்டு மூன்று நாள் தின்னவும். கிறுணி தீரும்.

<u>பிரமியத்துக்கு</u>:-

யீச்சம் பூ, ஆலம் விழுதுக் கொழுந்து, ஒரிலைத் தாமரை இது மூன்றும் பசும் பாலிலரைத்துப் பாலிலே கரைத்துக் கொடுக்கவும். வெள்ளைப் பூலாங் கொழுந்து மாதளங் கொழுந்து இது மூன்றுஞ் சமனாக எருமைத் தயிரிலே அரைத்துக் கரைத்துக் குடிக்கவும். புளியம் பட்டை வெட்டி வந்து மேல் சீவிப் பசுவின் பால் விட்டு இடித்து பிழிந்து அரைப்படி பால் கூட்டிப் பசுவின் நெய் சர்க்கரை கூட்டிக் கலந்து குடிக்கவும். ஐந்தாறு நாள் கொள்ளவும். பசும் பால் நெய் கூட்டிக் கொண்டு சாதம் சாப்பிடவும்.

<u>காமாலைக்கு</u>:-

மலைதாங்கி வேர் விராகனிடை. உ, சுக்கு விராகனிடை. உ, தயிரு விட்டு அரைத்து வடி தயிரிலே கொடுக்கவும். உப்பு, புளி தவிர்க்கவும். காமாலை தீரும். கை கண்டது. விஷப்பாகல் கத்துக்கு பிடங்கு நாறிப் பட்டைச் சாறு படி 1/8 பிடங்கு நாறித் தழைச் சாறு படி. 1/8 பசுவின் மோரிலே யிடித்துப் பிசைந்து கொடுக்கவும்.

<u>பேதி மருந்து</u>:- 7.11.63.

பிடங்கு நாறிப் பட்டையுந் தழையுந் ஆவைத்தக் கடுக்காய் மூன்று தட்டிப் போட்டுத் தண்ணீர் விட்டு ராத்திரிக்கு ஊற வைத்து விடிஞ்சு பிழிந்துக் கொடுக்க விரேசனமாம். சோகை காமாலை வீக்கம், சகலமுந் தீரும். பத்தியம் புளி தவிர்க்கவும்.

<u>சுர சோபைக்கு மருந்து</u>:-

பிடங்கு நாறிப் பட்டை தழை சுக்கு, திப்பிலி, மிளகு, தெசாவரம் இது கூட்டி இரண்டு படி தண்ணீர் விட்டு நாலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கச் சுரசோபை வீக்கமுந் தீரும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். நல்ல முத்தின ஆசல் பட்டை கொண்டு வந்து பீச்செழு பிடித்துப் பானையிலே போட்டு நாலொன்றாய்க் காய்ச்சி ஆறின பிறகு கோது தள்ளிப் போட்டு வடி கொண்டு அதிலே கற்கம் சுக்கு, திப்பிலி, மிளகு, மஞ்சள், வெள்ளை, வெங்காயம், அக்கிலாகாரம் இவை வகைக்கு பலம்.க, கூட்டி இடித்து வடித்துக் கடுக்காய்ப் பொடி பலம்.૨.முன் கசாயத்திலே பழைய கருப்புட்டி எட்டு வட்டுப் போட்டுப் பாகு பண்ணி இந்தச் சூரணம் போட்டு கிளறி லேகியமாக்கி வைத்துக் கொண்டு வேளைக்குப் புன்னைக் காயளவு தின்னவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். ஈளை, இருமல் ~~சுவாசம்~~ மேக சன்னியுந் தீரும்.

<u>விரேசனம்</u>:-

சுத்தி நேர்வாளம் விராகனிடை.5, சுக்கு விராகனிடை.3, திப்பிலி விராகனிடை.3, மிளகு விராகனிடை.ந, திகை விராகனிடை.10, கடுகு ரோகணி விராகனிடை.5, கடுக்காய் விராகனிடை.18 இது கூட்டிக் கத்தாளஞ் சாத்தி லரைத்து அதின் பிறகு சாரணைச் சாத்திலரைத்து சுண்டவிலங்காய் மாதிரி குளிகை பண்ணி வைத்துக் கொண்டு வேண்டிய பேருக்கு ஒரு உருண்டை நல்ல வெபக்கிலிடவும். விரோசனமும் பரிகாரமாகும். விரோசனமான பிறகு மேலுக்கு வென்னீர் விட்டுக் கொண்டு சகலமும் சாப்பிடலாம். நோயில்லாத பேர்கள் பிலைக் கள்ளி வேர்ப்பட்டை சமன் மிளகு கூட்டி சூரணம் பண்ணி வெள்ளாட்டுக் கோமியத்தில் நாற்பது நாள் தின்று குடிக்கவும். குஷ்டங்கள் சகலமுந் தீரும்.

<u>கருங் குஷ்டத்துக்கு மருந்து</u>:-

கீரித் தோலும் மருதம் பட்டையும் சூரணம் பண்ணி வெள்ளாட்டு நெய்யில் நாற்பது நாள் தின்னத் தீரும். பூனைத் தலையைப் பொடி செய்து பச்சரிசி பாற் சோறாக்கி இறக்கினவுடனே இந்தப் பொடியைத் தூவிச் சரி சோத்தோடே சூரணத்தை பிரட்டிச் சாப்பிட்டால் பதினெட்டுக் குஷ்டமுந் தீரும். எலி கடியுந் தீரும்.

<u>நஞ்சு தின்ன பேருக்கு மருந்து</u>:-

பச்சை நாவி தின்ற பேருக்கு இந்தச் சாரணை வேர் தின்று உள்ளுக்கு இறக்க நாவி செரிச்சுப் போகும். சிறுகீரை வேரும் சீரகமும் நெய்யில் குழைத்துத் தின்றால் தீரும். குன்று மணியும் எண்ணையுங் குடித்தால் துவரைப் பருப்பைத் தண்ணீரிலே அரைத்து நாழி சாற்றிலே சீனி சர்க்கரை போட்டுக் கொடுக்கச் சமைத்துப் போகும். எலிப் பாசாணந் தின்றால் பாகல் காயை உப்பிலியாக அவித்து அந்தச் சாத்தை பிழிந்துக் கொடுக்கத் தீரும். வெள்ளரிக் காயைத் அவைத்துச் சாறு கொடுக்கத் தீரும். ஆவாரைக் கொழுந்து பாக்களவு அரைத்துத் தண்ணீரிலே கரைத்துக் கொடுக்கத் தீரும். சகல நஞ்சுந் தீரும். எட்டிக் கொட்டையும் எண்ணையுங் குடித்தால் மாத்து. கோழி முட்டையை உடைத்து மஞ்சள் கருவெடுத்துப் போட்டு வெள்ளைக் கருவை யடையாக வார்த்துச் சுட்டுத் தின்னத் தீரும். எட்டிக்கு நாகல் எருக்குக் தாணிக்காய் மட்டலரு மூத்தைக் சித்தாமரையாம் செட்டியாய் ஆவரை யாங் கள்ளிக்கு ய்லரி தின்றால் கடுக்காயாம் நாவிக்குச் சிறுகீரை குன்றிக்கு வெண்காரம் சமுதை வண்டுக்கு

சங்கம் பழச் சாறு விட்டாலுக்கிறவே விதி.

இடுப்புப் பிடிப்பு வாய்வுக்கு மருந்து:- எலி கடிக்கு மருந்து: கண்ட மாலைக்கு மருந்து என்னை களிம்பு:-

கொடிவேலி வேர் வெள்ளை சாட்டறணை வேர் முடக் கொத்தான் வேர் இது வகைக்கு எலுமிச்சங் காயளவு அரைத்துக் கொண்டு பெருங்காயம் விராகனிடை.3, சுக்கு விராகனிடை.3, வெள்ளுள்ளி பலம்.1, மிளகு பலம்.உ. இது சாட்டறணைச் சாறு வாரத்தரைத்த முன் மருந்தோடே சேர்த்து ஒரு சட்டியிலே போட்டுக் கருப்புகட்டி பலம். 10, பாகு செய்து நல்லெண்ணை படி.1/8, கூட விட்டு முன்னே அரைத்த மருந்தை யெல்லாங் கூடப் போட்டு மெழுகு பதமாக வரும்போது இறக்கி வைத்துக் கொண்டு கொட்டைப் பாக்களவு தின்று வரவும். வாய்வு, நெஞ்சு வலி முறிபாடு இதுகள் தீரும். எலி கடிக்கு புங்கம் பட்டையை நசுக்கி எருமை மோரிலே பிழிந்து குடிக்கத் தீரும். மருக்காரைப் பழத்து ஊனை எடுத்து உருண்டை செய்து நீரில் கரைத்துக் குடிக்கத் தீரும். பதினெட்டு எலி கடி தீரும். பச்சை நெல்லரிசியும் சாரணை வேரும் அரைத்துக் கூழ் காய்ச்சி அந்தப் புண்ணைச் சுத்திப் போடவும். உடைந்த பிறகு கல்லுப்பு அரைத்து புண்ணுக்கு உள்ளே ஊட்டி யிடவும். இப்படி மூன்று நாள் போட்டுப் பிறகு நாயுருவியிலை அரைத்து புண்ணு தெரியாமல் போடவும். இப்படி மூன்று நாள் போட்டு அதின் பிறகு கெவுரி பாஷாணத்தையும் வெள்ளை குங்கிலியமும் வெம்பாடம் பட்டையும் கூட்டி கால்படி நல்லெண்ணையிலே போட்டு பட்டை முறுக எரித்து வைத்துக் கொண்டு சீலையிலே தோய்த்து புண்ணுகளுக்குத் தக்கின போடவும். கண்டமாலை தீரும்.

களிம்பு:-

மிருதார் சிங்கு விராகனிடை.உ துருசு விராகனிடை.உ, வெள்ளை இங்கிலியம் விராகனிடை.உ, மற்ற மருந்து மூன்றும் நன்றாகப் பொடி செய்து கலத்துப் புறத்திலே போட்டு மெழுகைக் கரண்டியிலே போட்டு அனலிலே காய்ச்சிக் கூட விட்டுக் காய்ச்சி செம்புலே அரைத்து நன்றாய் கலக்கிற போது வெண்ணை விராகனிடை.3 கூடப் போட்டு அரைத்து வழித்து வைத்துக் கொண்டு புண்ணுக்கு மெல்லிய சீலையிலே தடவி அனலிலே காய்ச்சி புண்ணிலே போடவும் ஆறும்.

இன்னமொரு வகைக் களிம்பு:-

ரசம் விராகனிடை.உ, வெத்திலைச் சாத்திலே காய்ச்சிமுழிக் கல்லிலே விட்டு துருசு விராகனிடை.உ சீலைக் தனியிலே சுருட்டி சுட்ட துத்தம் விராகனிடை.உ, வெள்ளைக் குங்கிலியம் விராகனிடைஉ இது பொடி பண்ணி கூடப் போட்டு வேப்பங் காம்புலே மசிக்க மசியிற பதத்திலே மெழுகு விராகனிடைஉ உருக்கி கூட விட்டு வெண்ணெயுங் கூடப் போட்டு மதித்து வைத்துக் கொண்டு மெல்லிய சீலையிலே தடவிப் புண்ணுக்குப் போடவும். எந்தப் புண்ணுக்கும் இதே களிம்பு போடவும் ஆறும்.

தேள் கடிக்கு மருந்து:-

முக்கிரட்டை யிலை அரைத்துப் பூச மாறும். காக்கை தின்ற வேப்பங் கொட்டையைப் பாக்குத் தின்னக் கொடுக்கிற வெத்திலையிலே அந்தக் கொட்டையை வைத்துக் கொடுக்கத் தேள் கொட்டு வலி தீரும்.

கண்ணோய்க்கு மருந்து:-

கற்பூரம் பலம்.க, படிக்காரம் பலம்.க இவை இரண்டும் பொடி பண்ணிக் கலத்துப் புறத்திலே போட்டு எருமை வெண்ணை கூடப் போட்டுக் காசிச் செம்பிட்டு இரண்டு நாழிகை தேய்த்துக் கண்ணிலிடப் பூ மாறும்.

(வேறு)

சீனக்காரம் பலம்.க, செங்கொட்டைக் கரி பலம்.க, துருசு பலம்.க,

அத்தம் பலம்.க, இதைப் பொடி செய்து கலந்துப் புறத்திலே போட்டு எருமை வெண்ணை போட்டு--+-ங்கிட்டு எழு நாழிகை. தேய்த்துக் கண்ணிலிடப் பூ மாறும்.

யிரன சுக்கிரன் வான சுக்கிரனுக்கு மருந்து:-

பசுவின் விலாவெலும்பைக் கல்லிலே சந்தனம் போலே உரைத்து சருசும் அரிசியும் உரைத்துக் கண்ணிலிடத் தீரும். பத்தியம் பாலுஞ் சோறும்.

வெங்காரம் பொரித்து நிலப் பனைக் கிழங்கும் இளநீரும் விட்டு அரைத்து இளநீரிலே கரைத்துக் கொடுக்க நீரிழிவும். கடுக்காய்.4, இளநீரிலே அரைத்துக் கரைத்துக் கொடுக்க நீரிழிவும். மலக் கட்டும் விடும். ஈர வெங்காயம் மின்னை யிலை கடுக்காய்ப் பொடி கூட்டி விளக் கெண்ணெயில் எரித்துக் கொடுக்க மலக்கட்டு நீர்க் கட்டு விடும்.

நீரிழிவுக்கு மருந்து:-

நிலையாவாரை பலம்.5, தென்னம் பாளை பனவிடை.4, சூரீய்யம் பலம்.3, காந்தம் பலம்.5 இந்தப் படி கூட்டி மோர் வாத்தரைத்து நிழலுலத்திச் சிவக்க வறுத்து பிறகு முருக்கங் காம்பு கொண்டு வறுக்கவும். பொடியாகும். அந்தப் பொடியை சிமிளிலே வைத்துக் கொண்டு நீரிழிவு வாதத்திலே சேற்பமத்திலே பித்தத்திலே என்றறிந்து தெத்தத்திலே வந்ததானால் தேனிலே ஆறு பொழுது ------

மேல் முடிவு தொடர்ச்சி யில்லை.

திரிலோக சிந்தாமணி:-

சிவப்பு, நீலம், சோமதகம், சிறந்த வச்சிரம் சமபாகம் அவுரி காந்தம் வெங்காரம் அரிய வங்கம் துய்ய சென்னி மனோசிலையும் நிவாத வெள்ளி பஞ்சு சரி செய்து நிரம்பி குப்பி தனிலிட்டு திருகி அரைத்துப் பதஞ் செய்து அங்குச மாத்திரை குளிகை செய்து திரிலோக சிந்தாமணி யிது தானே.

2. காலாக்கினி ரசம்:-

நாபி காந்த மனோசிலையும் நல்ல சூத கெந்த
மாவிய தாரஞ் செய்து தேமாங் குமரிச் சாறதில்
சுரபிய மாதம் பழச் சாறும் நலங்க வரைத்துப் புடமிட்டு
காம விகார திரிதோஷம் தீரும் காலாக்கினி ரசமிது தேனே.

3. சிவனார் வேம்பு கற்பம்:-

வட்ட முலையாள் வசமாவாள் மாவின் தளிர் போல் மேனியதாம்
குட்டம் பதினெட்டும் சொல்லும் பாம்பு விஷந் தீரும்.
திட்டமாகச் சொன்னோம் திமிர நெல்லி தானியுடன்
சிட்டை போற்று சிறுகாலே சிவனார் வேம்பு தின்னுமிதே..

சூரிய காந்தச் சூரணம்:-

கடுக்காய் எருடன் களிப்பாக்குங் கரிய சுக்கு சரி செய்து
அடுக்கா யுப்புச் சரி கூட்டி யரைத்தே மோரிற் குடிப்பீராய்
நடுக்கா யிருந்த கீரிப்புழு தள்ளிய சீதம் பயித்தியமும்
அடுக்காய் நிவப்பு சுரமாறலான பேதி யண்டாதிதுவே.

கரியம் நற்றை கொாற்ற மல்லி கடுகிய சிற்று மிந்துப்பு
மரிய காமன திப்பிலியும் மிளகு மும்மூலமுடன் கூட்டி
ஆயக் கடுக்காய் நற்கோஷ்டம் அரிய சிவதை நற்சீரகம்
துய்ய சாற அமுக்கிருய் தலங்கிய ஏலம் லவங்கம் சமனு யிடித்து பொடி பண்ணி
கூடியமோரில் கொள்வீராய் வாதம் பயித்தியம் கண்டிப்பும் குசிசா வாய்வு
உள்மூலம் போம் சூரிய காந்த கற்ப மிது தானே.

சாரணைச் சூரணம்

சாறணை சித்திர மிந்துப்பு சாரி தாளச மிளகோமம்
சரி சேர் சுக்கு வெள்ளுள்ளி கடிய அரத்தை
சரி கூட்டி சிறுதா யரைத்து பொடி பண்ணி
சிறிய தேனிற் கொள்வீராய் அரிய பித்த பயித்தியமும்
அறுமே சாறணைச் சூரணமே.

தாளிச பத்திரி சூரணம்:-

தாளிச பத்திரி சுக்கோமம் தனதாந் திப்பிலி நற்சீரம்
வாளி சித்திர வாய்விளங்கம் வகையா வாற்றை யிந்துப்பு
தாளிக் காயம் சீரகம் நல்ல கோஷ்டம் லவங்கம் கூட்டி சமனே பொடி செய்து
கூளி சர்க்கரை சரி கூட்டி வாளமா மிஞ்சி சாற்றுடனே வகையாய் கொள் ந்
தாளிச சூரணமிதே.

சித்திர மூலச் சூரணம்:-

சித்திர மூலஞ் சதகுப்பை திருந்திய திப்பிலி வெண்காரம்
வற்றிர கோஷ்ட மிலவங்கம் வகை சேர் தாமரை நேதாம்பல்
பற்றிர மரிய சவுக்காரம் பரிசேர் அரத்தை கொத்தமல்லி
அற்றிர ~~சுக்கு~~ யிஞ்சி ஏலமுடன் அரிய விளங்கம் நீலி யிஞ்சி யிக்கு
ரெட்டி சர்க்கரையும் மினிய தேனிற் கொள்வீராய் மூல விகாரம்
பயித்தியமும் மூடுஞ் சுரமும் முள்க் காச்சல் அதிக வாதந் திமிர் போகும் அதி
சித்திர மூல சூரணமே.

நீர் அழுகல் மருந்து:-

~~வங்க~~ வங்க பற்பம் மோரை வெள்ளிய சுத்தி விளக்கெண்ணை சுத்தி. ½ பசுவின் கோமியம் சுக்கு. ங மோர் சுத்தி. ங தகடு அடித்து பொடி செய்து புளிய உள்பட்டை யெடுத்து இடித்து வஸ்திர காயம் செய்து ஓட்டில் வைத்து அதின் பேரில் தகடு வைத்து அதின் பேரில் அந்தப் பொடியை வைத்து மேலோடு மூடி சந்து வாய் சீலை செய்து ~~செ~~ கெசபுடம் வைத்து யெடுத்து அநுபானத்தில் வைத்துக் கொடுக்கவும். கற்பூர சலாசத்து கொண்டு வந்து யெறியாலை கொண்டு வந்து இடித்து அடை தட்டி கீழ் மேல் வைத்து மொழ பொடத்தில் வைத்து எடுக்கவும். கலஞ்ற மண்சீலை செய்து கெசபுடம் போட்டு எடுக்கவும். விக்கினேஸ்பரன் பூசை செய்து கொடுக்கவும். பத்தியம் புளி, புகையாகா தோட்டா வாழை உதிர் பழத்தில் மூன்று நாள் கொடுக்க மூன்று நாள் பச்சைப் பாலில் கொடுக்கவும். மூன்று நாள் ஆனைப் பாலில் கொடுக்கவும். பொன்னு அரிதார பற்பம் பால் வார்த்து அரைத்து பனியில் போட்டு கெசபுடம் போட்டு எடுத்து க்ஷய ரோகத்துக்கு தேனில் கொள்ள விக்கினேஸ்பரன் பூசை செய்யவும். உப்பு, புளி ஆகாது.

சன்னிக் கசாயம்:-

முருங்கைப் பட்டை, ஆயில் பட்டை, குளாத்திப் பட்டை, வில்வப் பட்டை, ஆயில் பட்டை, ஆசா த்திப் பட்டை, செப்பு நெருஞ்சி, கண்டங்கத்திரி, மாவிலிங்கப் பட்டை துளசி தும்பை, செங்கத்தாரி பிடங்கு நாறிப் பட்டை, பாப்பார முள்ளி, சுக்கு, சித்தரத்தை இவ் வகைப் பட்டை சமன் கச்சியா யிருக்கும்படி கசாயம் வைக்கவும். நாலு படி தண்ணீர் விட்டு வேக வைத்து நாழி தண்ணி யிறுத்து கொடுக்கவும்.

வயிற்றிலே வலியெடுத்தால் மருந்து:-

புளியும், விளக்கெண்ணையும் கொதிக்க வைத்து கொடுக்கவும். இலுப்பைக் கட்டியும், மஞ்சளும் சாடி குழப்பிக் கொடுக்கவும். அவுரி யேலக் காயில் வெறிச்சுக் கொடுக்கத் தீரும்.

அமுக்கிறுச் சூரணம்:-

அமுக்கிறு வரத்தை யரிய திப்பிலி நேர் சீரகம், சமுகார சாரணை செவியம்

சீறிதாய் விளங்கும் கொத்தமல்லிகை வறுத்துங் கருஞ்சீரகம் நற்காயம் வளரு மிஞ்சி வெங்காரம் அமுர்த வல்லி செவ்வல்லி அதுவே சர்க்கரை சரி பாதி அமுத வாத பயித்தியமும் தீரும். அமுக்கிரு சூரணமிது தானே.

<u>சிவனூர் வேம்பு சூரணம் :-</u>

சிவனூர் வேம்பு நற்காயம் சீறி மிளகு சுக்கோமம்
வரனூர் சர்க்கரை யிரட்டியுடன் பவமாய்க் கொள்ளு மனத்துடனே
நவனூர் சிற்றா---- நாடிற்றினம் கொண்டாக் கால்
சிவனே அறிவார் சிவனூர் வேம்பு சூரணமே.

சுக்கு திப்பிலி கொத்தமல்லி அகமாம் ஏலமுள் ஓமம் திக்கிரு சீரம் உள்ளி ஓம நற்கடுகு உகந்த திப்பிலிக் கடுத----வள்ளி கடுகு நாய்க் கடுகு வடிவா யிலொன்று உகந்தே வருத்து பொடி பண்ணி அள்ளிய சாரணை மிளகு நெல்லி அடுத்தே சூரணங் கொள்வீராய் தள்ளிய சூரணம் அதிசாரம் சகல பயித்தியம் திமிர் வாய்வு உள்ளிய வாத சேத்துமம் மோடு முள்ளிசூரணமிது தானே.

<u>தாளக சூரணம் :-</u>

நாகப்பச்சி அரத்தை செவியம் யிந்தப்பு மதுரம், மரமஞ்சள், மஞ்சி முற்றங் கருஞ்சீரகம், பத்திரி, லவங்கம், தான் றுகல் மதங்கச் சோலம் திப்பிலி மூலம் சிதகுப்பை குறி நன்னாரி சிறுதேக்கு வப்பிய சோஉண்டம் சாதிக்காய், வருந்திய முந்திரி விலாமிச்சும் கப்பிய சீரகம் கடுதானி கஸ்டகத்திரி யிருவேலி அப்பிய காயம் வெள்ளள்ளி அருத்து வெளங்க செறுதேக்கு சிவதை சித்திரம் நற்கடுகு சிறந்த சீந்தி நன்னாரி மாவசாரணை. வெங்கார மலர்ந்த தாமரை நெய் தாம்பல் நாவற் சோஉண்டம் தழு யிஞ்சி நல்ல குந்திருக்க நாய்க் கடுகு கம்பி பிசிறு தாளகமும் சொல்லுமோரொன்று சரி ட்டி நாடி யிந்த பத்தி லொன்று நல்லா லோகமது ரெட்டி நாடிய தேனிற் கொள்வீராய் வாராய் மன்னே போம் பிடரி கேள் வாயிருமல் க்ஷயரோகம் யினிய கீரிகருச சலம் பெரும்பாடு வேளம் போன்ற மகோதரமு மிக்க மயக்கங் கறுயிருப்பு தாளை தாகமதி சாரம் கன்னிய சத்திளை காச்சல் தள்ளிய வினியமுத ரோகம் தாளிச சூரணமிது தானே.

<u>காமாலைக்கு மருந்து :-</u>

செறுகும்மிட்டி வேரு இலைக் கள்ளி வேர், ஊசி பிரமி வேரு பழுபாகல் கிழங்கு அப்பைக் கோவைக் கிழங்கு, சத்தி சாறணை கிழங்கு, வெள்ளை சாரணைக் கிழங்கு, சித்தரத்தை, கடுக்காய், கருஞ்சீரகம், நஞ்சுவிரை, அதிமதுரம், நேர்வாளம், பறங்கிப் பட்டை, பேரரத்தை வறுத்த கொட்டை யென்னை கிழங்கு வேரு சமூலமும் கல்லில் ஆட்டி எண்ணையில் போட்டு. சூரிய புடம் வைத்து எடுத்து அடுப்பில் வைத்து கடைச் சரக்கு யிடித்து கூடப் போட்டு நேர்வாளம் பொடித்து மேல் பொடி தூவி இறக்கவும். மேற்பொடி மண்டூர பற்பம் போடவும். தீரும் வியாதி பழுவரை சோகை வாய்வு இது தீரும். வாய்வு கட்டி தீரும்.

<u>ரெத்த பிரமியம் சீய் பிரமியத்துக்கு எண்ணை :-</u>

வீரம் விராகனிடை.க, பூரம் விராகனிடை.க, ரசகற்பூரம் விராகனிடை.க, சிங்கி பற்பம் விராகனிடை.3 புரசப் பட்டை இடித்து கூட போட்டு பசு முன்னைச் சாறு படி.¼ கூட விட்டு மெழுகு பதமாக காய்ச்சி வடித்து கொடுக்கும் போது சிங்கி பற்பம் எண்ணைக்குத் தகுந்த படி மேல் பொடி போட்டுக் கொடுக்கவும். பத்தியம் கெட்டியா யிருக்கவும்..

பலவகை மருந்துகள்.

பிளவைக்கு கார வகை :-

109. காரந் துருசு பாசாணம் கரியந் தழலிர் குறையாமல்
சேரப் பொடியாய் வெண்ணெயுடன் திரும்ப வரைத்துச் சீலையுடன்
ஆரத் தடவி யுள்ச் சீலையங்குந் தள்ளிப் புண்ணிலிடப்
பாரப் பிளவை கரைந்துருகிப் பார வனம் பறந்திடுமே.

110.? **பிளவைக்கு தயிருஞ் சோறு :-**

பறந்திடும் புண்ணிற் கார்ரம் பன்கத்தூனிலா மலர்
பறந்திடுந் தயிருஞ் சோறும் பிசைந்து வை முன்றுநாளில்
அறிந்து வைத்தும மாகட்டி அவிழ்த்து வெப்பாத்திப் பின்னை
சிறந்திடும் யெண்ணை பன்ன தேனினில் மருந்து செப்பே.

111. செப்பிய யெண்ணை வைக்கச் சிறந்த ஆவிரை வேர் நாழி
ஒப்புடன் தடரி பூலா ஒரொன்று தினபாதி யெப்பொரு சரக்கு
நிற்க யிரண்டிரு பகாதி
கைப்பு வெம்பாடல் கூட்டி காயுமா மெண்ணை வைய்யே.

112. என்னையும் சீலை தாறும் யிடை விடாப் பகலைக் காணும்
நன்றுமா வாரையிலை தான் நயக்க வெச்சோட்டில் கொண்டு
புண்ணின் மேல் வை முன்னேருமதியாய் கண்டதாமே.

113. பத்தியம் கண்டதோர் கறிகாய் நெய் கருத்திலே யுக்த தெல்லாங்
கொண்டிடில் பத்த மென்று கூறினர் முனிகள் முன்னோர்.
விண்டிலாத் த தளங்காய் விளங்கிய முருங்கை யத்தி
பண்டு முன் பழகு மோரு பத்திய தயிருமாமே.

not clear

பிளவைக்கு பூச்சு மருந்து :-

114. நெல்லியுட விலப்பனையின் கிளங்கு தாரம் நெல் பொரியும் மாவாரையின் நீண்ட வேரும்
சொல்லரிய வற்றுவின் வெண்ணை சேரத் திதமாக வீக்கத்தின் மேலே பூச
சொல்லியதோர் பிள்ளை தனில் கர்ச்சல் கர்யங் குளத் தெறிந்த வருக் கண்ணுய் வருளி பாச்சல்
மெல்லியதாம் முலைப் பாவங் கூடில் வீக்கம் விதனமுடன் வலிதாரும் விளவிப் போமே

115. **யின்னமொரு பூச்சு :-**

ஆவரை அல்லி நெல்லி யதுவுடன் பூலா வேரும் கோவினில் வெண்ணை தன்னில் குழைத்து வீக்கத்துப் பூச
வேயிலுந் தணல் போல் வீக்கம் வேதனை யவகள் தீரத் தாவிக் குழைத்துப் பூசிகிலோ தயிருங் கூட்டிக் கொள்ளலாமே.

116. வஞ்சிக் கொடியாள் முலைப் பாலில் வராகிக் கிழங்கு கொடா வெண்ணை
செஞ்சொல் படியே அரைத் தொன்றில் தீரும் வழித்து ஆகில். வைத்து
வஞ்சி பிளவை முகந் தன்னில் மகனே வழித்து வழித்தப்பாய்
கெஞ்சி சொர மோட்டமுல் வீக்கங் கெட்டே யோடிப் போமென்றே.

117. **உள் மாந்தைக்கு என்னை :-**

நிலக்குமிள் தடரி பூலா நிலத்தினில் நிம்பஞ் சம்பு
பலப் படியஞ்சு கொள்ளப்பால் சாக்கதனைக் கேட்க.
நலப் படுங் கோட்டமுள்ளி நற் கரு நெல்லி தான்றிக்
கலப் படு மாது பட்டால் கூட்டினீ யெண்ணை கொள்ளே.

118. உள் மாந்தைக்கு களி வகை:- 8.11.63.

குறிஞ்சி யிலையைக் குமலை நெல்லின் மாவின், செறிந்த களியென்னையுடன் தின்ன
வறிந்த வுள் மாந்தை மூச்சிரடம்பிலசு நோவு கலைந்த கண்டிக்குமாங் கான்.

119. உள்மாந்தைக்கு பிட்டு வகை:-

வேங்கை மாந்தோலுடனே வெள் ளுமலை நெல் மாவை
ஆங்கத் தனைப் பிட்ட தாக்கியே பாங்குடனே யென்னை தனிர் சேர்த் தருந்த
வென்று முள் மாந்தை யதில் புண்ணிருமல் சீயதவும் போம்.

120. உப்பு புளியு முகந்த விடத் தேரிலையும் மொப்பு மொசு மொசுக்கை முடக்கமிழ்
மிப்படியே கோலினிய பாலில் யடிக்க விழுந்தோர்டுமே மேவு முள் மாந்தை யிதவே.

121. உள்மாந்தை யெண்ணை:-

சித்தாருந்தி சினன் வேம்புந் திருந்த நிலத்தில் குமிள் வேருங்.
கொத்தங் கோட்டம் வெம்பாடல் குலவுங் கருஞ்சீரதிமதுரம்.
மெத்த மிளகு சீரகமும் வோடே யென்னை விருங்கினக்கால்
பத்தேயெட்டு நாள் தன்னில் பறந்தே யோடு முள் மாந்தை.

122. பித்த உன்மம் சத்தி உன்மக் குளிகை:-

தேங்காய்ப் பாலிலிந்தப்பு சிறக்க பலமே ஒன்று கொள்க
வேங்காய யுள்ளியக வளவே யிரண்டு பலங் கொண்டு
தாங்கிச் சாற்றா மிரு களஞ்சு சொன்ன தளவில் கள்ளிப் பால்
வேங்காரே சித் தென்னை கொள்ள யிளகும் உன்ம மிது கண்டாய்.

123. சத்தி உன்மத்தின் குளிகை:-

உள்ளியுஞ் சோமரப்பு முரத்த தோரிலங்கு குதம் வெள்ளி வெங்காரஞ் சுக்கு மிளகு திப்பிலி கற்காந்தம்
கள்ளியின் பாலில் நொச்சி வசம்பு கசக்கி யிலைச் சாறுண்டை கொள்ளவே உன்ம வாய்வு கொன்றிட வகல்வதாமே.

124. குதிரை வலிக்கு அஞ்சன வுண்டை:-

சுக்கு மிளகு திப்பிலியுஞ் சோமரப்பு வெள்ளி
தக்கோதர்ரள மதிற் பருப்பும் தருகா வசம்பு மதிற் கூட்டி
ஒக்கத் தேசிப் பழச் சாத்தில் ஒவ்வொன்றரைத் தஞ்சனவுண்டை
மெய்க்க குதிரை வலி பூதம் மீளதே சிப் பத்திலிடே.

நசியிட மருந்து:-

125. பூவன் வழமும் பழ அரைப்பும் புதிய மிளகு இந்துப்பும்
ஆவித்துடங்கு மகத்தில் பாலது வோட்டொக்கப் பொடி கொண்டு
தாவ முலைப் பால் தனில் கலக்கித் தப்பா திரண்டு நசிய மிடப்
பாலக் கபால வலி தாரும் பிசாசு கண்டு போமென்றே.

126. வெங்காயம் உள்ளி நேர்வாளம் மிளகு சுக்கு திப்பிலியும்
நல்பாக கடுகு நற்சீரகமும் நறுமையுள்ள வெந்தயமும்
மண்பார் விளைந்த கெந்தகமும் வசம்பு வெருக்கைப் பிசின் காரம்
உண்டே தாகமது அரிசுடனே யிவை யொக்கக் கொள்ளே.

127. குதிரை வலிக்கு மருந்து:-

கொள்ளக் குதிரை வாலவுரி குருத்தே ஆடாதோடை முள்ளே
யுள்ள குரு வெட்டு முருங்கை மூலி தாதுவளை வெள்வேல்
மிக்க சாரனையும் மீறுமல் கொடுவேலி யுள்ளே யெத்த
வே பெண்ணையதவக் குதிரை வலி போமே.

128. விடி சன்னிக்கு விரோசனம் என்னை :-

கடுக்காய் கருக்கித் தாளாக்கி கதித்த யிந்துப்புமாக
அடுத்த மிளகு திப்பிலியும் அளவும் வெச்சில் பொடியாக்கித்
தடுத்துச் சாத்திர வேர்க் கிளங்கில் தன்னீர் தனில் கொண்டருந்துவீரேல்
வடிக்குஞ் சன்னி கீரெட்டும் விட்டே மலமுங் கழிந்திடுமே.

129. வெடி சன்னிக்கு யென்னை யுள் கொள்ள :-

உத்திடுக யென்னையது பத்திடும் வெடி சன்னி யுற்ற திப்பிலியுட னதிமதுர முள்ளி யுமதியுள்ள செவ்வள்ளி வெசுத்தப் பிசின்றோடே மத்த மாதேவியுடன் தாழவளை கறி கொள் வட்டத்துடன் பத்திய நீலக் குமிள் மிளகு முத்த நன்னாரி பால் முத்தமுடனுவிரை மூறிய தோர் நாயுருவி நிலவேம்பு யுத்திடுக யென்னையது பத்திடு வெடி சன்னி யொக்கவதுயர் திரு முத்த பிணி மாறும் இருபது நாள் கொள்ளவும்.

130. வாதகுண மருந்து :-

குத்த மோதகமோடு கொடிவேலி வெள்ளருகு நிம்பமொடு கொன்றை குல வெருக்கி னெடு யிலை முதல் கள் கொள் குறிஞ்சி மிகு சாரணை முந்த நொச்சி யாடாதோடை யீசுர மூலி விழியாதன்டையும் யுத்தமமா யிலொடு உத்த தாயினெடு முள்ளி தூதுவளை முருங்கை வேர் கந்தகத்தினெடு யிங்குலத். திமிரி கரிய மஞ்சளுடன் யிஞ்சி வெங்கார முள்ளி யாடு மோதகமும் கார் செறிந்தலவு சாதமும் யிந்த வெள்ளில் என்னையேயும் நிம்ப வென்னை யிதில். மருந்துகளை வெந்து தான் யிதமா தாக வடி பூசு மேலினிலிராது வாதமிது வென்னுமே.

இரத்த ரோகத்துக்கு மருந்து :-

131. வெளிச்சப் பிட்டை மரமஞ்சள் மிளகு சுடுக் பெருங்காயம்
அமுக்கமுடைய சதகுப்பை ஆலி லவங்கம் சீதாறி
வழுத்து மொழியக் காரம் அல்லி மருவு சாதிக்கா யிஞ்சி
பழுத்த கிராம்பு வசுவாசி பரு நோய் சாலச் சில் சரக்கே.

Incomplete

132. சுவாச காசத்துக்கு சந்தனாதி யென்னை :-

பத்து நாள் உள் கொள்ளவும்.
வாட்ட மிகுதி குன்றுத மண்ணில். மிகுத்த சத்து முத்தம்
கோட்டம் நெல்லி அதிமதுரங் குலவு மெழுமிச்சை யிருவேலி
தேட்டம் பெரிய தற்கோலம் சேர அரைத்து யிளநீரில்
கூட்டிக் கொள்ள வல்லீரே வளிருகு சந்தனாதி யிதே.

133. சுவாச காசத்து மிருத்து வாதி யுண்டை பத்து நாள் கொள்ளவும்.
சந்தனங் கோட்டம் அதிமதுரம் சாத்திர வேதி தற்கோலம்
முந்துங் கோரோசினை முல்லை முத்து விலாமிச்சி யிருவேலி
யிந்த வகையே அரைத்துண்டை யெலந்தைக் கொட்டை யளவாக
அந்த யுழலைக்கிடும் யிளநீ மதிக்குஞ் சந்தனாதி யிதே.

134. முத்தமோடு திப்பிலி யொத்த மீரி சுக்கு முட கடுரோகணி கொள சீரக மோடே லம்
ஒத்த யிருவேலி மிகு ஒக்க விலாமிச்ச மோதுளவு கோலமுடன் தேம் யிலவங்கம் கொத்தமல்லி
யொத்த மது கோரோசனை கொள் கோட்டம் கொண்டு யிளநீரிலிவை மண்டிட யரைத்தே
ஒத்த பித்த தாப சுர உட்ட மெடுத்தால் ஒரு பலன் காணும் மிரித்திப்பிலி யதி மந்திரம் ~~மதிக்கும்~~ போமே.

135. கொத்தமல்லி அதிமதுரம் ஏல மிலவங்கம் கோட்டமொடு செண்பக மலர் கோரோசனையும்

முத்த மிரி சந்தனொடு ஒத்தை யிருவேலி முரம்பு யிளநீர் முப்பழமோடொக்க
வெக்க தொரு முந்திரிகை யுத்த பேரிஞ்ச வையுடன் நிமித்து யிதை ஒன்று பட அரைத்து
ஒத்த பரிதாப சுரம் உடனே மெடுத்தால் ஏடு பன்னி காணும் மிகுத்த வியாதி யது
போமே.

பிற _ _வீச்சுக்கு _மருந்து :-

158 : ஓ
136. புன்றுலுக் கீள்ள தன்னீர் புதிய தேன் முலைப்பால் சுக்கு கண்டெமு
சந்து கோட்டம் கடிய வெள்ளுள்ளி காந்தம். சன்றே கிப்பலுப்பு திறமுடனரைத்துக
கட்டி
வின்றிறற்குத்தக் கெல்லாம் மருந்திதே கொடுக்க நன்றே.

பிறவீச்சுக்கு _ தயிலம் :-

137. இரசுங் கெந்தம் வெள்ளுள்ளி யியல்பா மிரிசுஞ் செங்கொட்டை
சரச மரவே ஆவென்னை தன்றேடொக்க வரைத் தெடுத்து
யுரமே மெத்தும் பிற வீச்சுடனே முத்தி யுரம் பன்னில்
கரவாதுடனே கலை கட்டி கலையில் கொடித்து தயில மிடே.

138. மிடவே தயிலங் காசிடை கொள் யிஞ்சிச் சாறு முலைப்பால் தேன்
உடனே யுள்ளே கொள் வரும் யுரத்த வேப்பன் எண்ணை யுடன்
மிடவே கலந்து தானங்கள் யிரவும் பொருத்தாலாகு மென
சடமே போடா திருப்பதென்ன தரு காதிதவும் தான் கண்டீர்.

பிரமியத்துக்கு _மருந்து :-

139. பூனித் தளிரைப் புதிய பசும் பாலில் ஆலித் தரைத்து வாங்கோலி
செல மறிப்பு தன்னை நிற்கும் அல்லா மலக் கந்தன்னையு மாத்தும்.

வயுறுக்கு _விரோசனம் :-

140. சுக்கு மிளகு திப்பிலியும் தய்ய கடுக்காய் இந்துப்பு
மிக்க கடுகுரோகணி யிதில் மீமல் களஞ்சு வொவ்வொன்றில்
ஒக்க சரி கொள் நேர்வாளம் ஒன்று படவே எலுமிச்சந்
தக்க பழத்தால் மிக வுண்டை தரியாதிடுக விரோசனமே.

141. யிந்தக் கடுக்காய் மிளகு சுக்கு யிதுவுங் கடுகு ரோகணியும்
முந்த நிரையே களஞ்சு கொண்டு முதிருங் கரிய நேர்வாளம்
அந்தப் படியே யறு கழஞ்சு யரிய தேசிப் பழச் சாத்தில்
யிந்தப்படியே யரைத்துண்டை யிடவே சுரைக் காயளவே.

142. வென்னீர் தாகப் பரிகார மிருந்து களியில் பால் கஞ்சி
சொன்னேந் தருகாதனை யிது சுரமுங் குளிரு மலப் பந்தம்
முன்னேருரைத்த மொழி கண்டு முயன்று கடவுளடி போற்றி
யின்னபடியே செய்தாக்கால் யிது பேர் சறுவ மெனலாமே.

143. புன்றுக்குப் _புகை :-

துருசு வெள்ளைப் பாஷாணம் துய்ய கல்லுச் சுட்ட பொடி
பெரிய மெத்திய முடப்பூலா விலைச் சாறு பறணி செய்து
சரி பொறத் தழலில் ஒவ்வொன்று நெய்யில் தப்பா தொக்கப் பொடியிட்டு
விறி போல புன் புளவை வெரு வச்சிலை தனில் போமே.

.144. பேர்டே காரம் நாள் மூன்றும் புன்னில் அழுகல் கரைந்து தென்புல்
தேடே தயிருஞ் சோறதுவும் சீராக் கட்டு நாள் மூன்று
மாடே யதுவில் சவ்வது போலச் தேவந்து தெறி
பாடே தீரா வென்னீரால் பரிந்து கழுவிப் புகை காட்டே.

145. இரதம் யீய்யம் செங்கொட்டை யியல்பால் சங்கு வென்னீரும்
உரமே செய்யு மஞ்சளொடு ஒக்கக் கொண்டு ஒவ்வொன்று சம
தரவே நாலு களஞ்சாக்கிச் சமமே செய்து புகை காட்ட
விரிவா விட்டே வெய்ய புண்ணும் நீரும் வாத பிறம்மையுமே:

146. வங்கத்தொடு வெள்ளுள்ளியுமக்கீ சுரம்மாவு மஞ்சள் கெடு
செங்கொட்டையும் மங்காவ வாலுழுவை யிரதம்
சங்கைப் படி வெந்ததத் தோர் தம்மில் திரு நீறுங்
காரம் போகியரிசி நீமூளை வெங்காரம் வீறுன வசம்பு பங்கிலிடும்
ஒவ்வொன்றுவை யோகு நாலும் களஞ்சி பத்திச் சீலையில் கட்டி புகை பறைங்கிடு
மருந்தே.

~~147.~~ சீலையில் எருக்கம் பால் பட்டிக் கட்டவும்.

147. அண்ட வாதத்துக்குச் சூரணம்:-

கழல் மணி வெள்ளை யுள்ளி கடியதோர் முருக்கங் கொட்டை
யழலுடை சுக்கு கொள்ளு மஞ்சிரண்டாகக் கொள்ள
குழலிட யோசை போலிக்கு குமுறிடுங் குடல் வாதங்கள்
பழகிய சூலை முன்மம் பாய்த்தி கொள்ளு மன்றே.

(வேறு)

148. பெருங்காயம் வெள்ளுள்ளி பெருமிறிசு வேர்க் கொம்பு
விருத்த முதிர்ந்த சாரணை வேர் வெட்டி யிடித்துக் காச்சுகிலோ
திருத்தமாக மூன்று மொன்றாய் செல்லக் காஞ்சு கொண்டிடுகில்
லொருத் தாது மக்கு நில்லா மலோடும் பக்க சூலையதே.

149. அண்ட வாதத்துக்கு எண்ணை:-

சாரணைக் கிழங்கு இந்துப்பு தன்லிடை சுக்கு உள்ளி
சீறு சித்தாமுட்டி மூலை செம் பொன்னின் காம்பு வாளம்
வீரதா வெந்தோரண்ட யெண்ணையில் விருங்குவீரால்
கூறிய கள்ளிப் பாலுங் கூட்டியே கொள்ளலாமே.

150. சாரணை வேர் சீராமூலி தருவீழிவே யிந்துப்பு
கூறுடன் சூரப் பல மான்று கூட்டு முள்ளி பலமொன்று
வீறுடன் காரமென் களஞ்சு நேர்வாள மன்புதுவாம்
பேருள்ள கள்ளிப் பாலாமணக்கம் பெருகிய யெண்ணை யிரு நாழி.

மந்தாரகாசத்துக்கு மருந்து:-

151. கையாந்தகரை யுப்பிலியுங்கடிய நொச்சியுடையாடாதோடை
செய்ய வளருமாமணக்கு சிறக்க விலை யினிலைச் சாறு
பொய்யா திதுவும் நாழியாய்ப் பொடி செய்து
மெய்யாய் நாழி பொடி போட மீது மீழ சுவா வெய்யில் வைய்யே.

152. வைத்தே யெருக்கம் பால் சிறங்கை மணக்குங் காரமதிற் கடுகு
மெத்த நிலவின்ப்புடனே மேவுங் கருஞ்சீரகப் பொடியும்
நெய்த்த யுள்ளி சமஞக நிறை யோரொன்று முக்கழஞ்சு
கைத்த கரையும் பிறமியிலை கசக்கிச் சாற்றிலரைத்தலத்தே.

153. உலத்திப் பொடி செய்தொன்று படவோர் நாளொன்று வெருகடி கொள்
பலத்த பித்த பாண்டு வெனில் பேணி நறு நெய்யதிற் கொள்ளும்
நலக்கும் வெற்பு பாவை யென்னில் நன்று வெண்ணை சீனி கொள்ள
கலக் காயம் சீனி கொள்ளே கலக்குங் காய ரோக மென்னில் பசும் பால்
தரக் கொள்ளே.

பித்த பாண்டு காமாலை ரோகத்துக்கு மருந்து:-

154. நிலப்பனைக் கிழங்கு நல்ல நீர் வள்ளிக் கிழங்கின் சாறும்
நருக்கெனும் நெருஞ்சில் வேரும் நாவல் ஆவரையின் பூ,
மரு முருங்கையின் வேரும் நல்ல மூத்த வெள்ளிரிக்கா தண்ணீர்
நெருக்கம் சிற்றாமுட்டி கீழ்க்காய் நெல்லி சிறுகீரை பாலை வேர் மஞ்சாறும்.

155. காட்டு மல்லிகையின் பூனைக்காலியின் விரையுஞ் சேர்
நாட்டமா யொவ்வொன்று நாற்பலம் யிடித்துப் பாகம்
கூட்டி யிள பதக்கு தண்ணீர் மருவாதி கொள்ள
யீட்டிய மொர்ந்தன் வரகு கிளங்கு நீர் நாளி தண்ணீர்.

156. கருப்பஞ் சாறு படி நாலு கனத்த யிஞ்சி முந்திரிகை
பெருத்த யிஞ்சி விலாமிச்சை பெருவேலி பெரிய தாமரை யிளமுலை
முருக்கு முத்த நன்னாரி முறு சீதேவி கடைச் சரக்கு
யிருத்து யேலம் யிலவங்கம் புனிய மதுரங் கோட்டமுடன்,

157. கற்கட சிங்கி யிந்துப்பு சுசமோதகம் வேர்க் கொம்புடனே
திப்பிலி சீரகம் கருஞ்சீரகம் திருகு கிராம்பு சாதிக்காய்
தற்பர வாசவாசி நாகப்பூ சாத்திர வேதி திரிகடுகு நெல்லி
வக்கிடு தான்றி செண்பகப்பூ வரிய தக்கோல மாஞ் சிலிவை.

158. மஞ்சிட்டி பச்சிலை யெச்சொல மருயொரொன்று யிரு களஞ்சு
மிஞ்சிட்ட பசுவின் பால் விட்டு விரைய வரைத்துக் கல்க்கி யதில்
கொஞ்சி வடித்து மேல் பூசிக் கொள்ளீருள்ளுங் கொடிய பித்த
மிஞ்சிட்ட பாண்டு காமாலை மிகையாரோகம் போய் விடுமே.

159. வாதரோகத்துக்கு எண்ணை:-

எருக்குக் குருந்து பெருமருந்து யிருசுஞ் சூரை சிறு குரும்பை
மருக் கொள் கரந்தை சிறு நிம்பம் வரி சேர் வட்டுக் தாழை
பருத்தி மகாடு வேலாதண்டை பரிய முடக்கை வேர் கொண்டு
நருக்கி யோமயபாண்டு பெண்டு பல நல்நீர் விட்டுக் காய்ந்து கொள்ளே.

160. கொள்ளே சுக்கு திப்பிலியும் கொடிய மிளகு பெருங்காயம்
வெள்ளை வெங்காயம் உள்ளியுடன் வெளுத்த பிசின் சேர் வெந்தயமும்
நள்ளே நிர்க்கு மிந்துப்பு நற்சீரகமும் மோதகமும்
தள்ளா தொக்க நேர்வாளம் சரி கொள் கருஞ்சீரகங் கூட்டே.

161. கூட்டே ஒன்று முக்காஞ்சி கொள்ளும் வேருரொன்று யிரண்டு பலம்
நாட்டிலளவு நாழிகலல் நாலொன்றுகக் காஞ்ச தண்ணீர்
தேட்டெடள்ளெண்ணை நறு நெய்யுஞ் செறிய விரண்டு படியாக
சுட்டி லெறிக்கிலோ ரெண்ணை குறையும் வாத ரோகமிதே.

162. பித்த ரோகத்துக்கு நெய் வைக்க மருந்து:-

பத்தர்கள் தமக்குரிய பரசு பொன்னுங் காணி பங்கிலுறை சீதேவியும்
பரிய தொரு தாளை விழுதும் பரியதோர் நீருடன் பன்றி முன்றும் பனையது
முக்கமொடு நன்னாரி மூத்திய விலாமிச்சு மொய் குரல்க் கிருவேலியும்
மொசுமொசுக்கை கையாந்தகரை முத்திய கருப்பன் நீரும் முந்திரிகை
பெருஞ் சது மத்திடு மிகுத்த ஆவீன்டு பாங்கமும் வல்லி நீர்வள்ளியுமாவிடத்தொரு
தன்னீமலிது கொண்டதை வாழுமாக வூர வைத்து அதனையு மொத்தளவில் லெட்டிலே
குருந்தியில் யிரு நாழி நெய்யதில் விட யின்னேர சரக்கது வையியல்பாம் சரக்கது
வைய்யே.

163. கோட்டமொடு செண்பகம் கொத்தமலி மதுரமும் முலவு நற்சீரகம்
கோலக்கினி யூரல் நற்கோல மஞ்சியொடு கொன்று சதமைப்பையுந்
தட்டக் கடுகுமொரு பச்சிலை கலச் சொலம் சுகமான செவ்வள்ளியும்
மத்தத் தருக்கந் தான நெல்லி முள்ளி யுள்ளதந் ஈ யாமை
சித்தேலமும மட்டையா மருக்கலவு மலையினி யிருவேலியு மாதேவர்
வாழு முதமாகி மாசந்தளொடு வாசமலித் திருப மொன் வாளி சமப மெதவுடனே
முட்ட வதித்தனையு முக்களஞ்சதா வாய்வு முயன்றுடுக நெய்யது வினில்
முடுகாத பித்த குணரோகமது வாராத முனிவராளிச் செய்ததே.

164. <u>மூக்கு நீர்ப் பாய்ச்சலுக்கு எண்ணை</u>:- 11.11.63.
சித்தாமுட்டி சிறுகீரை சீல நெலம்பு முத்தமொடு
ஈ தவளை தெடவுமுக் சாரந்தள் பத்த ஓமம் சிறிய வட்டு
பத்திரொடு நன்னாரி யித்திசையது வையும் பத்துப் பலம் ஒரொன்றிலே யுரையீரே.

165. பத்த மருந்த மோரொன்று பலமாக யிடித்துப் பாலுடனே ஆறு படி தண்ணீரிலறை
யுற்ற. பால் நாழி விட்டு நெய்யதவு நீரிய நல்லெண்ணை யதவு
மொக்கக் கூட்டி தகோட்ட மிலவங்க நற்சீரகம் யிந்துப்பு யுள்ளி மருவுங் கருஞ்சீரகம்
முத்தத் திரிகடுகு வை கூட்டி யிரு கழஞ்சு குணமாக வடித்த நக்கக் குணமாய் வருமே .நீர்ப் பாச்சல்

<u>காசத்துக்கு எண்ணை</u>:-

166. சுக்குடன் மிளகு திப்பிலி ஈ தவளை வட்டு சீந்தி
தக்க வேரொன்று தாறும் சமஞகச் சா கொண்டு
ஒக்க முன்னாழி தண்ணீரொன்றதா யி ரைத்துக் காய்ச்சி
நக்கவே ந நெய் தேனில் நன்றாகக் காசம் போமே.

167. தண்ணீர் விட்டான் கிழங்கு தனிச் சாறு மிகவும் நாழி
வன்மைக் குரிய வரிக் குமரி மடலில் சோறு நாழியது
முன்னற் சீரிய ஈ தவளை யுற்றே நாழு பால் மொன்று
நன்னிப்படியே காயத்தில் நன்று யூறப் போடுவதே
சாரணைக் கிழங்கு தாறும் சாத்திர வேதிக் கிழங்கு தாறும்
வேந்துள்ள சீந்தி வட்டு வெருவிய ஆடாதோடை
மாறிய பிரமி ஈ தவளை மரு சாலங் கண்டு
ஆறிய வருக்காவும் அதகளோர் பலங்கள் தானே.

168. கொள்ளறு நாழி தண்ணீர் குமுறவே கொதிக்க விட்டு
மெள்ளவே காஞ்ச றி வெந்த நாழியாக்கி
யெள்ளத்தினை தாறும் நீடுடன் கூட்டி யொக்கத்
துள்ளவே தளாவிக் காச்சச் சொல்லிய சாரக் கூட்டே.

169. சொல்லிய சரக்குத் திப்பிலி மிளகு யிந்தப்பு
நல்ல சீரகம்ம் நன்று கற்கடக சிங்கி
மெல்லிய காரம் வெள்ளி மேவுங் கடுகு ரோகிணியும்
கூடச் செல்லெடு களத்சு கொண்டு செத்திடில் காசம் போம்மே.

170. தண்ணீர் விட்டான் கிழங்கு தனில் சாறு மிகவும் நாழி
வன்மைக்குரிய வரிக்குமரி மடலில் சோறு நாழியது
முன்மைக்குரிய ஈ தவளை யுற்றே நாழு பலமொன்று
நன்னிப் படியே க்காயத்தில் நன்று யூறப் போடுவதே.

171. ஊறிப் புளிந்த வடித்தெடுத்தோரத் சிறண்டாயிக் காய்ந்த பின் விட்டு
யாறிப் போனதிலெண்ணை ய்டுக்கா நாழி யூறி விட்டு

கூறிப் பெரிய சிவந்த தோர் கொடுவேலங் கருஞ்சீரகம்
வெம்பாடலொக்கக் கூட்ட வென்று வெட்டே களஞ்சி யிது கொள்ளே.

172. வாதத்துக்கு மருந்து :-

வெண்காய யுள்ளி யற பலமும் மிந்த திரிகடு கோடொரு பலமும்
நண்பா யிந்துப்பு வொரு பலமும் நலங்கு கொடுவேலி நிலவாகை
னமன் புளிறி வரிக்மெரி வகை சேர் கசாயமது கண்டு
பண் சேர் கூட்டி நறு நெய்யில் பதத்துள் ளெரித்து நக்குவதே.

வறச்சி கரப்பான் மருந்து :-

173. புங்கங் கொட்டை பசு மஞ்சள் புதிய வெள்ளைப் பாசாணம்
மங்கு சொன்னேற் வெற்பாடல் அவுரிச் சாறு நல்லெண்ணை
பங்கப் படவே சொறியாமல் புதத்து வடித்து மேல் பூசி
தங்கிப் பின்னேர் வெய்ய தண்ணீர் தாளங்குளிக்கிற் றுவாதே.

174. ஈசுமோரிதள்த் தாமரை வேர் தூய நீலியிலை யோடெருக்கு வேர்
கோதிலாச் கொடுவேலி வேர் துங்கள சமன் செய்து கூட்டி வொக்கவே
காது போகங் கார்போக வரிசியுங் கரிய சீரகங் கெந்தகங் கூட்டியே
யேவா யெள்ளெண்ணை தன்னிலே யிம் மருந்து யெரித்துக் கொடுப்பதே.

175. சோகைக்கு மருந்து :-

கீழா நெல்லி வேர் களஞ்சு கீரர் பொற் கடுக்கா யிரு களஞ்சு
தாள நீண்ட தளிரே கொள் சத்தே புளித்த மோருடனே
நாளேழுந் தானெவ்வளவும் நம்பிப் படியே சொல்லு வரில்
வாழ்வாலை குன்டுமிழ்ந்தது போல் அன்றே சோகையகன்றிடுமே.

பிரமியத்துக்கு :-

176. தேங்கினிற் பாலிலந்தீயிலச் சிறிய பிஞ்சு வைத்து
வடித் தங்கிருக்கப் பொடி செய்து அறவு மொக்கப் போட்டள
விலங்கந் தன்னி பிறமியத்தின் தன் பக்க ருலை யெனில்
பங்கப் படாதே யிம்மருந்து பரிந்து குடிக்கிற் பற்றுவே.

177. வெட்டுப் பட்ட புண்ணுக்கு :-

வெட்டுப் பட்ட புண் தனக்கு விரித்து முன்னேருரைத்தபடி
வட்டப் படவே தேசிக்காய் வாந்து பாதி யிரண்டாக்கி
சட்டி தனிலே எண்ணை விட்டு அழலிலறவே மிகக் காய்ச்சி
யட்ட மருது யெத்திட்டு யதுக்குப் பின்னே யெண்ணை விடே.

178. யிடவே யெண்ணையது தனக்கு யிலந்தை தளிர்காய் துடரியுட
புடரு நிலத்துக்குமீர் வட்டுப் பசுத்தவாவரை வசுவேருங்
கடவா தொக்கச் சிறந்த கடுக்காய் கம்பை குரி நாயுருவி
யடைவே யிவையின் வேர் கொண்டே யதின் மேலிலை சேர் கடைச் சரக்கே.

179. கோட்டம் மதுரம் வெம்பாடல் கொடியின் சிவந்த செல்வள்ளி
யீட்டுங் கரிய குந்திருக்க மியல் சேர் கைப்புச் சதகுப்பை
வெட்டி வரு வேர் மேல் முள்ளி மிகாமல் யிருந்த யிலவங்கம்
கூட்டித் தூளியுடன் செய்து கொள்ளீரெண்ணை புண்ணுக்கே.

குத்துப் பட்ட புண்ணுக்கு யெண்ணை :-

180. குத்துக்கடனே யுட்சீலை யடைந்தே யிறக்கக் கள்ளி தன்னை
முத்துப் போலே யிளநீரை முத்துச் சும்மா வகை செய்து
சுத்துப் படவேக் குத்தளவாய்த் துட குத்து வீரந்தசை தள்ளிச்
சித்துளங்கலப் ;---- சிறந்தனன்னை அடைவாந்தே சு.

181. ஒத்தே யிட்ட மூன்று நாள் ஒடும் விரசலமும் புள்ளடியும்
மத்தோர் சிறிய தம்பல வேர் மணக்கு முத்தின நன்னாரி
சித்த தேலமிலவங்கந் தின்னுகப்பூ வேம்பாவுலற்றே
மதுர மதுரந்தான் கொண்டு வுடதி யெண்ணையுடந் தள்ளே.

182. நின்ப நிலத்தைச் சொல்வது நிலத்தில் குமிள வேற் றொருவின்
பச்சாச்சல் மிழ்த் தோழு மிக்க தேவி தன்பனையும்
கம்பி பிசினிலிசைத்தே கொள்கைப்பு மதுரம் வெம்பாடல்
முதலா வெடியுண்டை யருமிவை யோறெனை வைய்யே.

183. ஆயுதத்தால் பட்ட வாத கரப்பானுக்கு:-

வல்லாயுதங்கள் பட்ட வரை மல்ங் காக்கர்யமுடம் புலந்தாள்
சொல்லு நிம்ப மதிற்றேலைச் சுடவே தன்வீரதிரா றி
மெல்லா விருத்தி வெச்செண்ணை விட்டே யிடித்துக் குளிப்பாட்ட
நல்லதாகு மென்று முன்னோ நயந்தே யுரைத்த படியாமே.

184. புண்ணும் வெளுத்து நீர் மிகுந்து போதக் கத்தி வலி மிகுந்தா
துன்மைப்படவே யொடுங் கொள்ளுங் கொள்ளாதிருக்கிரத் செய்யுந்
தின்மைப் படவே செங்கலங் கலி ரத்த மாகில் தீராது
நன்னிச் சீளாய் சீய் விழுந்து பின்னை நனக்குஞ்சே புண்ணே.

பிறவீச்சு வாதத்துக்கு என்னை:-

185. நத்தைச் சூரி நாயுருவி நல்ல சாறனை கொடுவேலி
சுத்தி வீழாய்யாதன்டை சொல்லும் வெள்வெலெருக்குடனே
முத்தக் காதனை, புங்கங் கொட்டை முல்லை வில்லா யீசுர மூலி
யித்தைச் சேவுக நன்னாரி யினிய வேரிதழ்க் தாமரையே.

186. அரையா முத்த மஞ்சள் உள்ளி யதுவே வசம்பு வேர்க் கொம்பு
கரையா மிளகு திப்பிலியுங் கடுகோடோமம் வெண்காரம்
விரையார் கெந்தம் நேர்வாளம் வெண்கோட்ட மேவும் அதிமதுரம்
புரையா பூமி சக்கரையும் புதிய நெல்லி வெளுத்தைப் பிசின்.

187. பிசிலுறொ ன்று களஞ்சு கொண்டு பின் நல்லெண்ணை நஞ்சு நெய்யும்
வசவேப்பெண்ணை சித்தா மணக்கு மருவிய எண்ணை யிவை வடித்து
பூசு மேலதன்னில் வரைச்சாமம் பொழுது தவிடு வேதில்
நசுவே யது தான் பட்டை நன்கு யூறி விடுவதே.

188. வேது பிடித்த முன்னும் முந்த லை யுள்ளி ரண்டி மாய்
மோரது மொவ்வொன்றெரு பலமாய் முன்ன மெண்ணை தனிற் போடு
பேதயிலைல மறந்தது தான் பெரியோர் பொழுமினி பத்த மழை
மாதே யிதனை வழுவாமல் மனத்திறு மருகி கொள்வீரே.

189. வயத்துக் கடுப்புக்கு நெய்:-

பனிச்சை, தத்தி மலைதாங்கி பகரும் வறப்புல்லா முத்தம்
முனித்த சுக்கோரதி விடையம் முதிர்ந்த நற்சீரக மோதகமும்
தனித்த கைப்பினிற் குந்திருக்கந் தானே கழஞ்சு கொண்டு நெய்
வனித்து வேக வைத்துருக்காதே வயத்துக் கடுப்பு ஆறுமே.

190. உடல் சேர் வறச்சிக் கடுப்புக்கு நெய்:-

முத்தக்காசு மலை தாங்கி முதிர்ந்த தத்தி நிலப்பனை வேர்
கைத்த காசுக் கட்டி நெல்லி கருஞ்சந்திருக்கம் சீரகமும்

சுத்த மிகவும் சாதிக்காய் துலங்கு மிலவம் பிசின் விடையம்
வைத்தே யெரித்து நெய் கொள்ள மயங்கும் பித்தச் சொதிப்பருமே.

<u>கபால கரப்பானுக்கு என்ணை:-</u>

191. நன்ன முத்து சா துவளை நயக்கும் பொன்னூர் சீதேவி
சொன்னே மிதளோர் தாமரையும் தூய சிவனார் நிலவேம்பு
வன்னேர் நெத்து யுரள ஞும்மை மலை தாங்கி வட்டுங் சொன்றை வேர்
யின்னூர் கள்ஞ்சு கொண்டு யீந்தே கடையில் சரக்குமிடே.

192. சுக்கு மிளகு திப்பிலியுந் தூய்ய கடுக்காய் யிந்துப்புத்
தக்க கருஞ்சீரகம் வசம்புள்ளி சரி சொன்ன காம பழங்கைப்பு
மிக்கீ கடுகுரோகணியும் வெகுத்தப் பிசினோடதிமதூரம்
ஒக்கக் கூட்டில் என்ணையுடன் ஒடுங்க பால கரப்பனிதே.

<u>நிதம்ப_சூரைக்கு_புகை:-</u>

193. பாம்பிங் கண்டம் மங்கிலியம் படுக்கை யிமிமல் பொடி செய்து
சாம்பல் போக்கித் தனலெடுத்துச் சட்டியிலிட் டொன்டைத்தனை
தாம்ப உரல் கொண்டதைக் கவிழ்த்து சுக்மா யாளை யகிலிருத்திக்
தேம்பப் பொடியை யதில் தூவி திகமாய்ப் புகைக் கல்லிடுமே.

<u>நிதம்ப_சூரைக்கு_என்ணை:-</u>

194. முடக் கொத்தான் சாறு உரி நல்லெண்ணை உரி யெருமை சீயாத வேர்
கொம்பு வசம்புள்ளி பெருங்காயம் திருகுக் கடுகுடனே யிந்துப்புச் சீனசாலை
சீதாறி தேவதாரம் சதகுப்பை யோரொன்று அடுக்கிட்டு அரைக்களஞ்சு
அரைத்து அதில் கலக்கி அடவாக வெந்தறக்கி யான தினமுங் கொள்ள
பி நடுக்கிட்டு மிக வலித்து வரும் நிதம்ப சூரை நிச்செயமாய் தீருமென்று
நிகழ்த்தினர் நன்முனியே.

<u>உட்காச்சலுக்கு முடிநீரு:-</u>

195. ஆவின் பாலுடன் சீனியு மேவு சாத்திர வேதியுமாகவே
தாளி திநாற்பது நாள்து தான் குடி பாவுமுட் சுரமோடிப் பதங்குமே.

<u>பித்த_சுரத்துக்கு_நெய்:-</u>

196. பொன்னாங்கண்ணி முசுமுசுக்கை புரிதாள பழம் பாசி
நன்னி பூலாவிலைச் சாறும் நல் சித்தாமுட்டி சீதே
முன்னு தாழை விழுதுச் சாறும் முந்தப் பசும் பால் இளநீரும்
மன்னு கோட்ட மதிமதூரம் வரு நற்சீரகம் நெல்லியுடன்.

197. உடன் கொத்தமல்லி செண்பகப்பூ உடனுகப் பூ மஞ்சள் உடன்
விடந்த தேத்தாங் கொட்டை சந்து மிக்க நன்னாரி முத்தக்காசு
படந்த விலாமிச்சு யிருவேலி பரிவாய் முக்களஞ்சோரொன்று
அடந்த நெய் பண் சீனியுடன் அளவாவிக் கொள்ளுமது போமே.

<u>மருந்து_கபால_கரப்பானுக்கு_என்ணை:-</u>

198. பொன்னாங்காணி சீதேவி புது நெல்வேம்பு சிறுகீரை
மன்னூரிதழ் <u>கீளங்காய் நெல்லி</u> வருத்தக்கள்ளி கொய்யாவுடன்
முன்னூர் சேப்பு நெருஞ்சி நெய்தல் முருநீர் பூலா மொசுமொசுக்கை
சின்னூர் வராகி குளிர் பூதம் மியல் சித்தாமட்டி சித்த மல்லி.

199. பெரிய மல்லி நிலத் தூமுள் முல்லையும் பின் நன்னாரி விலாமிச்சு முத்தமும்
புரியவேலி நரிப் பயறு பிரமுட்டி தண்ணீர் மிட்டான் சாறதுவும்
உரிய தாவின் பால் நாழி யிளநீரும் யொக்க நாழி தயிர் தண்ணீர் நாழி
வெதிமசந்தனம் கோட்டம் மிகவல்கம் புதியசீரகம்
[illegible].மே

200. கோல சாத்திர வேதி கிரியறல் சந்தனம்
வாலமான வசுவாசி தன்னுடன் வகையில் லொன்று யிருகளஞ்சாகவே
ஏலங் கூட்டி நெய் நாழியுங் கூட்டி யிதை வடித்த நெய்யது நல்லதே.

201. நல்ல சீடின் நெய்யுஞ் சரி நக்க நன்ற தாமிப் பிறமியமு முள்ளதும்
அல்லதாகிற் சலஞ் சிக்கி நீக்கு மெய்யது வுடன் செந்தூரங் கூட்டிக் கொள
மெல்லவே யன்ர மண்டலம் மிப்படி வியன் கொள் வெக்கை யொடு கறப்பதும்
நல்லதாய்ப் பின் பத்தியமாங்கிடும் நிலவிங் கொள்ள வொன்று சாலுமே.

202. ஆயுர்வேதஞ் சொன்ன அதன்படி வியாதியுள்ள நோய் குறிகுணமுங் கண்டு மருந்து செய்வோம்
தீவைந்த விட்டும் தெளிவில்லா பரிகாரத்தால் மாயவே மருந்து தாமும் மருபடி வியாதியாமே.

203. மாத மாதம் விரேசனம் வாந்தியு மாதர் தங்களிடம் போகுதி மட்டிலே
போதவுண்டு வுற நடை கொள்வதும் பூரணப் படப்பாலே பருகுவாம்
வேத முன் சொல்லும் வென்னீர் குடிப்பதும் மீன்று மலிருப்பது முன்டென்கில்
வாத பித்தந் தனிலே பகைத்திடும் மானிடர்க்கு மறலியு மில்லையே.

204. பெருமான் சிறுமான் கற்பம்நொச்சித் தயிலத்தில் கொள்ளவும்.

நிம்ப நொச்சி யிரண்டின் வேர் நோக்கக் கொத்தித் தயிலமதாய்
நரம்பு பெருமா வரவித்தும் நறஞ்சேர் சிறுமான் வர வித்து
தம்பி குளப்பிக் காசெடை கொள்தானே சாவாத வாவிடுஞ் செம்மைப் பட நோ நோய் குட்டங்கள் தீராப் பறங்கியது போமே.

205. ரச பற்பம்:-

உளதே வெத்திலையில் தின்ன வுள்ள கடுப்புக் குத்தப் போம்
மீதே பிறம்பூச மிக்க சூலை பெரிய வாதம் பித்தம் சேட்டிமம்
சேதம் செய்யும் வன்மமெட்டுந் தீரா வாயு சலக் கழிச்சல்
பாதம் பத்தும் பெருவாதம் பரந்த வீக்கம் பறங்கியிடை சீதமுடனே வெற்ப் போடச் செய்யு மிரத பற்பமிதே.

*மேல் வருவன. மருந்துகளின் அனுபானமும் பச்சிலை மூலிகைகளின்
பேர் முதலியன விடப்பட்டன.

* * *

<u>நசியம் சுரத்துக்கு குடிநீர்:-</u>

பெருங்கிழங்கு முருங்கைப் பட்டை, கொடிவேலி வேர், பிறண்டைக் கொழுந்து, மிளகு கூட்டி அரைத்து நசியம் பண்ணவும். வென்னீரில் விடவும். பத்தியம் பிடிக்கவும். சுக்கு, சீந்தி, செவியம், விலாமிச்சம் வேர் வகைக்கு பலம்.க, கூட்டி கசாயம் வைத்து திப்பிலி வறுத்துபொடி பண்ணி தூவிக் கொடுக்கவும். நெல்லிமுள்ளி, கடுக்காய், தானிக்காய், தாமரை வளையம், வாய்விளங்கம், கொன்னைப் பட்டை வகைக்கு .க, கூட்டி கசாயம் வைத்து திப்பிலி பொடி தூவிக் கொடுக்கவும்.

சுரத்துக்கு:- தாமரை வளையம், அல்லிக் கிழங்கு, செங்களநீர்க் கிழங்கு, அதிமதுரம் இலுப்பைப்பூ, வகைக்கு.உ ,திப்பிலி பொடி தூவிக் கொடுக்கவும். நெல்லிக்காய், தானிக்காய் நாயுருவி, இருவேலி விலாமிச்சம் வேர், தாமரை வளையம், சங்கம் வேர், வகைக்கு.உ கசாயம் வைத்துக் கொடுக்கவும்.

<u>பித்த சுரம்:-</u>

பேய்ப்புடல், நிலவேம்பு, யிஞ்சி, ஆடாதோடை, சிறுவழுதலை, சுக்கு, முன்னைவேர் காஞ்சொறி வேர் கசாயம் வைத்துக் கொடுக்கவும்.

<u>மூன்று சுரத்துக்கு:-</u>

சீந்தி, வேப்பயீர்க்கு, திரிபாலை, பேய்புடல், கடுகுரோகணி, காஞ்சொறி,

பெருங்குரும்பை பட்டை வேர் கசாயம் வைத்து தேன் விட்டு கொடுக்கவும். சிறு தேக்கு, நிலவேம்பு, திப்பிலி, கோஷ்டம், முத்தக்காசு, காஞ்சொறி, பர்படாகம், சீந்தி, கண்டங்கத்திரி, சுக்கு கசாயம் வைத்து தேன் விட்டு கொடுக்கவும். சுக்கு, வசம்பு, சீந்தி, கண்டங்கத்திரி கசாயம் வைத்துக் கொடுக்கவும். சந்தனக் கட்டை, நன்னாரி, கொட்டிக் கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, முந்திரிப்பழம், இலுப் பைப்பூ கசாயம் வைத்துக் கொடுக்கவும். முந்திரிப்பழம், விலாமிச்சம் வேர் இரு வேலி கசாயம் வைத்துக் கொடுக்கவும்.

<u>பித்த சுரத்துக்கு:-</u>

சீந்தி தண்டு கழஞ்சு.15, சுக்கு கழஞ்சு நாலு இடித்து கசாயம் வைத்து தேன் விட்டுக் கொடுக்கவும். ரசம், வெண்காரம், கெந்தகம், நாபி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, அரிதாரம், இந்தப்பு சிஒரு வகையும் வகைக்கு ஒரு விராகனிடை நேர்வாளம் ஐந்தரை விராகனிடை இது இந்தப் படி கூட்டி கல்வத்தில் வைத்து முதல் முருக்கிலைச் சாற்றில் ஒரு சாமம் அரைத்து பின்பு இஞ்சி சாற்றில் ஒரு சாமமரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி இஞ்சி சாற்றில் ஒரு உருண்டை கொடுக்கவும். அசீரண சுரம், சன்னி, சுவாச காசம் இவைகள் எல்லாந் தீரும்:

<u>ஆனந்த வயிரவன்:-</u>

சாதிலிங்கம், நாபி, சுக்கு, திப்பிலி, மிளகு, வெண்காரம், கெந்தகம் இவைகள் சமன் கூட்டி எலுமிச்சம் பழச்சாறு ஒரு சாமம் வாத்தரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலத்தி யிஞ்சி சாற்றில் ஒரு உருண்டை கொடுக்க சுரம், சன்னி, வாதம் இவை யெல்லாந் தீரும்..

<u>சந்திரோதயக் குளிகை:-</u>

நாகம், வெண்காரம் பலம்.உ, சாதிலிங்கம் பலம்.4, நேர்வாளம் பலம்.8, ரசம் பலம்.க, இவைகளெல்லாம் இந்தப்படி கூட்டிச் சாறணை சாறு வாத் தரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை பண்ணி இஞ்சி சாற்றில் மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் பயத்தங் கஞ்சி கொடுக்கவும். சுரவ சுரமுந் தீரும்.

<u>திராகூநாதி குளிகை:-</u>

முந்திரிப்பழம், இலுப்பைப்பூவு, அதிமதுரம், திப்பிலி, பேரீச்சம் பழம், நல்ல சந்தனம், நன்னாரி வேர், வெட்டி வேர், விலாமிச்ச வேர், முத்தக்காசு கோஷ்டம், தாமரைத் தாது, கோரோசனை, கற்பூரம் பன்னி பச்சை நாலி, சாதிலிங்கம் இவைகளெல்லாம் பாதி சாஸ்திர வேதி பாதி கூட்டிக் கல் வத்திலரைத்து கருப்பஞ் சாறு தன்னி முட்டான் சாறு இது இரண்டிலும் ஒரு சாமம் விழுக்காடு அரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலத்தி ஒரு உருண்டை கருப்பஞ் சாறுதல் முலைப் பாலாகுதல் இளநீரிலாகுதல் அனுபானித்துக் கொடுக்க வும். சுரவ சுரமுந் தீரும்:

<u>திரியோத சன்னிக்கு:-</u>

ரசம் கெந்தகம், நாபி, மிளகு, வெண்காரம், திப்பிலி இது சரி கூட்டி ஊமத்தையிலைச் சாறு வாத்தரைத்து இரண்டு குன்று மணி பிரகாரம் உருண்டை பண்ணி நிழலுலத்தி ஒரு உருண்டை எருக்கம் வேர் கசாயத்தில் சுக்கு, மிளகு, திப்பிலி இது மூன்றும் இள வறுப்பாய் வறுத்துப் பொடி செய்து இந்தப் பொடியும் ஒரு உருண்டையும் அனுபானத்தில் கொடுக்கவும். மூன்று சன்னி வாதமுந் தீரும்.

~~சுரவ சுரத்துக்கு:-~~

சுரவ சுரத்துக்கு:- 12.11.63.

கெவுரி பாஷாணம் க, கல்சுண்ணாம்பில் முடிஞ்சு வெண்ணெயில் தோய்த்து கொதிக்க விட்டு ஆறின பின் எடுத்து வெத்திலைச் சாறு வார்த்து ஒரு சாமமரைத்து பனி பயறு பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி ஒரு உருண்டை முலைப்பாலிலரைத்துக் கொடுக்கவும். மூன்று நாள் கொடுக்கவும். இதுக்கு மாத்திர பச்சைப் பயறும் அரிசியும் உப்பில்லாமல் காச்சித் தெளிவிலிருத்து மருந்து கொடுத்து ரெண்டு நாழிகைக்கு பிறகு இது கொடுக்கவும். இது கொடுத்து ஒரு நாழிகைக்கு மேல் வேறே பச்சைப் பயறும் அரிசியும் உப்புங் கூட்டிக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். மருந்து கொடுத்து பதினெட்டு நாழிகைக்கு சுரம் விடும். இது கை கண்டது.

சீத சுரத்துக்கு பாஷாண குளிகை:-

[illegible]க்தம், துருசு, அரிதாரம், வெண்காரம், நேர்வாளம், கெவுரி பாஷாணம் இது ஆறும் சமனாக வட்டி உம மத்தையிலைச் சாற்றிலரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி ஒரு உருண்டை குளிர் வருகிற போது புத்து மிளகும் இந்த உருண்டையும் இள வெந்நீரிலரைத்துக் கொடுக்கவும். பச்சை பயத்தங் கஞ்சி கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். எலிப் பாஷாணம், கல் சுண்ணாம்பில் சுத்தி துணியில் முடிந்து பாலில் போட்டு சுத்தி பண்ணி நிழலுலர்த்தி ஒரு உருண்டை குளிர் வருகிற போது மோரில் கொடுக்கவும். பத்தியம் மோரும் சாதமும் கொடுக்கவும். இந்தப்படி மூன்று நாள் கொடுக்கவும்.

அதிசார சுரத்துக்கு ரச குளிகை:-

விளாம்பிசின், அபினி, கஞ்சா இ. இலைச் சாறு வார்த்தரைத்து தா. விளாங்காய் மாத்திரம் உருண்டை பண்ணி உதைய காலத்திலே எருமைத் தயிருடனே ஒரு உருண்டை இட மூன்று நாளிடவும். பத்தியம் தயிரும் சோறும். வயறு கட்டுப் படும்.

சித்தி கிரிசை எலுமிச்சம் பழச்சாறு படி. ¼ இதிலே யொரு காசிடை வெண்காரம் பொரித்துப் போட்டு கொடுக்கவும். கல்லடைப்பு கல்லு விழும். செவ்விள நீரில் பத்து தேத்தாங்கொட்டை அரைத்து சர்க்கரை யேலம், மிளகு போட்டு கொடுக்கவும். மூத்திர கிரிச்சம் தீரும்.

சன்னி பொட்டணம்:-

புன்னை விரை, ஆமணக்கு விரை, வேப்பம் விரை, மகிழம் விரை, களக்கொட்டை விரை, தேங்காய்த் துருவல், புங்கம் விரை, பருத்திக் கொட்டை, முருங்கை, இலுப்பைப் பருப்பு, அகத்தி விரை, சணப்பம் விரை, கடுகு, அழிஞ்சி விரை, சித்தரத்தை, செங்கழுநீர்க் கோஷ்டம், கொள்ளு பேரெள்ளு வெள்ளைப் பூண்டு, வசம்பு, பெருங்காயம், இந்துப்பு, விழலரிசி, வெட்பாலை அரிசி, வாலுளுவை அரிசி, கார்போகரிசி, எட்டிக் கொட்டை இது வெல்லாம் சமனாக இடித்து ஐந்தெண்ணெயும் விட்டு பிசைந்து பொட்டணங் கட்டி ஐந்தெண்ணெயில் ஊற வைக்கவும். சன்னி வாத ரோகம் வந்த பேருக்கு ஐந்தெண்ணெயும் காய வைத்து பொட்டணத்தை தோய்த்து ஒத்திடம் போடவும். சன்னி வாதம், வாதரோகம் இவை யெல்லாந் தீரும்.

சாதிக்காய், வெள்ளெருக்கம் வேர், கிராம்பு, சுக்கு புட்டி வெல்லம், குங்குமப்பூ, ஆனைதிப்பிலி, கற்பூரம், சந்தனம், அப்பிரகம் இது வெல்லாம் சமபாகம் அபினியொன்று மட்டும் பாதி இது இரண்டும் கஞ்சாயிலைச்சாறு வார்த்தரைத்து இரண்டு பணவிடை குளிகை பண்ணிச் சர்கரையிலாவது பாலிலாவது அந்தியும் போது கொள்ளவும். பத்தியம் பாலும் சோறும் சர்க்கரையும் கொள்ளவும்.

மதன விகார முத்து:-

சாறணைக் கிழங்கு, காட்டுக் கருணைக் கிழங்கு, புளியறணைக் கிழங்கு, கொடி

வேலிவேர், வெருகங்கிழங்கு, பிறண்டை பஞ்சலவணம், சத்தியவட்சாரம், வெவட்சாரம், பெருங்காயம், வசம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, அசமதாகம், சீரகம், கருஞ்சீரகம், கடுகு இதுகள் எல்லாம் வகைக்கு பலம். ½ கூட்டிப் பால் வாத்த ரைத்துக் கருணைக் கிழங்கை சொம்பு போலே தோண்டி அரைத்த மருந்தை அதிலே அடைத்து அதின் மேலே ஒரு விரல் கனம் பசுவின் சாணம் பூசி காட்டு முட்டையில் புடமிட்டு வெந்த வாறே எடுத்து மேல் சாணி வாங்கிப் போட்டுக் கருணைக் கிழங்கும் மருந்தும் கூட்டி அரைத்து அவின்டக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி ஒரு உருண்டை தேனிலே ஆகுதல் நெய்யிலே ஆகுதல் எண்ணெயில் ஆகுதல் வென்னீரில் ஆகுதல் பனிரெண்டு நாள் கொள்ளவும். உன்மம். 8, மகோதரம். 8, அழுலை வெப்பு பாவை, கீழ்க்கவுசை, மேல் கவுசை, நாகப்பாம்பு, திமிரிப்புழு, மந்தாக்கினி இவை யெல்லாந் தீரும்.

<u>அஷ்ட உன்மத்துக்கு</u> :-

வில்வவேர், சித்ராமுட்டி வேர், நொச்சி வேர், சாட்டறணை வேர் இது ஐந்தும் வகைக்கு பலம். உ, நேர்வாளம், அரப்பொடி, கிட்டம், சிவதை வேர், கருணைக்கிழங்கு, கல்லுப்பு இது வகைக்கு பலம். க, இதுகள் இந்தப்படி கூட்டி கோமூத்திரத்தில் உள் மண் கரை தெளிவை யிறுத்து அந்தத் தெளிவிலே இந்த மருந்தை யெல்லாம் அரைத்துக் கொண்டு ஒரு சட்டியிலே பசுவின் மோர் நாழுழி காடி நாழுழி விட்டு நாற்த்தம் பழச்சாறு இரு நாழி கூட விட்டு முன் அரைத்த துகையைப் போட்டு இதுக்கு உப சூரணம் பெருங்காயம், சத்தி யவட்சாரம், புங்கம்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, பஞ்சலவணம், வசம்பு, கடுகு, சாறணை வேர், கடுக்காய் ஆயில். ப பட்டை, செவியம், கெந்தகம், திப்பிலி மூலம், சீரகம், தேவதாரம் தானிக்காய், நெல்லிமுள்ளி, மஞ்சள் இது வகைக்கு பலம். ¼ கூட்டிச் சூரணம் பண்ணி முன் துகை போட்டதிலே கூடப் போட்டு கடுக்காய், கிளறி ஒரு கொட்டைப் பாக்களவு சாயந்திரம் கொள்ளவும். அஷ்ட உன்மமுந் தீரும்.

<u>உள்மூலம், பிறமூலம், மகாசன்னி, குடல் வாதத்துக்கு மருந்து</u> :-

வில்வல வேர், புங்கம் வேர், சாறடை வேர், சித்திரமூலம், கூக்காய், சுக்கு, மிளகு இது சரி கூட்டி கசாயம் பண்ணி இந்துப்பு, திப்பிலி பெருங்காயம் இது மேன் பொடி தூவிக் கொடுக்கவும். உன்மம், உள்மூலம், பிறமூலம், மகாசன்னி இவை தீரும்.

<u>குடல் வாதத்துக்கு</u> :-

வெள்ளைப் பூண்டு வேளைவேர், முடக் கொத்தான் கடுக்காய், கொட்டைக் கரந்தை, கழல் கொட்டி பருப்பு, சித்திர மூலம், திப்பிலி, மிளகு சாறணை வேர் விழுதி வேர், முருங்கைப் பட்டை இது சரி கூட்டி கசாயம் பண்ணி கொடுக்க குடல் வாதம் தீரும்.

<u>அந்தார வெட்டுக் குடல் வாதத்துக்கு வேறு வேறு</u> :-

ஆமணக்கு வேர், செம்முள்ளி வேர், நொச்சி வேர் இது மூன்றும் கசாயம் பண்ணி மேன் பொடி போட்டுக் கொடுக்கவும். அந்தர வெட்டு குடல் வாதம் தீரும்.

(வேறு)

ஆட்டுப் பாலாகுதல் பசுவின் பாலாகுதல் இருநாழி பால் நாட்டுரி நீர் வார்த்து நீர் சுவறக் காய்ச்சி ஒரு படி உள்ளிக் கிரியும் ஒரு படி நொய்யரிசியும் போட்டு பாலில் சமைக்க விட்டு நஞ்ச பிற்பாடு காலமே உதயத்துடனே சாப்பிடவும். ஆகாரம் ராத்திரிப் பண்ணவும். அந்தர வெட்டுக்கு ஏழு நாளும் குடல் வாதத்துக்கு ஐந்து நாளும் கொள்ளவும்.

(வேறு) திப்பிலி :-

(வேறு)

திப்பிலி, சுக்கு, பெருங்காயம், இந்துப்பு சரியாகச் சூரணம் பண்ணி இள வென்னீரில் கொடுக்க அந்தர வெட்டுந் தீரும்.

திராவியாதி சூரணம்:-

முந்திரிப்பழம், ~~நெல்லரிசி,~~ நெல்பொரி, சதகுப்பை, நெய்தல் கிழங்கு, அதிமதுரம், பேரீச்சம் பழம், நன்னாரி வேர், கைநர், வெட்டி வேர், நெல்லிமுள்ளி, கோரைக் கிழங்கு, சந்தனம், கோட்டிக் கிழங்கு, கற்கோலம், புட்டில் சாதிக்காய், ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, கிராம்பு, திப்பிலி, கொத்தமல்லிகை விரை இதுகள் சமபாகம் சூரணம் பண்ணி இதுக்குச் சரியாக சர்க்கரை கூட்டி அன்டம் மூவிரல் கொண்ட மருந்தும் மூவிரல் கொண்ட சர்க்கரையும் கூட்டிக் கொள்ளவும். பயித்திய தாகம் சோபம், வெறித்த பித்தம், தாபசுரம், யெரிவு இது வெல்லாம் தீரும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, அசமதாகம், இந்துப்பு, கருஞ்சீரகம் இதுகள் சம பாகம் இதுக்கு எட்டிலொன்று பெருங்காயம் இதுகள் இந்தப்படி இள வறவையாய் வறுத்துச் சூரணம் பண்ணி அன்னத்தில் மூவிரல் கொண்ட அள் போட்டு நெய்தான் நல்லெண்ணை ஒரு திப்பிலி கரண்டியில் எடுத்து எரியக் காய்ச்சி அன்னத்தின் மேல் போட்ட சூரத்திலிட்டுப் பிசைந்து சாப்பிடவும், அக்கினி சுத்தி உண்டாம்.

மகோதரத்துக்கு:-

முத்தின சாட்டறணை வேர் கொண்டு வந்து நருக்கிப் பாலிலே வேக விட்டு உணர்த்தி இடித்து சூரணம் பண்ணி இந்துப்பு இந்தச் சூரணத்திலே போட்டு யெட்டிலொன்று கூட்டி வெல்லம் பாதி காய்ச்சி இந்தச் சூரணம் போட்டு லேகியமாகக் கிளறி பசுவின் நெய் விட்டுக் கொள்ளவும். குன்மம் மகோதரம் மந்தாக்கினி இவை தீரும். நூறு வயது இருப்பான்.

சாறடை வேர் கொண்டு வந்து நருக்கிப் பசுவின் பாலிலே வேக விட்டு எடுத்து இடித்து சூரணம் பண்ணி இதுக்கு உப சூரணம் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, கருஞ்சீரகம், இந்துப்பு சத்தி யவட்சாரம் யவட்சாரம், பெருங்காயம், காட்டாமணக்கு கிழங்கு இது வெல்லாம் சரியாகக் கூட்டிச் சூரணம் பண்ணி இந்த சூரணம் பாதியும் சாட்டறணைச் சூரணம் பாதியும் பழைய வெல்லம், நெய் இரண்டிலும் குழப்பிக் கொள்ளவும். மகோதரம் எல்லாந் தீரும்.

சந்தனாதி கிருதம்:-

நல்ல சந்தனம் பலம்.5 நெறிடித்துப் போட்டு குடிநீர் தண்ணீர் விட்டு இரு நாழியாய்க் காய்ச்சி இறுத்துக் கொண்டு பசுவின் நெய் யிரு நாழி விட்டுப் பசுவின் பால் பருங்கொட்டைப் பருப்பு, ஏலம், திப்பிலி, நெற்பொரி இது சரியாகக் கூட்டி சூரணம் பண்ணி இந்தச் சூரணத்தில் இரட்டிப்பு சர்க்கரை கூட்டி தினம் ஒரு காசிடை கொள்ளவும். மூத்திரக் கிருச்சந் தீரும்.

கல்லடைப்புக்கு:-

எலுமிச்சம் பழச்சாறு படி.1/8 இதில் ஒரு விராகனிடை வெங்காரம் பொரித்து மேன் பொடி போட்டுக் கொடுக்கக் கல்லு விழுந்து போகும்.

முள் முருக்கிலைச் சாத்திலாட்டி $\frac{1}{2}$ நாழி பசுவின் பால் விட்டுக் கொடுக்கக் கல் விழும். கய்யாந்தகரைச் சாறு.உ, நெல்லிக்காய்ச் சாறு.உ, பசுவின் பால், அதி மதுரம் பலம்.உ அரைத்துக் கரைத்து பதத்தில் வடித்து முழுங்கவும். நரை திரையாகும். கேளாத காது யிவைகள் தீரும்.

சங்கிலை, சின்னியிலை, சங்கங்குப்பி, இலை, கோளிமாவாரை யிலை, கொட்டைக்கரந்தை இலை, மணத்தக்காளி, செருப்படி, கய்யாந்தகரை, அவுரி யிலை, நாயுருவியிலை, வேளை வேர், நாய்வேளை வேர் தூதுவளை யிலை, சிறுகாஞ்சொறி இலை,

கோவையிலை, பொடுதலை, தவசி முருங்கை யிலை, காட்டு மல்லிகையிலை, கத்தாழ மடல், மீந்கிலை, அதிமதுரம் பலம். ½ நன்னாரி வேர் பலம். ½ அரைத்துக் கரைத்து பதத்தில் வடித்து சர்க்கரை மேன் பொடி போட்டு சாயந்திரமாகக் கொள்ளவும். ரத்த பித்தந் தீரும்.

__மகோதரத்துக்கு:-__

கோமூத்திரம். 4, பால். 4, சாணச்சாறு. 4, தயிர். 4 இந்தப் படி கூட்டி இதில் நாகப்பூ, கண்டங்கத்திரி, சிறுவழுதலை, நெல்லிமுள்ளி, கடுக்காய், தானிக்காய், தாளிசபத்திரி, ஏலம் இது வகைக்கு விராகனிடை 4 கூட்டி அரைத்து கரைத்து இதில் சதிரக் கள்ளிப் பால். 1/8 விட்டு பதத்தில் வடித்துக் காலமே ஒரு கரண்டி கொள்ளவும். மகோதரம் தீரும்.

__கரப்பானுக்கு:-__

வெண்ணொச்சியிலை, கருநொச்சியிலை, துளசியிலை, குப்பைமேனி, சாரணை, முசுமுசுக்கை, சிலந்தி, நாயகம், சிரந்தி நாயகம், கோழியிலை, காவேளை யிலை, மெருகங்கிழங்கு, ஈர வெங்காயம், வெதுப்படக்கி, கண்டங்கத்திரி, நறிமுள்ளி, சிவப்பு நெருஞ்சி, முக்குறட்டை, முடக்கொத்தான், கோடகசாலை, தேள் கொடுக்கிலை, தகரையிலை, வெள்ளறுகு இதுகள் எல்லாம் கூட்டி நருக்கிப் பிழிந்து விளக்கெண்ணையில் கூட்டி கலந்து இதுக்கு கற்கம் சீரகம், கருஞ்சீரகம், கம்பி பிசின், மரமஞ்சள், பூதகரப்பான் பட்டை; வாதகரப்பான் பட்டை; வேப்பம் பட்டை, சதகுப்பை, வசம்பு, செங்கத்தாரிப்பட்டை, பறங்கிப்பட்டை, தானிக்காய், நெல்லிமுள்ளி, வெள்ளைப்பூண்டு, அவுரி வேர், பிராய் வேர், புங்கம் வேர் இது ஒரு படி எண்ணைக்கு ஒரு விராகனிடை விழுக்காடு கூட்டி வெள்ளாட்டுப் பாலும் கழுதைப் பாலும் எண்ணைக் கிரட்டிப்புக் கூட்டி முன் பச்சிலைச் சாறுகளும் எல்லாம் எண்ணைக்குச் சரி கூட்டி அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து பெரியவர்களுக்கு 1/8 படியும் குழந்தைகளுக்கு 1/16 படியும் எண்ணையும் கொடுக்கவும். உப்பில்லாமல் கஞ்சி குடிக்கவும். இந்தப்படி நாலு நாளைக்கொருக்கால் நாலு முறை கொடுக்கவும். எப்படிக் கொத்த கரப்பானுக்கும் கொடுக்கவும். கை கண்டது.

எலி கடிக்கு

வெத்திலை பாக்கோடே முசுமுசுக்கை விரையைத் தின்ன எலிகடி தேள் தீரும். சித்தாமணக்கு வேர், முருங்கை வேர், பேய்ப்பீர்க்கம் வேர் இது மூன்றும் தண்ணீர் வாத்தரைத்து குடிக்க எல்லா எலி கடியுந் தீரும்.

இரும்பிலி விரை, வெத்திலை பாக்குடன் தின்னக் கல்லெரிப்புத் தீரும். இந்த விரை தண்ணீரில் குடிக்க கல்லு விழும். சிவனை வேர் கொண்டு வந்து நருக்கி உள்ளக் கழி தள்ளிப் போட்டு மேல் பட்டையைப் பாலில் வேக வைத்து எடுத்துலத்தி சூரணம் பண்ணி வெண்ணை வெல்லம் பொடி மூன்றுங் கூட்டி மத்திச்சு மூன்று நெல்லிக்காய்ப் பிரமாணம் கொள்ளவும். வெள்ளைக் காக்கணம் வேர் முளி மஞ்சளும் கடுக்காயும் வெள்ளாட்டு மூத்திரத்தில் அரைத்துக் கரைத்துக் கொடுக்க மூன்று நாள் கொடுக்க மகோதரம் தீரும்.

__விரோசனம்:-__

~~எலிபொடி~~ எருமிச்சை யிலைச் சாறு சீலையில் தட்டி அரிதாரம் பொடி தூவித் திரித்து விளக்கிலே கொளுத்தி புகை யுண்ணவும். புகைக்கு முன்னே அரை வயது மோருஞ் சோறு முண்டு பின்னை உண்பது கள்ளிப் பால் உரி, பசுவின் பால் உரி, நெய் உரி, எண்ணை நாழி, பசுவின் கோமியம் உழக்கு, சாணைச் சாறு உழக்கு, ஒட்டரை ஒரு பிடி, மிளகு பலம். க, கருங்கொள்ளு ஒரு படி கூட்டி எண்ணையாக்கி நக்குவது. வயறு கழியும். பத்தியம் மோரும் சோறும்.

அரைப்பொடி செய்து மிறை கொண்ட பொடி ஒரு சிறங்கை தண்ணீரில் கொடுக்கவும். கடுகு புளி யெண்ணை தவிழ்ந்து எழுக்கு கொடுக்கவும் பெரு வயறு தீரும்.

பசுவின் பால் தண்ணீர்விட்டான் சாறு கருப்பஞ் சாறு கோவைச் சாறு, நரிப் பயத்தஞ் சாறு இவை யோரோன்றுக்கு நாழி சர்ம அதிமதுரம், சந்தனம், ஏலம், கோஷ்டம் நாகப்பூ; செவ்வள்ளிக் கொ, பேரீச்சம் பழம் இவை யோரோன்றுக்கு அரைத்துக் கரைத்து வடித்து அற்பங்கனம் பண்ணிடப் பித்தந் தீரும். இரு நாழி பசுவின் நெய்க்கு முப்பது கடுக்காய் இந்தக் கடுக்காயை ஒன்று ரெண்டாக வெட்டி மேல் பாதியை வைத்து கீழ்ப்பாதியைக் குளி தண்ணீரில் போட்டு கத்தாழைச் சருகு பிடித்துப் போட்டு இரு நாழியாகக் காய்ச்சி பசுவின் பால் இரு நாழியும் நெய்யுடன் கலந்து காஞ்ச கசாயமும் நெய்யுடன் கூட்டி வைத்துக் கடுக்காயை அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து நக்க காமாலை தீரும். நெருஞ்சி வேரை நருக்கி வாயிலடக்கி தலையிலும் முங்கால் கீழும் என்னையைத் தடவி வெய்யிலிலே இருக்கப் பிழுப் புறப்படும். தகரை விரையும், பெருங் காயமும் அரக்கு பேரில் ஊற வைத்து எடுத்துப் போரில் தானே அரைத்து உள்ளுக்கு குடித்து மேலுக்கு பூச படர் தாமரை தீரும். அக்கந் திப்பிலி, நெல்லிமுள்ளி, இந்துப்பு, இது சரி கூட்டி எலுமிச்சம் பழச் சாத்திரா ற வைத்து எடுத்து எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து உருண்டை பண்ணி நிழலுலத்தி முலைப் பாலிலிட நேத்திர ரோகந் தீரும். பிறிசல் கண்ணுக்கு கய்யாந்தகரைச் சாத்திலிட்வும். புகைச்சல் கண்ணுக்கு முருங்கையிலைச் சாத்திலிடத் தீரும். நந்திக் காக்கணம் பூ கருவேல் வேர் வெள்வேல் வேர், தன்னீரி லொக்கக் கூட்டி இளநீர் வாத்தரைத்து நிழலுலத்தி முலைப் பாலிலிடக் கண்ணெழுச்சி முடமயிர் பிறிசல் கண் பூப்பட்ட கண் இவை தீரும்.

முருங்கை விரைப் பருப்பு இருபது மிளகு இருபது சாறணை இலைச் சாத்திலரைத்து வெயில் வைக்க தயிலமாம். இந்த தயிலம் சிமிழிலடைத்துக் கண்ணுக்கிடக் கண் ரோக்காடுகளெல்லாந் தீரும்.

கடுக்காய் , வேப்பம் பருப்பு, திப்பிலி, மிளகு, தானிக்காய் இலை வெள்ளாட்டு மூத்திரத்திலரைத்து ஒரு சாமமரைத்து உருண்டை பண்ணிக் கரிசலாங் கண்ணி சாத்திலிடப் புழுவெட்டுப் போம். திமிரத்துக்கு குப்பை மேனிச் சாத்திலிடவும். காசத்துக்கு முசுமுசுக்கை சாத்திலிடவும். விஷத்துக்கு முள்ளிச் சாத்திலிடவும். அந்தி மாலைக் களசிச் சாறு இந்தப்படி கிடையாமல் போனால் சகலத்துக்கு முலைப்பாலிலே தான் இள வென்னீரிலே தான் இடவும். கண் புழுவுக்கு தும்பைச் சாத்திலிடவும் பனை மட்டைச் சாத்திலிடவும். பிறிசல் கண்ணுக்கு எலுமிச்சம் பழச் சாத்திலிடவும். குரும்பலுக்கு ஆனைக் குளம்பு தேனிலே யிடவும். நாய் பல்லு தான் நெய்யிலே இடவும். மிறாய்ப்பு, திப்பலி, அசமதாகம், வில்வப் பழம், சுக்கு, மாவிலை, முள்ளிலவம் பிசின், காட்டாத்திப்பு, சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு இது சரி கூட்டி மோரில் கலக்கம் பண்ணிக் கொடுக்க சருவ சுரமுந் தீரும். பெரு மரப்பட்டை முத்தக்காசு, சுக்கு காட்டாத்திப்பூ வில்வப் பழம், வெள்ளி லோத்திர பட்டை, முள்ளிலவம் பிசின், அதிவிடயம், முத்தக்காசு, நீர்முள்ளி விரை, வட்டத்திருப்பி, புளியங்கொட்டைத் தோல், மாவிரை யிலை சரி கூட்டிபச்சை அரிசிக் கழுநீரில் கலக்கம் பண்ணி காசிடை கூடவிட்டுக் கொடுக்கவும். சருவ அதிசாரமுந் தீரும்.

<u>விக்கலுக்கு:</u>-

சந்தனத்தை இளநீரில் காய்ச்சி இறுத்துக் கொண்டு இந்தக் கசாயத்தில் கோஷ்டமும் சகஸ்திர பேதியும் கஸ்தூரியும் அந்தக் கசாயத்தில் கலக்கம் பண்ணிக் கொடுக்கவும். ~~அந்தக் கசாயத்தில் கலக்கம்~~ விக்கல் தீரும்.

நல்லெண்ணை உரி, நெய் உரி, ஆமணக்கெண்ணை உரி கூட்டி செங்கழுநீர்க் கோஷ்டம், உத்தாமணி வேர், அதிலரைத்துக் கரைத்து தலையிலுந் தடவி நெஞ்சுக் குழியிலுந் தடவ விக்கல் தீரும்.

வெங்காரம், பாசாணம், அரிதாரம், கெந்தகம் இவை சரி கூட்டி கொம்பு பாகல் இலைச் சாறு வார்த்தரைத்து உழுந்து பிரமாணம் உருண்டை பண்ணிச் சீரகங் கூட்டிப் பாலில் கொடுக்கவும். சீத சுரந் தீரும்.

இசக்கு சாதிக்காய், சாதிலிங்கம், இந்துப்பு, சுக்கு, நாபி பூ மோரை விரை திப்பிலி இவை தன்னி லொக்கக் கூட்டிக் கஞ்சா சாறு வாத்தரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி தயிரில் இடவும் சுரம், அதிசாரம் தீரும்.

ரசம், அரப்பொடி, சாதிலிங்கம், நாபி, சுக்கு, மிளகு, திப்பிலி, சித்திரமூலம், சாதிக்காய், ஊமத்தை விரை, வெங்காரம், அபினி, கெந்தகம், கஞ்சாவிரை இவை கூட்டி ஊமத்தஞ் சாறு வாத்தரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணிச் சுக்கிலிடவும். சுரம் அதிசாரம் தீரும்.

நாபி, வெங்காரம், லோக பற்பம், சாதிக்காய், காட்டாத்திப்பூ, கொடிவேலி வேர், ஓமம், அப்பிரகம் இவை கூட்டி ஊமத்தைச் சாறு வாத்தரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பசி பண்ணி சுக்கு பொடியுடனிடவும். சுரம் அதிசாரந் தீரும், கிராம்பு, திப்பிலி, கடுக்காய்ச் சாம்பல் வில்லைப் பழம், சுக்கு மாவிரை இலவம் பிசின் காட்டாத்திப்பூ, சீரகம், இந்துப்பு இவை தயிர் வாத்தரைத்துக் குண்டு மணிப் பிரமாணம் உருண்டை பண்ணித் தயிரிலிடவும். அதிசாரந் தீரும்.

விரேசனம்:-

சுக்கு, திப்பிலி பலம்.௧, வெங்காரம் பலம்.௧, கெந்தகம்.௧, நேர் வாளம்.15, இவை இஞ்சிச் சாறு வாத்தரைத்து குண்டு மணி பிரமாணம் உருண்டை பண்ணி இடவும். விரோசிக்கும். சுடு சோறும் மோரும் கொள்ளவும். தேத்தான் கொட்டை இரு காஞ்சி மான் கொம்பு இரு களஞ்சு இவை இரண்டும் பசுவின் மோரில் கலந்து மற்ற நாள் கொடுக்கவும்.

விலகின பிள்ளை விழ:-

ஆடாதோடை விரை தன் சாறு வாத்தரைத்து கையானிலையில் பூச விலகின பிள்ளை விழும். குதிரை லத்தி பசுவின் பாலில் அடிக்கப் பிள்ளை விழும்.

நீர்க் கடுப்புக்கு:-

நெல்லி முள்ளியும், நெருஞ்சி முள்ளும், சிறு பசும்பூளை வேரும், சிறுகுறிஞ்சா வேர் பட்டையும் வெள்ளரி விரையும், சீரகமும், ஏலரிசியும் இவை தன்னிலொக்கப் பொடி செய்து அருகு சமூலமும் கூட்டி இடித்து சாறு பிழிந்து அந்த சாற்றில் சக்கரையும் வேதினை நிறும் பொடியும் சரி யொக்கக் கூட்டி நக்க மூத்திர பொட்டனம் விடும்.

வாதத்துக்கு:-

ஆயில் பட்டை ஒரு பிடி பட்டை, உரி மாவுடன் இடித்து பிட்டு வைத்து பகலைக்கு யெப்போதும் போலே சாப்பிட்டு ராத்திரிக்கு இந்தப் பிட்டைத் தனக்கு வேண்டிய எண்ணை நெய் வார்த்து வெல்லம் போட்டுக் கொண்டு தின்று பாக்கு வெத்திலையும் அடிக்கொருக்கால் தின்று மல்லாந்து தூங்க யெப்படிக் கொத்த வாதமுந் தீரும். மூன்று நாலு நாள் தின்னவும். பத்தியம் பாலுஞ் சோறும்.

குமலா தன்டை யேக மூலிகையாக மரத்தடியில் வாய் பேசாமல் நிறுவான மாக நின்று ஞாயிறு செவ்வாயில் வெட்டி எண்ணைக்குள்ளே போட்டுக் கொண்டு வந்து அதை வாறியெடுத்து உள்ளி வசம்பு கூட்டி எண்ணைக்குள்ளே நாழி எண்ணைக்கு ஒரு மாதம் போட்டு நெல்லுக்குள்ளே வாய் கட்டிப் புதைத்து வைத்து உள்ளுக்கு நக்கி மேலுக்குந் தடவவும். முடங்கின கால் கை நிமிரும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

பீனிசத்துக்கு:-

நல்லெண்ணை படி.௨, நொச்சிச் சாறு படி.$\frac{1}{2}$, இஞ்சிச் சாறு படி.$\frac{1}{2}$, பசு மஞ்சள் சாறு படி.$\frac{1}{2}$, [illegible]தாமரைச் சாறு படி.$\frac{1}{2}$, எருக்கம் பூச்சாறு படி.$\frac{1}{2}$,

பொடுதலைச் சாறு படி.½, துளசிச் சாறு படி.½, சருசலான் கண்ணிச் சாறு படி.½, சாறடைச் சாறு படி.½, முருங்கைச் சாறு படி.½, வெற்றிலைச் சாறு படி,½, தாழை விழுது சாறு படி.½, காட்டு வாழையிலைச் சாறு படி.½, சங்க யிலைச் சாறு படி.½, இந்தச் சாறுகளெல்லாம் எண்ணெயில் கலந்து இதக்கு கசாயம் சங்சம் வேர் பலம்.5, புங்கம் வேர்ப்பட்டை பலம்.5, ஆயில் பட்டை பலம்.5, வசம்பு பலம்.5, அரத்தை பலம் .க, சித்தரத்தை பலம்.க, வெள்ளைப்பண்டு பலம்.உ, இதை இடித்துப் போட்டுக் குணி தண்ணீர் விட்டு நாலொன்றாகக் காய்ச்சி இறுத்துக் கொண்டு எண்ணெயில் கலந்து இதக்கு கலக்கம் அதிமதுரம், கோஷ்டம், திப்பிலி, மிளகு, கஸ்தூரி மஞ்சள், மரமஞ்சள், கம்பு பிசின், செண்பகமொட்டு வெள்ளைக் குங்கிலியம் இது வகைக்கு பலம்.½, பெருங்காயம் பலம்.¼, இப்படிக் கூட்டி வெள்ளாட்டுப் பால் குணியில் அரைத்து பதத்தில் வடித்து அற்புங்கனம் பண்ணவும்.

<u>நசியம்:-</u>

பசுவின் நெய் படி.¼, வெங்காயப்பூ, கிராம்பு, அதிமதுரம், கருஞ்சீரகம், கோ ரோசனை, ஏலம், கஸ்தூரி மஞ்சள் இது வகையொன்று விராகனிடை.க இந்தப்படி கூட்டி கய்யாந்தகரைச் சாறு வார்த்தரைத்துக் கரைத்து பதத்தில் வடித்து நசியம் பண்ண ப்னிசம் நாவ்கையுந தீரும்.

<u>ரச பற்பம்:-</u>

நேர்வாளம்.க, வெங்காள்ளி.க, நாபி ஒரு விராகனிடை இது மூன்றுங் கூட்டி அரைத்து அப்பியாகப் பண்ணி இதுக்குள்ளே ஒரு பலம் ரசத்தை விட்டு ஒரு பானைக்குள்ளே வைத்து ஒரு சட்டி கொண்டு கவிழ்த்து மூடி ஏழு சீலை மண் செய்து தேவதா பூசை பண்ணி மந்தாக்கினி யாக மூன்று நாளெரியிட்டு மூன்று நாளாறு விட்டு எடுத்து மேல் சட்டியை திமித்திப் பார்க்க அதுக்குள்ளே பற்பமிருக்கும். அதை எடுத்துக் கொண்டு அந்தப் பற்பத்தைச் சிமிழிலே வைத்துக் கொண்டு இந்த ரச பற்பம் ஒரு பணவிடையும் தாம்பி பற்பம் ஒரு பணவிடையும் கூட்டி இஞ்சி சாற்றில் கொடுக்கவும் அஉட்ட குன்மந் தீரும்.

<u>கற்பூர வள்ளித் தயிலம்: விஷ பாகத்துக்கு:-</u>

கற்பூர வள்ளிச் சாறு, ஆத்தியிலைச் சாறு இப்பை யிலைச் சாறு, பொருமி யிலைச் சாறு, சங்கிலைச் சாறு, மணத்தக்காளிச் சாறு, வெள்ளருகுச் சாறு, அவரை யிலைச் சாறு அமுக்கிறுச் சாறு, சிறுகீரைச் சாறு, குமட்டைக் கிழங்குச் சாறு, நிலக் கடம்புச் சாறு, சீந்திச் சாறு இந்தச் சாறு வகை யொன்றுக்குச் சாறு படி.க, நல் லெண்ணை நாழியில் கலந்து வெய்யிலிலே ஒரு நாள் வைத்து மற்ற நாள் எடுத்து அடுப்பிலே வைத்துக் காய்ச்சிப் பதத்திலே வடித்து உள்ளுக்கு கொடுத்து மேலுக்குப் பூசவும். இருபது நாள் இப்படி கொள்ள விஷபாதம் தீரும். பிஞ்சயிலே யொரு பணவிடை அபினியை மிஞ்சியைக் கீறி அதிலே அடைத்து அதை எருமைச்சாணம் பழச் சாத்தடைக்கி சீலை மண் செய்து சாணம்பசிப் புடமிட்டு எடுத்து சுபத்துக்கு முதனில் கொடுக்கவும். கிராத்து தனிரில் கண்ணீரில் கொடுக்கவும்.

ரசம் பலம்.4, மனோசிலை.உ, கெந்தகம்.4, காந்தம்.2¼, லோகம்.4½, இந்த ஐந்தும் இந்தப்படி கூட்டிக் கத்தாழைச் சாறு வார்த்தரைத்து வெங்கலப் பாத்திரத்திலே தப்பி வெய்யிலில் வைக்க அது பற்பமாம். அதை எடுத்து உந்து பிரமாணம் உருண்டை பண்ணி ஒரு உருண்டை இஞ்சிச் சாற்றில் தான் கொடிவேலிக் கசாயந்தான் பிரண்டைச் சாறுதான் பசுவின் நெய்யிலே தான் இதுகளிலே உதவினத்திலே தினம் ஒரு உருண்டையாய் ஒரு மாதம் கொள்ளவும். அஉட்ட குன்மந் தீரும்.

ரசம், கெந்தகம், காந்தம், அப்பிரக செந்தூரம், தாம்பிர பற்பம் இந்த ஐந்தும் சம பாகங் கூட்டி சாறடைச் சாறு சீந்திச் சாறு கொடிவேலி வேர் கசாயம் ...க்கு கசாயம் திப்பிலிக் கசாயம் இந்த ஐந்தும் ஒரு சாற்றில் மூன்று நாளாக ஐந்து சாற்றிலும் பதினைந்து நாளரைத்து ஒரு கெசபுடமிட்டு எடுத்து மிக்கோட்ட அரப்பொடி

பலம் இதுக்குச் சரி கூட்டி யிஞ்சி சாத்திலும் வாத்தரைத்து உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு அநுபானத்தில் கொடுக்கவும். எட்டு பத்து நாள் கொடுக்கவும். சகல வாதமுந் தீரும். ரசம் நாபி கெந்தகம் மிளகு வெண்காரம், திப்பிலி இது சம பாகங் கூட்டி மத்தை சாறு வாத்தரைத்து இரண்டு குண்டு மணிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிலவேம்பு எருக்கம் வேர்க் கசாயத்தில் ஒரு உருண்டை அநுபானிச்சு திப்பிலி, சுக்கு, மிளகு, இந்துப்பு இவை இள வகைவயாய் மேன் பொடி போட்டுக் கொடுக்கவும். சன்னி வாதந் தீரும்.

தாம்பிர பற்பம்:-

செம்பைத் தகடு போலே தட்டி சாறடை வேர் எருக்கம் வேர்ப்பட்டை நெல்லி முள்ளி புளி அரப்பொடி வேலி வேர், சிறுவழுதலை, புளியம் பட்டை, இலச்சலி வேர் சடாமாஞ்சி ஊமத்தை வேர் இதுகள் காடி வாத்தரைத்துக் கரைத்து இதுகளிலே தான் கள்ளிப் பாலிலே தான் நல்லெண்ணெயிலே தான் மோரிலே தான் இதுகளிலே அந்த செம்புத் தகட்டை பனிரெண்டு சாமம் காய்ச்சித் தோய்த்துப் பின்பு சுத்தியாம். இப்படி சுத்தி பண்ணின தாம்பிரம் பலம்.5, நாபி ரசம் கெந்தகம், அரிதாரம், மனோசிலை இது ஐந்தும் வகைக்கு பலம்.½, பாசாணம் பலம்.½, கோமாங்கி சம்பலம்.½, செம்பு யிருக்க மத்த மருந்தெல்லாம் எலுமிச்சம் பழச் சாத்திலரைத்துச் செம்பிலே பூசி வெயிலிலே உலத்தி ஒரு பெருஞ் சட்டி கொண்டு வந்து பாதிச் சட்டியில் மண்ணிட்டு பரப்பி அதின் பேரிலே தகட்டை வைத்து மேலே யொரு சட்டி கொண்டு மூடிக் கவித்து மூன்று சீலை மண் செய்து அடுப்பிலே வைத்து நாலு சாமம் காடாக்கினியாக யெரியிட்டு குளிற ஆற விட்டு எரிய பூசை பிரமன பூசை பண்ணி எடுத்த பற்பமாம். அதை எடுத்து அம்மியிலே பொடி பண்ணி வைத்துக்கொண்டு இரண்டு குண்டுமணிப் பிரமாணம் நெய்யிலே தான் சர்க்கரையிலேதான் ஆமணக்கு வேர் பெருங் குரும்பை பூனைக்காலி விரை நெருஞ்சி வேர் இதுகளை பெசு கசாயத்திலே தான் கொடுக்கவும் குன்மந் தீரும். சகல ரோகமுந் தீரும்.

ரசம் பலம்.16, கெந்தகம் பலம்.16, அப்பிரக செந்தூரம்.உ, வெண் காரம்.உ, மனோசிலை பலம்.உ, பச்சை பலம்.உ இதுகள் இந்தப்படி கூட்டி கொம் புப் கால் சாறு வார்த்து மூன்று நாளரைத்து செம்பைத் தகடாகத் தட்டி அதின் பேரில் பசி இந்த மருந்துக்குச் சரி செம்பு தகடு தட்டி அதின் மேலே பசி ஒரு சட்டியில் மணல் விட்டு அதின் மேலே உத்தாமணி யிலையை அடுக்கி வைத்து அதின் மேலே கட்டை வைத்து மேலும் உத்தாமணி யிலையாலே மூடிச் சூலை மண் செய்து அடுப்பிலே வைத்து யெரியிட்டு யெரியிடுகிற போது மேல் சட்டியின் மேலே நெல்லை வைக்க அந்த நெல்லுப் பொரியுமளவும் யெரியிட்டுக் குளிர ஆற விட்டு எடுத்துக் கொம்பு ஈரகல் சாறு வாத்தரைத்து மூன்று குன்றியிடை உருண்டை பண்ணி நிழலுலத்தி ஒரு உ ருண்டை இஞ்சி சாத்தில் கொடுக்கவும். சகல சுரமும் தீரும்.

திப்பிலி பலம்.3, சாதிலிங்கம் பலம்.1, நாபி பலம்.க, மிளகு பலம்.1 எலுமிச்சம் பழச் சாறு வாத்தரைத்துக் கடலைப் பிரமாணம் உருண்டை பண்ணி ஒரு உருண்டை யிஞ்சிச் சாத்தில் கொடுக்கவும் சகல சுரமுந் தீரும்.

ரசம், வெங்காரம், பச்சை நாபி, கெந்தகம் இது நாலுஞ் சரி கூட்டி இதுக்கு நாலுக்கும் சரி எருக்கம் வேர் பட்டை, மிளகு இது இரண்டுமாய் அதுக்குச் சரி கூட்டி பிரண்டைச் சாறு வாத்தரைத்து மூன்று சாமம் அரைத்து குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி தேனிலே நொச்சி கசாயம் இதுகளிலே அநுபானிச்சுக் கொடுக்கவும். சகல சன்னியுந் தீரும்.

வெங்காரம், ரசம், கெந்தகம், கடுக்காய், நெல்லிமுள்ளி, தானிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, அரிதாரம், தாம்பிர பற்பம், நாபி நேர்வாளம் இது சரி

கூட்டிக் கரிசிலாங் கண்ணிச் சாறு வாத்தரைத்து குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி இஞ்சி சாத்திலும் மிளகு பொடியும் கூட்டிக் கொடுக்கவும். அன்மம், ஆமசூலை தீரும்,

ரசம்.4, கெந்தகம் பலம்.1, இந்துப்பு க, யவட்சாரம்.க, நாபி.க, வெண்காரம்.க, தானிக்காய், நெல்லிமுள்ளி, சுக்கு.க, மிளகு.க, திப்பிலி.க, ஒட்டறை க, கொடிவேலி.க, நேர்வாளம்.9, பெருங்காயம்.க, இது இந்தப்படி கூட்டி இஞ்சி சாறு வாத்தரைத்து ஒரு பணவிடை பிரமாணம் உருண்டை பண்ணி யிஞ்சிச் சாத்திலிடவும். சர்வ சூலையுந் தீரும். அசமதாகம், இந்துப்பு, கடுக்காய், சுக்கு, திப்பிலி இது சூரணம் பண்ணி பசுவின் மோரிலே தான் இள வென்னீரிலே தான் கொடுக்கவும். அக்கினி தீபனமுண்டாம்.

மிளகு, வெங்காரம், ரசம், கெந்தகம், சுக்கு, நேர்வாளம் இது சரி கூட்டி தண்ணீர் வாத்தரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி வெல்லத்தில் கொடுக்க சுரந் தீரு மாட்டுக் கரு விரோசிக்கும்.

புதிகா தயிலம் :-

ஆயில்பட்டை குண்ணி, நெல்லிடை களறிலே நிற்சிற உகா வேர்ப்பட்டை நாநாழி நெல்லிடை குழலா தண்டை வேர்ப் பட்டை நாநாழி நெல்லிடை சாறண்டை வேர் உத்தாமணி வேர் கொடிவேலி வேர் நீர்ப்புங்கம் வேர்ப் பட்டை, சித்தாமுட்டி வேர், பிராய் வே பட்டை எட்டிமாம் பட்டை இது வகைக்கு இரு நாழி நெல்லிடை இது இந்தப்படி கூட்டி ப பத்து மரக்கால் தண்ணீர் விட்டுக் குழி யிரு நாழியர்கக் கர்ய்ச்சி யிறுத்துக் கொண்டு ஒரு பாண்டத்தில் விட்டு அதிலே அஉ்ட மூத்திரமும் வகைக்கு உரியாக இரு நாழி உரியப் பாலும் விட்டு இதுக்குக் கலக்கம் மருந்து சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு ஓம பெருங்காயம் ஐந்து வெள்ளுள்ளி, வசம்பு, சித்தரத்தை சதகுப்பை, கடுகு இவை வகைக் ஒரு பலம் கூட்டி வெள்ளாட்டுப் பால் குண்ணியில் அரைத்து கரைக்க ஐந்தெண்ணெயும் வகைக்கு ஒரு படி விழுக்காடு விட்டு எல்லாம் ஒரு மிக்க கலந்து ஒரு நாள் வெய்யிலிலே வைத்து மற்ற நாள் அடுப்பிலே வைத்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்து மேழுக்கு பிடிப்பிக் கவும். சருவ வாதமும் எட்டு நாளையிலே வாங்கும்.

பாஷாணத்துக்கு மாத்து :-

பூசணிக்காய் சாத்திலே பாலிடையை அரைத்து எலுமிச்சம் பழச் சாத்திலே குடிக்கத் தீரும்.

நேர்வாளத்துக்கு மாத்து: பருத்திக்காய், சிறுகீரைவேர், பொன்னுங்கண்ணி, கரிசலாங் கண்ணி இது மோரிலே தயிரிலே அரைத்துக் கொடுக்கத் தீரும்.

ரசத்துக்கு மாத்து :-

சிவந்த நாயுருவி சுட்ட சாம்பல் ஆமணக்கெண்ணெயில் குழைத்து உள்ளுக்கும் கொடுத்து மேலுக்கும் பூசத் தீரும். எலுமிச்சம் பழமும் புளியுங் கூட்டித் தின்னத் தீரும். வேர், வெள்ளை சாறடை வேர், வெள்ளைக் கிலுகிலுப்பை வேர், குதிரை வாலி வேர், கையாந்தகரை வேர், புங்கு தோல், ஓரிதழ்த் தாமரை வேர் வகைக்கு கழஞ்சு பசுவின் பாலிலரைத்து இதுக்கு கூட்டு மருந்து தேத்தாங் கொட்டை சங்கு கடல் நுரை வர குமத்தி விழலரிசி மதுரம், வெள்ளி லோத்திரம், வேப்ப முத்து மகிழவிரை, மருக்காரைப் பழம், வளையில் கோரோசனை, திப்பிலி அஞ்சனக் கல்லு ஐபஞ்சனம், செந்தாழங்காய், ஏலக்காய், அபிதாபம், மஞ்சிஷ்டை, அப்பப்பாடி இது வெல்லம் பலம்.உ, பனை மட்டைச் சாறு புதினாயிலைச் சாறு, மசவினநீர் யிப்புச் சாறு ஐந்து வகை சாத்தில் வகைக்கு நாள் மூன்றுக்கு அரைத்து நிழலுலத்திக் குழந்த தண்ணீரிலிடவும். இதுக்கு தீரும் வியாதி பயித்திய காசம், நீல காசம், சேத்தும காசம், கண் புகைச்சல் படலம், திமிரம் பழம், ரோகம், எச்சி சதை வளர்ச்சி, கடையரல், செவ்வேர் யிரணம் சுக்கிரன், முளைப்பு புழுக் குடைச்சல்

ஆணிப்பூ, நீர்முட்டு, மரி காசம், கண்ணோக்காடு, மண்டலத்திலுள்ள தோஷம், கிருமி சோதி அடிபட்ட புண் இவை முதலான வியாதி யெல்லாந் தீரும்.

கற்கருஷி குழம்பு:-

சர்க்கரை, கற்கண்டு, பொன்னாங்கண்ணி வேர், ஒரிதழ் தாமரை வேர், சிறுகீரை வேர், தண்டு கூட மலேசிலை, வில்வ யிலை, வேப்பமுத்து, புங்கவிரை, கருசு ஆத்தம், கற்பூரம், மதூரம், கோஷ்டம், முத்து பவழம், செம்புபொடி வெங்கலப் பொடி கொன்றைப் பழம் இவை யெல்லாம் சரி கூட்டி நிம்புச் சாறு வார்த்தரைத்து கற்பகஞ் செய்து தேன் விட்டு இழைத்து கண்ணிலிட எரிப்பு படலந் தீரும்.

கற்பூரம், மதூரம், சர்க்கரை, கற்கண்டு சமன் கூட்டி தேனிலரைத்து பாணியிலிட்டுக் கண்ணிலிடப் புகைச்சல் வெள்ளைப் படலம் கண்ணெரிப்பு நீர்ப் பாச்சல் தீரும்.

சீத சுரத்துக்கு:-

சித்தாமுட்டி பேராமுட்டி தூதுவேளை, கண்டங்கத்திரி, பாப்பாரமுள்ளி, துளசி, முசுகாவளை, சங்கம் வேர், நொச்சி வேர், வுணவேர், உகாய் வேர், சங்கங் குப்பி, சிறுகாஞ்சொறி வேர், முசுமுசுக்கை வேர், நன்னாரி வேர், நரிப் பயத்தம் வேர், விஷ்ணு காந்தி வகைக்கு பலம்.க, கூட்டிக் கஷாயம் வைத்துக் கொடுக்கவும்.

*பின் வரும் ஏடுகள் சுத்தி வகை விடப்பட்டன.

குஷ்டம் பதினெட்டு பத்து விதம் கிருமி தோஷம் உய பித்தம் இதுக்கு:-

சடைச்சி வேர், அப்பி வேர், சாறணை வேர், வெள்ளை சாறணை வேர், சதுரக் கள்ளிப் பட்டை, செங்கொட்டை, சித்திரமூலம், லிங்கப்பட்டை, உகாய் வேர் எருக்கம் வேர், அழுத்தை வேர், வேப்பம் பிசின், வெள்ளை குண்டுமணி வேர் இவ்வகைக்கு பலம் பத்து இதுக்கு சமன் சடைச்சி வேர் கூட்டி இடித்து ஒரு பாண்டத்தில் போட்டு எட்டு மரக்கால் தண்ணீர் விட்டு பதக்கு ஆக காய்ச்சி ஒரு பாண்டத்திலிறுத்துக் கொண்டு இதில் கோமூத்திரம்.3/4 எருமை மூத்திரம்.3/4 கழுதை மூத்திரம்.3/4 ஆக அஷ்ட மூத்திரமும் விட்டு பிரமிச் சாறு சிந்தித் தண்டுச் சாறு கோண்டு யிலைச் சாறு கைய்யாந்தகரைச் சாறு, எருக்கிலைச் சாறு ஆயிலியிலைச் சாறு., புங்கயிலைச் சாறு, மஞ்சள் சாறு, பேய்ப்புடல்ச் சாறு, பேய்ப்பீக்கன் சாறு, கார்போக யிலைச் சாறு அகத்தி இலைச் சாறு சாறு இதுக்கு நாழி கஷாயத்தில் விட்டு இதில் வேப்பெண்ணை நாழி பேய்ப் பீர்க்கு எண்ணை நாழி இந்தப் படி விட்டு கலக்கும் மருந்து மரமஞ்சள், தேவதாருமுளி, மஞ்சள், வாய் விளங்கம், கார்போகரிசி, புங்கங் கொட்டை, வாலுளுவை அரிசி, புன்னைக் கொட்டைப் பருப்பு, திரிகடுகு, திரிபலை, மலேசிலை, அரிதாரம், கெந்தகம், வெள்ளைப் பாஷாணம், கடுகுரோகணி, பீதரோகணி, ஒட்டறை, சாதிலிங்கம் இவை வகைக்கு பலம்.3/4 கூட்டி முன் சொன்ன சாறு விட்டு அரைத்து எண்ணையில் கலந்து சதுரக் கள்ளிப் பால் நாழி விட்டு பதத்தில் வடித்து அற்பங்கனம் பண்ணவும். குஷ்டம்.18 விதம், பிளவை, கிருமி தோஷம் 20 விதம் பித்த முண்டான கடி விகாரம் இவை யெல்லாந் தீரும்.

சாதிலிங்கம், சாதிக்காய், இந்துப்பு, கிராம்பு, சுக்கு, அதிவிடையம், ஊமத்தை விரை, திப்பிலி இவை வெல்லாம் சமஸ்தமாகக் கூட்டி அத்திப் பட்டைச் சாறு வாழைப்பூச் சாறும் இரண்டும் வார்த்தரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலத்தி ஆத்தி ரசாத்தி சாத்திலேயாவது வாழைப்பூச் சாத்திலேயாவது கொள்ளவும். சுரமில்லாத பேருக்கு தயிரில் கொடுக்கவும். கிருமி நீங்கும்.

மாந்த கலத்துக்கு:-

மகிழம் விரை, திப்பிலி, மிளகு, இந்துப்பு, ஆட்டுமூத்திரம் வார்த்து மிளகு

பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலத்திக் கண்ணிலிட தேள் பாம்பு, சன்னி இவைகள் தீரும்.

எண்ணெ படி.க., உழுயிலை, முத்திரிலை, கையாந்தகரை யிலை, திருத்துளாய் கஞ்சாங்கோரை, சேப்பு நெருஞ்சி, மஞ்சத்தக்காளி வகைக்கு படி.1½, வசம்பு.உ, வெங்காயம் ஊ க்கு.1/8, வெந்தியம் படி.1/8, பூண்டு பலம்.க அரைத்து கரை த்து பதத்தில் வடித்து வல்லாரையிலைச் சசு போட்டு ஊற வைத்து எடுத்து வைத்துக் கொள்ளவும். ஒரு முறைக்கு கிழாபூண்டு, மிளகு, சுக்கு, நெல்லிமுள்ளி, வட்டத் தாள்------ முகரவும்.. நாலா முறைக்கு பூண்டு, மிளகு, சுக்கு, வசம்பு, நல்ல நாள், நல்ல வேளை பார்த்து கொடுக்கவும்.

<u>பிற கழலைக்கு:-</u> 13.11.63.

இந்துப்பு, நர்சிரகம், வெள்ளாட்டு நீரிலரைத்துப் பூசத் தீரும். உடல்

<u>உடல் பருக்க மருந்து:-</u> நெய் சிட்டி வேர் ஒரு பிடி.க, விழும்பை வேர் ஒரு பிடி, ஈர்உள்ளி, ஆழாக்கு வசம்பு, ஆழாக்கு கூட்டி ஒரு நாழி நெய்யில் வெந்து வடித்து இருபது நாள் நக்க உடல் பருக்கும். நல்ல பீக்கம் விதை.17 அரைத்து இள வென்னீரில் இளைத்த பேருக்கு கொடுக்கவும்.

<u>மெலிந்த பேருக்கு:-</u>

28-விதையும் இள வென்னீரில் கொடுக்கவும்.

<u>வயறு பேதிக்கு:-</u>

கடுக்காய், செங்கொடிவேலி வேர், சுக்கு, நிலப்பனைக் கிழங்கு, சீந்தி சர்க்கரை ஒரு பங்கு மருந்து சேர ஒரு பங்கு பொடி பண்ணிக் கூடக் கலந்து தாணிக் காயளவு தின்னவும். வீரின் முண்டு: உடல் பருக்கும்.

கடுக்காய்.7, வேப்பீற்கு ஒரு பிடி இள வென்னீரிலரைத்துக் கொடுக்கவும். வயறு பேதியாகும்.

சீந்திக்கிழங்கு ஆழ கழஞ்சு, கடுக்காய் இரண்டு கழஞ்சு கூட அரைத்துக் காய்ச்சிக் கொடுக்க வயறு பேதியாகும்.

நேர்வாளம்.50, கடுக்காய்.வயு, சிவதை வேர், பாக்களவு, வெள்ளைக காக்கணம் வேர் ஒரு பாக்களவு விளைந்தளவு கூட்டி முலைப் பால் வாத்தரைத்து பருத்திக் கொட்டை அளவு உருண்டை பண்ணிப் புளிச் சாத்திலாவது பழங் கருப்பட்டி முலைப் பாலிலாகுதல் இடவும். வயறு தேியாகும். ஒரு உருண்டை இடவும். மாத்துக்கு குளிர்ந்த தண்ணீரு மோருஞ் சோறு உண்ணவும்..

<u>நீரழிவுக்கு:-</u>

திருவைக் காய் நாழி தவைத்து நாழி பசுவின் பாலிலே பிழிஞ்சு கொடுக்கவும்.

விடி திருவை முத்தின பட்டை வெட்டி இடித்து நிழலிலே உனத்திச் சூரணம் பண்ணிக் கொள்ளவும். வெருகடிப் பிரமாணம். கம்பரி மா வெருகடிப் பிரமாணம் இரண்டு நேரமுந் தின்னத் தீரும். இருபது நாள் தின்னவும் நீரழிவு தீரும். கம்பு பொரிச்சுக் கொள்ளவும்.

<u>நீர்ப்பாட்டுக்கு:-</u>

எருமைப் பால் முன்னுழி நாழியாகக் காய்ச்சி சிவந்த நாவல் பட்டை சீவி எலுமிச்சங் காயளவு அரைத்து குழப்பிக் கொடுக்கவும். சித்த முட்டி வேர்ப் பட்டை நீர் வார்த்து பாக்களவு அரைத்து பசுவின் நெய்யில் குழப்பி நக்கவும். விக்கல் வாந்தி போம். வெள்ளைக் காக்கணம் வேர் சிற எலுமிச்சங் காயளவு அரைத்து பசுவின் பாலில் குடிக்க வயறு பேதியாம். நாழித் தயிரும் உப்புங் கலக்கி உள்ளுக்கு குடிக்கவும். வயறு பேதியாம். குளிர்ந்த தண்ணீரிலே குளிச்சு மோருஞ் சோறுண்ணவும்.

திருவைக் காய் நாழி அவைத்து நாழி பசுவின் பாலிலே பிழிந்து கொடுக்கவும். விடி திருவை முத்தி பட்டை வெட்டி இடித்து நிழலிலே உனத்திச் சூரணம் பண்ணிக் கொள்ளவும்.

வெருகடிப் பிரமாணம் கம்பரி மா வெரு கடிப் பிரமாணம் இரண்டு நேரமுந் தின்னத் தீரும். இருபது நாள் தின்னவும். நீர்ழிவு தீரும்.

நேர்வாளம். 20, திப்பிலி, சுக்கு, மிளகு, பச்சரிசி ஒரொன்று அரைக் கழஞ்சு கடுக்காய். ல் குழப்பிச் சுவற விட்டு சுவறின பின்பு ஈ நவிளங்காயளவு உருட்டி உளர்த்தி ஒரு உருண்டை குளிர்ந்த தண்ணீரிலிடவும் வயறு பேதியாம். மாற்றவென்னீர் குடிக்கவும் நிற்கும்.

ஆண்டலின் பரல் ஆ தவ ஊ ஆடாதோடை சங்கிலேடு சீண்ட திப்பிலி கண்டங்காலி சிறவந்த ஊல வீழி சுக்குடன் வேந்த யிரு நாழி நீர் வைத்து எட்டொன் றுக்கி யீத்தருந்த தோண்டுடனே விட்டருந்த தீரும். சிலேத்தம் சொரமுந்தானே.

விஷ்ணு கிராந்தி வேர் முட்டி விரவிய சுக்குப் பேய்ப்புடல்
திட்டமான நாரத்தை சிவந்த பட்டை யிலை கூட்டி
வட்டது கால் காச்சி வடித்துக் கரைத்துக்குடிப்பிராய்
மட்டுப் படாத சுரம் தந்தம் வாதம் கத்தங் கண்டீர.

முத்தக்காசு பற்படாகம் முதகா வலி விலாமிச்சம்
அற்ற சுக்கு சந்தனமும் அரைத்துக் கரைத்துக் கொடுப்பீராய்
மத்திக் கடைந்து கோபித்து கோப தாப மிகவுண்டாய்
பித்தத்துடனே வந்த சுரம் பின்னிட்டேகும் பெம்மானே.

ஆடாதோடை பேய்ப்புடலும் அட்டுஞ் சுந்தி பற்பாடகம்
நீடா கண்டங்கத்திரி வேர் நிலவேம்புடனே நிரை சுக்கு
வாடாக் குடிநீர் தேன் கலந்து வடித்துக் கரைத்துக் குடிப்பீராய்.
கோடா கோடி சுரம் விட்டு குளிருந் தாப சுரம் போமே.

ஆனைக் கன்றிலொரு பிள்ளையும் பிள்ளை பிறந்தவுடனே யிது
பின்னை மண்ணை மிடறு கண்ணைக் கட்டி மெள்ளப்
பூனைக் குரலாய் மிடறும் விடாமல் வலமு மாயறதும் துள்ள கைகால் அசைப்பாது
சும்மா கிடக்கும் மெய்யாயின் கள்ளமான செங்கிரந்தியிது தானே என கண்டு கொள்ளே.

<u>இருக்கு மருந்து</u> :-

கோரோசனை தான் முலைப் பாலில் கொடுத்த பின்
கற்பூரவல்லி நீரோடோயு முரைத்த சந்தி நிகரில் மன்று மனிச் சாரம்
பூரவல் வைத்த மருக்கிலையின் சாறு மருந்து நன்று வேலி விழியா் தெம்முள்ளி நீரில் போட்டுக் குளிப்பாட்டே.

<u>இருமல், எரைப்பு, இளைப்பு, சுவாசகாசம், ஈளை முக்கடைப்பு, தொண்டை கம்மல் இழுக்குச் சூரணம்</u> :-

தாளிச பத்திரி, மிளகு, லவங்கப்பட்டை, லவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, ஏலம், சுக்கு, கிரும்பு, திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், அரத்தை, கண்டந் திப்பிலி, கொத்தமல்லி, புலாங்கிளங்கு, கடுக்காய், தானிக்காய், நெல்லிப் பருப்பு, சித்திரமூலம், வெட்டி வேர், விலாமிச்சம் வேர், தக்கோலம், கோரைக் கிழங்கு, சடாமஞ்சி, அகில் கட்டை, சந்தனக் கட்டை, அக்கிரகாரம், குரோசாணி, ஓமம், கோஷ்டம், சீரகம், ஓமம், சமுத்திராடப பழம், வாய் விளங்கம், கசகசா, சாதிக்காய், சாதிபத்திரி, அபினி, அதிவிடயம், காசுக்கட்டி, தெசாவரம் சிறு தேக்கு கற்கடகசிங்கி, சர்க்கரை ஆக வகை. 43, இவை மட்டும் சூரணம் பண்ணி கொடுக்கத் தீரும்.

(வேறு)

அரிசனந் தோயம் ஏலமும் காடியிலரைத்துக் கொடுக்க மத்திச்ச பிள்ளை விழும். வலரிசியும், அரசங் கொழுந்தும் தண்ணீரில் கலக்கிச் கொடுக்கக் கைம

பெண்ணுக்கு முதலாய்ப் பிள்ளை விழும்.

கழுதை லத்தி அது முகராமல் எடுத்து வந்து சாறு பிழிந்து காடி சரி கூட்டி நல்லெண்ணை கலந்து குழப்பி மார்பிலும் மார்பிலிருந்து தொப்புள் மட்டும் தடவ ஒரு நாழிகையில் பிள்ளை விழும். காடியில் சிறு தேக்கு அரைத்துத் தொப்புளில் தடவப் பிள்ளை விழும். குப்பை மேனி மேனி வேர் அமாவாசை ஞாயற்றுக் கிழமை நாள் பிடுங்கிக் குளிச மாடி முன்னெத்தியில் தலையில் கட்டப் பிள்ளை விழும். இந்த மருந்தெல்லாம் பிள்ளை விழுந்து கண்டவுடனே அது போடவும். தடைச்சுப் போடவும். வயத்தில் பிள்ளை மத்திச்சால் மாரில் நெஞ்சில் வெண்ணை ஒரு பக்கத்தில். வெண்ணை வைக்க உருகும். உருகிலல் பிள்ளை வயத்திலே மத்திச்சுப் போச்சுதென்று அறியவும்.

அசக்கு மருந்து:-

அதிமதுரம் விராகனிடை.உ நன்று யிடித்து ஆள் பண்ணித் தேனில் குழைத்துக் கொடுக்கப் பிள்ளை முன்னே முக்கால் நாழிகையில் விழும். விழுந்த பிறகு முந்திரிச் சாயம் விட்டுக் கொடுக்கவும். மூன்று நாள் பிறகு சோறு கொடுக்கவும்.

நேத்திர வாய்வுக்குத் தயிலம்:-

ஆரைஇலை, ஆதண்டை யிலை, நொச்சி யிலை, பழம்பாசி இலை, முசுமுசுக்கை யிலை, நீர்ப்பலாயிலை, பொன்னுங்காணி இலை, கையாந்தகரையிலை, எலுமிச்சம் பழச் சாறு இளநீர் பசுவின் பால், நெல்லிக்காய்ச் சாறு, நல்லெண்ணை, சுக்கு, திப்பிலி திப்பிலி மூலம், செவ்வியம், விலாமிச்சம் வேர், சிறு தேக்கு, அதிமதுரம், அரத்தை, கொத்தமல்லி, சதகுப்பை; சாதிக்காய்; மரமஞ்சள், மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், கோஷ்டம்; தாளிசபத்திரி, பச்சிலை; தொட்டிச் சாறு வகைக்கு $1\frac{1}{2}$ பலம் (மேல் செய் முறையில்லை)

கிறந்திக்கு:-

கழக். கொட்டியிலை வெருப்படக்கி செருப்படி இந்த மூன்றுங் கொண்டு வந்து உரலிலே அவைத்துச். சாறு பிழிந்து மூன்று நாளாறு பொழுது கால்படி சாறு கொடுக்கிறது. இதற்கு பத்தியம் தடும் பத்தியம்.

நல்லெண்ணை, வடியிலெண்ணை படி $\frac{1}{2}$, வெள்ளைப் பண்டு பலம். 1/8, மிளகு பலம். 1/8 ரெண்டும் வெவ்வேற. அரைத்து அவுரி வேர் முத்தின வேர் பிடுங்கி வந்து வேர்ப் பட்டை எடுத்து முன் சாந்து மட்டும் அரைத்து இந்த மூன்று சாந்தும் அரைத்து அரைப்படி எண்ணையில் கலந்து உள்ளுக் கொடுக்கவும். ஒரு போதைக்கு கொடுக்கிறது. பாக்கு வெத்திலை, மருந்து சாப்பிட்டது முதல் கொண்டு சாயங்கால மட்டும் போட்டுக் கொள்ளுகிறது. தாம்பூலச் சாறு உள்ளுக்கு இறக்கிறது. மருந்து சாப்பிட்ட அன்றைக்கு ஒன்றும் சாப்பிடப் போகாது. மறுநாள் உப்பில்லாமல் சாதம் பொங்கி எருமைத் தயிரும் சாதமும் உப்பில்லாமல் ஆறு நாளைக்குச் சாப்பிடுகிறது. வெங்காயம் கடித்துக் கொள்ளலாம். உள்ளே இருக்கிறதெல்லாம் மேலே விசிறும். ஏழு நாள் ஆரோக்கிய ஸ்நானம் பண்ணுகிறது. எட்டு நாள் எண்ணை யிட்டு ஸ்நானம் பண்ணுகிறது நோவு தீரும்.

காதில் சீழ் விழுந்தால் மருந்து:-

எருமைச் சாணியிலிருக்கிற வண்டைக் கொண்டு வந்து விளக்கெண்ணையிலெரித்துக் காதில் மூன்று போது குத்திப் பஞ்சாலடைத்து மணத்தக்காளிச் சாறு மூன்று பொழுது காதில் விட்டு பஞ்சாலடைக்கவும். கை கண்டது.

வெட்டை இருமலுக்கு:-

தாழை விழுது கொண்டு வந்து பழங் கூரை வெக்கல் எரிய விட்டு வதக்கிச் சாறு கால் படியும், சீரகம் பலம். $\frac{1}{2}$, சர்க்கரை பலம்.உ, கிராம்பு கூடப் போட்டு இந்தப்படி மூன்று நாள் சாப்பிடவும் தீரும். கை கண்டது.

விக்கலுக்கு:-நீடு மாதளை நெற் பொரி, சர்க்கரை, கேடு திப்பிலி தேனில் குழைத்திட

பீடு செய்த பெரு விக்கல் சத்தியும் ஓடி ஒடி ஒளிந்திடு முண்மையே.

<u>கை கால் ஓய்ந்தால் மருந்து:-</u>

முசுட்டை வேர் வடக்கே போற வேர் வெட்டி வந்தரைத்து பசுவின் பாலில் அரைத்து காய்ச்சி மூன்று நாள் கொடுக்கத் தீரும். இந்த இலை பழங் காடியில் அரைத்துக் கொடுக்கப் பெரும்பாடு தீரும்.

<u>வெள்ளைக்கு:-</u>

வேப்பங் கொழுந்தும் எலுமிச்சம் பழமும் அரைத்து மூன்று நாள் கொடுக்கத் தீரும் வெள்ளை போம்.

<u>சகல குஷ்டத்துக்கு</u>: பிரான் பட்டை முத்தின மரத்துப் பட்டையைக் கொண்டு வந்து உலர்த்தி இடித்து தூள். பண்ணி அந்த தூளுடனே அழிஞ்சி வேரும் கோரைக்கிழங்கும் கொழுந்தும் மஞ்சள் நெல்லிக்காயும் இடித்துப் பொடி பண்ணிக் கலந்து புதுக் கலையத்தில் வேடு கட்டி வைத்துக் கொண்டு தினமொரு கரண்டி சாப்பிடவும். ஒரு மண்டலம் சாப்பிட குஷ்டந் தீரும். சிவன் வேம்பு தேனில் ஒரு மண்டலம் சாப்பிட குஷ்டந் தீரும்.

<u>வண்டு கடிக்கு மருந்து: சிவன் வேம்பு கற்பம்:-</u>

இருக்கு சத்தமியும் மங்கள வாரமும் கிழங்கு முகமாய் நின்று தூப தீபங் கொடுத்து நிவேத்தியம் பண்ணி மந்திரம் ஓம் நமா வென்று (சிவன் வேம்பு) சமூலம் பிடுங்கி வந்து நிழலுலர்த்தி புடம் பண்ணி வஸ்திர காயம் பண்ணி அந்தச் சூரணம் நித்தமும் விரல் கொண்ட மாத்திரம் ஒரு மண்டலந் தின்னச் சிவனார் வேம்பில் குணம் தெரியும். இந்தச் சூரணமும் பிரான் பட்டைச் சூரணமும் நேர்ந்த சூரணம் சாப்பிட்டாலும் நரை திரை மாறி இளமையாம்.

<u>வண்டு கடிக்கு மருந்து:--</u>

கழக்கொட்டி வேர் வடக்கே போற வேர் அமாவாசியில் பிடுங்கி வந்து நறுக்கி பாக்குடனே நாலு ஆறு சாப்பிட ஒரு மண்டலம் சாப்பிடவும் போம். கை கண்டது. சிவனார் வேம்பு பொடி பண்ணி வடி கொண்டு அந்தச் சூரணம் மூவிரல் கொண்ட மாத்திரம் ஒரு மண்டலம் தின்ன சிவனார் வேம்பின் குணந் தெரிய வரும். இந்தச் சூரணமும் பிரான் பட்டைச் சூரணமும் பெருங் குறிஞ்சா வேரும் நல்ல வெல்லமுங் கூட்டி அரைத்து நல்லெண்ணையில் குழப்பி மூன்று நாள் சாப்பிடவும் வாதந் தீரும்.

<u>ரெத்த பிறமியத்துக்கு மருந்து:-</u>

கீழா நெல்லி சமூலம் அரைத்து சீரகம் சுட்டிடை கூட அரைத்து புளியிலை யிடித்து சாறு பிழிந்து முன் அரைத்த மருந்தும் இந்தச் சாறும் தயிராகுதல் மோராகுதல் கலந்து கொடுக்கவும். ரெத்த பிரமியம் சீப் பிரமியம் போம். கை கண்டது.

<u>உதர விக்கத்துக்கு கசாயம்:--</u>

பாவட்டை தழை, வேளைத் தழை இரண்டையும் கசாயம் வைத்து கொடுக்க வீக்கம் சுரம் போம்.

<u>நீர்க் கட்டுக்கு மருந்து:-</u>

சுண்ணாம்பு தெளிஞ்ச நீரில் $\frac{1}{4}$ படி சாப்பிடவும் தீரும்.

கண்ணில் வெள்ளை விழுந்து இருந்தால்: இந்துப்பு விராகனிடை. க, அரிசி திப்பிலி விராகனிடை. $\frac{1}{2}$, பீதரோகணி விராகனிடை. க, இந்த மூன்றும் சேர்த்து நந்தியாவட்டைபூவு சாத்தை விட்டு அரைத்து மாத்திரை பண்ணி வைத்துக் கொள்ளவும். நந்தியா வட்டை பச்சாறு விட்டு மாத்திரை இழைச்சுக் கண்ணில் போட வெள்ளை மாறும். கண் நன்றாகத் தெரியும்.

தேதி: 13.11.63.

ஓலைச் சுவடியின் பெயர்: வைத்திய அட்டவணை கட்டு-5.

உரிமையாளரின் பெயர்: எஸ்.ஆர்.பஞ்சாட்சரம்.

இடம்: சிவதாபுரம், சேலம்.

***.

மேக_சஞ்சீவி_தயிலம்:-

கீழாநெல்லிச் சார் படி.1/8, கற்பூர வல்லிச் சார படி.1/8, மிளகு, தக்காளிச் சாறு படி.1/8, நல்லெண்ணை படி.க, நல்ல சீரகம் பலம்.½, கஸ்தூரி மஞ்சள் பலம்.½, பூலாங் கிழங்கு புலம்.½, வெட்டி வேர் பலம்.½. விலாமிச்ச வேர் பலம்.½. பச்சிலை பலம்:½ அரைத்து போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு சகல வியாதிக்கும் ஸ்நானம் செய்யவும்.

சகல_சன்னிக்கு_சகல_திமிர்_வாதத்துக்கு_நெய்:-

பசுவின் நெய் படி.க, அருணை வால் நருக்கிப் போட்டுக் காய்ச்சிக் காலில் தடவ வெண்டியது. பத்தியம் உப்பில்லாமல் 6 நாளைக்கு இருக்க வேண்டியது.

நீரடைப்புக்கு_பற்பம்:-

வெடியுப்பு பொரிகாரம், அண்டத் தோல் சங்கு கற்பூர சலாசத்து சீனக்காரம், இந்த ஆறு சரக்கும் சரியிடை வைத்து பழச் சாறு விட்டரைத்து வில்லை தட்டிக் காய வைத்து வாரி புடம் போடவும் பற்பமாகும். அநுபான மறிந்து கொடுத்தால் நீரடைப்புக் கல்லடைப்பு சதை யடைபுமது மேகம் இரத்தம் சதை யடைப்புக் தீரும்.

மேகத்_தென்ணை:-

என்ணை கேள் மிளகறணை. வெள்ளை சாறணை வேர் யிதமான முந்திரி வேர் முருங்கை வேம்பு தன்னவே குமரியொடுள்ளி சீந்தி. சலந்திரட்டி கரிசாலை பொன்னாங்காணி விள்ளவே அமுக்கிறாச் சதகுப்பை வெள்ளண்டு நீர்ப் புலா. விழுதியோடு சிற்றாமாம் நிலப்பனை வேர் அழிஞ்சிப் பட்டை சிறுவிளா வெள்ளறுகு வல்லாரை யோடும் ஆவாரை முடக் கொத்தான் அகத்தியோடு அப்பனே வகைக்குப் பலந்தான் ரெண்டு அரையர்ம். இவாரை சிலங் கொண்டு அழகாக நிசத்திடவாய் பலமோர் பத்து சேரவே நன்றாக யிடித்து நன்றாய் சேர்த்து ஒரு தாளியிலே செலந்தான் கேளு வேரே யாஞ் சீரகம் பலந்தானெட்டு வெந்தியமோ பலந்தாறு மெட்டுப் போட்டே. போக்கோட்டே அவை நன்றா யரைத்துக் கொண்டு போட்டு நீ பதினாறு படி சலந்தான் வாரு. ஆட்டியே அடுப்பேத்தி ஆறப் போடு அழகான கசாயந் தான் குறைவு கண்டு சித்தண்ட வெண்ணையிரண்டு வாரு காட்டியே யிருள்ளிச் சாறு படி இரண்டு வாரு காராவின் பால் படி இரண்டு வாரு கல்லு நாரெட்டே எட்டான கல்நார் வஸ்திர காயம் யிதமாக செம்பதிலே போடு போடு மட்டான புளிச் சக்கரை தானெட்டு வாகாகப் போட்டதிலே காச்சு காச்சு அட்டமாம் பாலோடு க்சர்யம் வத்த யென்ணை யுதை மெழுகு பதமாகக் கிண்டி. சட்டி. யிட்டு மூடித். தானிய புடமே வைய்யே.

.வைத்தியமே பட்ச மொரன்று கறித்து வாங்கி மைந்தனே நாளொன்றுக்.கோர் களஞ்சி உத்தமனே தினந் தோறும் கொண்டாயானால் ஒடுகிற நோயை நீ யுத்துக் கேளு போகாத ரோகங்களிரண்டு பத்து மேலான கிரந்தி யரையாப்புக் குட்டம். கத்ததொரு அஸ்தி சுரம் அஸ்தி வெட்டை கரப்பனொடு சிரங்கு சொறி மேகம் போமே. மேகமொடு நால் வகையாம் பிறமியங்கள் வெண் குஷ்டம் படர் தாமரை மேக ஊறல் மேகம் தாம்பித்த வாய்வு உஷ்ண வாய்வு மெய் யெரிவு கை காலெரிவு காந்தல் போகு மேகமா வாய்வோடு அண்ட வாதம் மெல்லியர்கள் கெற்ப நோய் யெல்ந் தீரும். மேகமா மலடிக்கு பிள்ளையுண்டாம். விருதான் வயித்தியரே விரைந்து பாரே. பாரே நீ யென்னுக்கு பத்திய மோயில்லை பரிவான பெரியோர்க்கும் சிறியோர்க்கு மாகும் பாரே நீ புவி மீதில் மரனிடர்க்கு. பாங்குடனே வியாதி கண்டால் முறியைப் பாரு பாரே நீ. யிவர்களுக்கு மென்ணை யீவாய். பாலகனே பொல்லாரை நீ வைய்யாதே யாரே நீ புலத்தியனே அய்யா கேளு பண்டிதங் கள் தறிந்து பகர்ந்திடாயே.

<u>சிவதை லேகியம்:-</u>

பாலில் அவித்து சுத்தி செய்து இடித்து வடிகட்டி சிவதை சூரணம் நிலவாகைச் சூரணம் வகைக்கு விராகனிடை.50 முத்தக் காசு சூரணம் விராகனிடை.௧, திரிகடுகு திரிபலை கண்ட திப்பிலி இந்துப்பு ஓமம் கடுகுரோகணி வாய் விளங்கம், அதிவிடையம் மாசிக்காய் இவை வகைக்கு சூரணம் களஞ்சி ஒன்றாய் கலந்து ஒரு படி சித்தா மணக்கு எண்ணெயில் ஐந்து பலம் சீனி சர்க்கரை போட்டுக் காய்ச்சிக் கரைந்த பின் கீழே இறக்கி அதில் சூரணத்தைத் தூவிக் கிண்டி ஒரு கொட்டைப் பாக்களவு பத்தியமாய்ச் சாப்பிட்டு வர வாய்வு வயிற்று வலி வாதம் குன்மம், அக்கினி மந்தம், கிருமி பாண்டு தலை மயிர், உதிர்தல் பித்தம், அரோசியம், கிறிச்சனம், ஆனந்த வாய்வு, அண்ட வாய்வு, மகோதரம், சூலை வாதம், கட்டு குதிகால் முதல் விரல் சொர்த்தை தேகத்தில் வலி கார்ப்பு எரிவு தீரும்.

<u>வாய்வு சூலை புண்கழுக்கு:-</u>

எட்டு படி ஆற்றுத் தண்ணீர் ஒரு படியாக வற்ற வைத்து அதில் ஒரு படி பொடுதலைச் சாறு நாலு முற்றின தேங்காய் பூவும் போட்டுக் காய்ச்சி நெய்யில் வடித்து ஒரு காசிடை வீதம் அந்தி சந்தி சாப்பிட்டு வர சூலை மேல் வாய்வு உள்நாக்கு அரி கிரந்தி பல்லீறை யரித்துத் தின்னுகிறது நாவரிப் புண் தீரும். பொறுக்க முடியாத வேதனையும் காணும்.

<u>இருக்கு மருந்து:-</u>

அகத்தியர் குழம்பைத் துணியில் தடவித் திரித்து வேப்பெண்ணெயில் தோய்த்துத் தீயிற் கொளுத்தி ஆத்தி நாசியில் புகை பிடிக்கவும்.

வேப்பைச் சாறு.௧௧, ஆவி நெய் நல்லெண்ணெ வகைக்கு படி.½ ஒன்றாய் கலந்து காய்ச்சி வடித்து சிறசில் வாரத்தில் இரண்டு தரம் தலை முழுக வலி தீரும்.

<u>மதன காமேசுவர நெய்:-</u>

திரிகடுகு, சிறுநாகப்பூ, பத்திரி, வால்மிளகு, சீரகம், தக்கோலம் வகைக்கு கழஞ்சி.4, கோறக்கர் மூலி அபினி வகைக்கு கழஞ்சி.5, இவைகளை ஆவின் பாலில் அரைத்து முக்கால் படி நெய்யில் வேக வைத்து நெய்யை வடித்து ஒரு கரண்டி சாப்பிட்டு புளி தள்ளி பாலும் அன்னமும் சாப்பிட்டு வந்தால் இந்திரியம் கலக்காது.

<u>பன்ளைக்கு கழிச்சல் இருமல் வாந்திக்கு:-</u>

வெள்ளைப் பருத்திச் சாறு யெரண்ட எண்ணெ வகைக்கு படி.¼, கருஞ் சீரகம் கழஞ்சி.௧, ஒன்றாய்ப் போட்டுக் கலந்து காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

<u>சுளுக்கு யடைப்புக்கு:-</u>

முற்றின கோழிக் கல்லில் சிறு கல்லும் வெள்ளரி விரையும் நாகமும் வெல்லமும் வகைக்கு கொட்டைப் பாக்கு அளவு அரைத்து ஆவின் பாலில் கலக்கி.6 நாள் கொடுக்கத் தீரும்.

<u>பீதாம்பரக் குளிகை:-</u>

என்னவே பீதாம்பர குளிகை யொன்று யெழிலாக மானிடர்க்கு புட்டுகின்றேன்
பன்னவே சாதிக்காய் அபினி கஞ்சா பரிவான (மேஷத்து பெருவம்) சொ
சொன்னதொரு பூனைக் காலி அக்காரம் ஏமம் கூடியான பற்படகம் சிறு
காஞ்சொறி
நன்னயமா முருங்கைப் பூச் சாற்றிலே நலமுடன் ஆறு சாமம் ஆட்டு ஆட்டே.

ஆட்டியே குளிகை போலுருட்டியே தான் அழகாகப் பசும் பாலில் ரேசித்தே தான்
கூட்டியே கதலியுட ரசமுந் தானும் குணமான யிருவேலி கொண்டாயானால்
மூட்டி விடு கோபாக்கினி யதிகமாகி முக்கியமுள்ள மனமதந்தான்.

சகல வாய்வுக்கு:-

இரண்டு படி ஆவின் பாலில் எட்டு பலம் பனைவெல்லம் போட்டு பாகு செய்து அதில் திரிகடுகு ஏலம், சீரகம் வகைக்கு பலம்.க, வெதுப்பி பொடித்துப் போட்டுக் கிண்டி தேன் நெய் வகைக்கு பலம்.½ விட்டு லேகியம் செய்து கொண்டு நாள் ஒன்றுக்கு கொட்டைப் பாக்குப் பிரமாணம் கொள்ளத் தீரும்.

****

முற்றும்

சு.ச.13.11.63. ***********

Verified & compared
20/2/64